www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka JUDE பக்கம் 20
දිනමුරසු වාරමලර් மார்ச்.16–22,1997 ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 196

## மேற்குலகில் புலிகள் நாடும் இரகசிய உதவி!

எக்ஸ்ரே ரிப்போர்ட்



சங்கீதா சரணம்

தம்பதிகள் காதலிக்கலாம் வித்தியாச அட்வைஸ்

இனிய தொடர்

## கனவு மெய்ப்பட வேண்டும்



படிப்பகம

www.padippakam.com

# முரசம்

## தன்வினை தன்னைச்சுடும்!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

குட்டித் தேர்தல் திருவிழாவில்
நடைபெற்று வருகின்ற
அரசியல் வன்முறைகளை
தினசரிகள் பதிவு செய்துவருகின்றன.

தினமும் எங்காவது ஓரிடத்தில்
அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள்
மோதிக் கொள்கிறார்கள்
என்பதை செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல்வாதிகளிடம்
ஆயுதம் களையும் நடவடிக்கையும்
ஆங்காங்கே நடைபெறுகிறது.

ஜனநாயக அரசியலின்
நாகரிக வரம்புகள்
என்று கருதப்பட்ட
மாற்றுக் கருத்துக்களுக்கு
மதிப்பளிக்கும் போக்கு
மெல்லச் செத்துக்கொண்டிருக்கிறது!

கருத்துச் சுதந்திரம் பற்றிய
வாய்நிறைவான பேச்சுக்கள்
ஏட்டுச் சுரக்காய்
என்னுமளவுக்குத்தான் உள்ளன!

அரசியல் பிரச்சனைகளுக்கு
அரசியல் ரீதியாக முகம்கொடுக்காமல்
ஆயுதரீதியாக தீர்வுகாணும் போக்கு
முனைப்படைந்து வருகிறது!

இனப்பிரச்சனைக்கு
அரசியல் தீர்வைக் காணாமல்
ஆயுதரீதியில் தீர்வைக் காணும்
அபாயகரமான அணுகுமுறையை
ஆரம்பித்து வைத்தவர்கள் யார்?

அக் கேள்விக்கு
வரலாறு சொல்லும் பதில்-
தென்னிலங்கை ஆட்சியாளர்கள்
என்பதுதான்!

துப்பாக்கியை
எல்லாவற்றுக்கும் தீர்வாக-
எல்லா நோய்க்கும்
சர்வரோக நிவாரணியாக-
துரிதமாக தீர்வுகாணும் கருவியாக
அறிமுகம் செய்தவர்கள்
ஆட்சியாளர்கள்தான்!

"அடக்குவோர்
ஆயுதங்களை அறிமுகம் செய்வர்:
அடக்கப்படுவோரும்
தவிர்க்கமுடியாமல்
அந்த ஆயுதங்களோடு பரிச்சயமாவர்!"
உலக வரலாறு
உரைக்கும் பாடம் அதுதான்!

வடக்கு-கிழக்கில்
மிதித்தால் புல்லும் சாகாது
என்னுமளவுக்கு அமைதியாக
வாழ்ந்த மக்களின் சந்ததி
ஆயுதம் ஏந்த ஆரம்பித்தமை
விருப்பத்தால் அல்ல- நிர்ப்பந்தத்தால்!

முன்னாள் ஜனாதிபதி பிரேமா முதல்
இந்நாள் ஜனாதிபதி
சந்திரிக்கா வரையும்
அந்த உண்மையை
தம்வாயால் அங்கீகரித்துள்ளனர்.

கிணறு வெட்டப்
பூதம் புறப்பட்ட கதையாக
வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு
ஆயுதங்களை நம்பிய
தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு
அதே ஆயுதங்கள்தான்
அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

'தன்வினை தன்னைச் சுடும்'
என்பதுபோல-
ஆயுதங்களை நம்பி ஆட்சி நடத்திய
ஐ.தே.கட்சிக்கு
ஆயுதங்கள்தான் சவாலாக
மாறியிருக்கின்றன!

இரத்தினபுரியில்
கேட்ட வேட்டொலிகள்
மினித் தேர்தலில்
அக் கட்சியை
ஆட்டம் காண வைத்துள்ளன!

ஐ.தே.கட்சியை குறிப்பிடுவதால்
பொதுஜன முன்னணியினர்
வன்முறைகளில்
ஈடுபடவில்லை என்று அர்த்தமாகாது!

தென்னிலங்கை அரசியல்வாதிகள்
ஒருவருக்கொருவர்
சந்தேகப்பட ஆரம்பித்துள்ளனர்.
ஒருவரை ஒருவர்
கொலைகாரர் என்று
குற்றம் சாட்டி வருகின்றனர்!

இனப்பிரச்சனைக்கு மட்டுமல்ல,
தங்கள் மத்தியில் உள்ள
அரசியல் பிரச்சனைகளுக்கும்
அரசியல் ரீதியாக தீர்வுகாணும்
பக்குவமும், பரஸ்பர புரிந்துணர்வும்
தென்னிலங்கை அரசியலில்
மங்கி மறையத் தொடங்கியுள்ளன!

இவ்வாறான நிலையானது
எதிர்காலத்தில்
தேசியப் பிரச்சனைகளில்
இங்குள்ள அரசியல் கட்சிகள்
நேர்மையான கருத்தொருமிப்பை
எட்டமுடியாது என்கின்ற
அபாய அறிவிப்பாகவும் உள்ளது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## கண்ணீரா? கவலையா?

எம்மைக் குற்றப்படுத்தி, குறைகண்டு, கண்ணீர் சிந்த வைக்கவேண்டும் என்ற மக்களின் மத்தியில் வாழ்ந்து, கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் உள்ளங்கள் பாரில் கோடி! இதினிமித்தம் எங்காவது ஓடி ஒளிந்து கொள்ளலாமா? அல்லது எம்மையே மாய்த்துக் கொள்ளலாமா? என்று எண்ணிக் கொண்டிருக்கும் மக்கள் ஏராளம். நாம் ஒன்றை மறந்து விடுகின்றோம். எம் கண்ணீரைத் துடைக்கும் கரம் நமக்குண்டு நமது கவலையை சந்தோஷமாக மாற்றக்கூடிய ஒருவர் இருக்கிறார்.

"கர்த்தருடைய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்."- ஏசாயா 25:8

வெளிச் சொல்ல முடியாத துக்கத்தாலும், நிந்தையினாலும் அவமானத்தாலும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரின் கண்ணீரையும் துடைத்து மகிழ்ச்சியான காலங்களை கட்டளையிடுவார்.

"ஆகாரின் கண்ணீரைக் கண்டவர், மலடியான அன்னாளின் கண்ணீரைத் துடைத்தவர், நம் ஒவ்வொருவரின் கண்ணீரையும் துடைக்க வல்லவராய் இருக்கிறார். -ஏசா 38:5ல் "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்" என எசேக்கியா இராஜாவின் கண்ணீரைத் துடைத்தவர் எம் ஒவ்வொருவரின் கண்ணீரையும் துடைப்பார்.

நாமும் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவோம்.

ஜே.புனோரன்ஸ், கெங்கல்ல.

## ஆன்மீகம்



## தொழுகை மனிதனைத் தூய்மைப் படுத்தும் சாதனம்

இறைவன், தன்னை வணங்குவதற்காகவே மனிதரையும் ஜின்வர்க்கத்தையும் படைத்துள்ளதாக திருமறையில் கூறியுள்ளான். வணக்கம் என்னும் போது அது இறைவனுக்குக் கீழ்படிதலையே குறிக்கின்றது.

தொழுகையானது, இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தெய்வீகத் தன்மை பொருந்திய வணக்கமாகும். இது இம்மை, மறுமை சகலதிலும் பயன் தரக்கூடியது. இதனைக் குறித்து அல்லாஹ் தனது திருமறையில் (நபியே), "வேதத்திலிருந்தும் உமக்கு அளிக்கப்பட்டதை நீர் ஓதுவீராக. இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக. நிச்சயமாக தொழுகை மானக்கேடானவைகளையும், வெறுக்கத்தக்கவைகளையும் விலக்கும்." (அல்-குர்ஆன்) எனக் கூறியுள்ளான்.

இக் கூற்றிலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சகல முஸ்லிம்களும் ஈருலகப்பயன்களைப் பெற வேண்டுமானால் அந்தர சுத்தியுடனும், பயபக்தியுடனும் தொழ வேண்டும் என்பது புலனாகின்றது.

பர்ளான ஐவேளைத் தொழுகையை எவர் தொழாமல் இருக்கின்றாரோ அவருக்கு இஸ்லாத்தில் எவ்விதப்பங்கும் கிடையாது. (ஹதீஸ்) என முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அமுதவாக்காகும்.

முஹம்மது இஸ்மாயில் யா;கூப், நற்பிட்டிமுனை-03.

## கவிதைப் போட்டி இல.193

### பரிசுக்குரிய கவிதை

### பிள்ளைகளே!

தரையெங்கும் மிதிவெடிகள்
முளைக்கின்ற காலமிது!
ஆடியோடும் விளையாட்டு
கை, காலை ஊனமாக்கும்!
பார்த் தோடும் பிள்ளைகளே!
பல வெடிகள் மறைந்திருக்கும்!

டி. சுதர்ஷினி- எஸ்.சி.சி.பாடசாலை, மட்டக்களப்பு.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:



**காடுநோக்கி**

ஒழிப்பதற்கும் இடமில்லை;
ஒதுங்க இங்கு வழியில்லை;
கண்டபடி சுடுகிறார்கள்
காடுதேடி ஓடுகிறோம்!

அம்பிளாந்துறையூர் அரியரன்.

**துணிவைத்தந்திடு!**

கடலலையே கொஞ்சம் கேளு!
கண்ணீரில் வாழ்வைப் பாரு!
அள்ளி வைத்த ஆசையெல்லாம்.
அகதியாக போனதனால்...
அகத்தினிலே அழிந்தது!
துள்ளி வந்த பருவமதில்
துவண்டு போன கால்களிற்கு-
துணிவதனை அளித்திடு!

தெ. ரஞ்சனா- வவுனியா.

**கப்பல் வந்தாச்சு!**

கப்பல் இங்கு வந்தாச்சு;
உணவு கொண்டு வந்தாச்சு;
தங்கையம்மா ஓடம்மா...!
அப்பாடா! கவலை போயாச்சு;
ஆனந்தம் கொண்டு நாளாச்சு!

பூநோனா பஹ்மிதா வாஹிட்-பதுளை.

**உடலை விட்டு.....**

போர்ப் புயலில் சிக்கிய நாம்
போகுமிடம் தெரியவில்லை;
இடை நடுவில் எங்கள் உயிர்,
எக்கணமும் போய்விடலாம்...!

ஏ.எஸ். மரைக்கார்- மதீனா ஏ.
மண்டலக்குடா, கல்பிட்டி.

**அன்றும்! இன்றும்!**

திரைகடல் ஓடித்
திரவியந் தேடியது
அந்தக் காலம்!
சுடுமணல் ஓடி
அபயந் தேடுவது
இந்தக் காலம்!

ந. ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

**ஓட்டம்**

மனிதன்
முன்நோக்கி...
மனிதம்
பின்நோக்கி!


எஸ். பிரபா-பதுளை.

**ஓடச் சுடு!**

ஓடுமுன் சுடுவது பந்தயமானால்,
ஓடவிட்டுச் சுடுவது பயங்கரம்தானே?

ஏ. முஹம்மது முஸ்அப்ரஸீன்.
நிந்தவூர்-03.

## கவிதைப் போட்டி இல.196



**தேடல்**

திரை கடல் நாம் ஓடுவது
திரவியம் தேடவல்ல;
அயல் நாடு செல்ல வந்து
அகாலமாய் உயிர்விட்டு
கரை ஒதுங்கும் உடல்களை
கண்டெடுக்க ஓடுகிறோம்!

சி.மு. சுந்தரேசன்- மஸ்கெலியா.

**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 22.03.1997

முகவரி:
கவிதைப் போட்டி இல.196
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

## வாசக(ர்) சாலை

இரண்டாம் பக்கத்தினை இனிமைப்படுத்திய 'கவிதைப்போட்டி'க்கான, களிப்பூட்டிய 'காட்சிப்படம்' அட்டகாசம்! 'சினிமாஸ்கோப்' வடிவில் வடிவாய் வசீகரித்து, நம் சிந்தை கவர்ந்த (பழப்) 'படம்' தந்த அன்பு முரசுக்கு நேசநன்றியோடு பிரிய பாராட்டுக்கள். கூடவே, 'தொடர் ரசிகர்'கட்கு மீண்டும் மகிழ்ச்சி தரும் 'புதிய தொடரு'க்கும் நன்றிகளோடு இனிய வரவேற்புக்கள்!

கோட்டைமுனை- முத்துமணி, பதுளை.

வடபகுதியில் இந்திய அமைதிப்படை இழைத்த கொடுமைகளை தரும் 'அல்பிரட் துரைப்பா முதல் காமினி வரை' தொடரில் கிழக்கிலும் அமைதிப்படை இழைத்த கொடுமைகளை மறக்காமல் வெளியிட வேண்டும்.

பே.கிறிஸ்ரி அன்ரனி, கொழும்பு-06.

அன்பிற்கினிய முரசே!

சிந்தியாவின் பதில்கள், சிறுகதைகள், அற்புதனின் அரசியல் தொடர் சூப்பர். அதிலும் தேன் கிண்ணம், வெரி சூப்பர். இத்தனை அம்சங்களையும் சுமந்து வந்து எங்களது தாகத்தைத் தீர்க்கின்றாய். முரசே! உன் பணி மேலும் மேலும் தொடர என் வாழ்த்துக்கள்.

அ.லோஜி, கோட்டைக்கல்லாறு-1.

உயிரில் கலந்த தினமுரசே! நான் இலங்கையில் இருக்கும் போதும் என்னை மகிழ்வித்தாய். தற்போது நான் குவைத் வந்து விட்டேன். ஆனாலும் நீ இங்கு வந்து வாரா வாரம் மகிழ்விக்கத் தவறவில்லை. உன்னில் அடங்கும் அம்சங்கள் யாவும் மிக மிக அருமை.

உன்னைக் கையில் ஏந்தியவுடன் முதலில் பார்ப்பது பூலானின் கதைதான். என்றும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள் பல....

எஸ்.கலா, (இரத்தினபுரி), குவைத்.

இனிய முரசுக்கு!,

யாழ் நகரில் இந்தியப் படையணிகள் நடாத்திய, படுகொலைகளையும், அடாவடித்தனங்களையும், வாசித்தபோது, அவை கண்ணெதிரில் நடந்தவைபோலிருந்தது.

எஸ்.கே.புவியந்திரன், திருப்பழுகாமம்-2.

என் இனிய முரசே!

நான் இவ்வளவு காலமும் வடபகுதியில் இருந்தகாரணத்தால் நீ எமக்குக் கிடைக்கவில்லை. இப்பொழுது இங்குவந்து உன்னைப் படிக்கக் கூடியதாக உள்ளது. வடபகுதியில் எப்படி தடை இருந்தாலும் என்னைப் போல உன்னில் பிரியமுள்ள சிலர் கொண்டு வந்துவிடுவார்கள். அது உனக்குக்கிடைக்கும் தனி மரியாதை.

கார்த்திகேசு விமலகாந்தன், கொழும்பு-6.

வாரத்தில் ஒரு நாள் வலம் வந்து என் இதயத்தில் இடம் பிடித்த அபிமான தின முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் மிக இனிமையானவை.

அன்புடன் ஆசிரியர் எழுதும் முரசம், மற்றும் அற்புதனின் 'அரசியல் தொடர்' ரசிகனின் 'இலக்கிய நயம்' முதலியவை மிக மிக என் மனதிற்குப் பிடித்தவை. முரசே! உனது பணி தொடர எனது இனிய வாழ்த்துக்கள்.

க.இரத்தினேஸ்வரன்,
டோகா, கத்தார்.

அன்பின் முரசே! வாரத்தில் ஒருநாள் உன்னைப் பார்க்கத் தவறினால் தவியாய் தவிக்கும் நெஞ்சங்களில் நானும் ஒருத்தி. நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். சிந்தியாவின் பதில்கள் இனிமையாகவும் படுஜோராகவும் இருக்கின்றன. மென் மேலும் தொடரட்டும் உன் பணி. எனது வாழ்த்துக்கள்.

செல்வி மா. ஜெயந்தி,
அன்புவழிபுரம்.



உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக நம் நாட்டில் முன்கூட்டியே ஆருடம் சொன்ன ஒரேயொரு பத்திரிகை 'முரசு'தான். முரசின் ஆருடம் பொய்யாகிவிடக்கூடாது என்பதே என் விருப்பம். அதற்காகவே தேர்தல் முடிவுகளை அறிய ஆவலாய் உள்ளேன்.

ஜே.என்.ஜோக்கிம், நீர்கொழும்பு.

**யார் வென்றால் நமக்கென்ன நாரதரே!**

குட்டித் தேர்தல் திருவிழாவில் பொதுஜன முன்னணிக்குத்தான் வெற்றிக்கனி என்று முரசு சொன்ன நேரமோ என்னவோ, இரத்தினபுரியில் 'நாவலந்த எல்லாவெல' பலியானார். அதுவும் முன்னணியினருக்கு வாய்ப்பாகிவிட்டது. நாரதர் நாக்கு கரிநாக்கு. யார் வென்றால் நமக்கென்ன என்று இருப்பதை விட்டு கணிப்புச் சொல்கிறீரே, நாரதரே! உமக்கெதற்கு இந்த வேலை?

எஸ்.திருமாவளவன், வவுனியா.

பூலான்தேவியின் புதிய பரிமாணம் அசத்தலோ அசத்தல். பூலானின் எழுச்சியைப் படிப்படியாக விபரித்து, பூலான் செயல்களிற்கு நியாயத்தை வழங்கி வாசகர்களை தயார் படுத்திவிட்டார் ரசிகன். இனிவரும் அத்தியாயங்கள் சூடுகிளப்புமாக்கும்!

என்.ஆர்.சுபைர்கான், புத்தளம்.

**மறுபடி பூலான்**

பூலான் தொடர் வாரா வாரம் புதுமெருகுடன் கலக்கல் நடத்துகிறது. முரசில் பூலான் தொடர் வரும் ராசிதான் மறுபடியும் பூலானின் பெயர் தலைப்புச் செய்தியாக அடிபடுகிறதோ?! கார்லோஸ் தொடர் முரசில் வந்தபோதும் கார்லோஸ் சிறையில் இருப்பது தொடர்பான சர்ச்சைகள் கிளம்பியமை நினைவுக்கு வருகிறது. முரசின் ராசியே தனிதான்!

கே.நிஷாந்தன்-கண்டி.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* பாத்திமா ரிப்கா பாரிஸ், நுவரலியா.
* றிஸ்மியா கலீல், வவுனியா.
* ஆ.சசிகரன், திருமலை.
* பூபாலபிள்ளை லிங்கன், அன்னமலை.
* ஏ.முனாஃப் எம்.இம்ரான், கொட்டராமுல்லை.
* சுபாஷினி கமலப்பா, மட்டக்களப்பு.
* மீர்.எம்.ஏ.ஸமத், கே.எம்.தௌபீக், மருதமுனை-01.
* ஆர்.ராஜகலா, பசறை
* சி.ஸ்ரீரவி, இரத்தினபுரி.
* ப.ஜெயப்பிரகாஷ், கண்டி.
* எஸ்.யுவராணி, பிட்டகந்தை.
* எஸ்.கே.தாஸ், ஆரையம்பதி-02.
* கோ.சிறிதரன், பொத்துவில்-03.
* ஜெசீர் றிலேபா, அக்கரைப்பற்று-06.
* என்.நவரஞ்சன், மண்டூர்.
* ஆர்.குலசேகரம், கிண்ணியா-01.
* அ.பரமேஸ்வரன், கொழும்பு-13.
* எம்.எஸ்.பஸ்மியா, கொட்டராமுல்லை.
* ஆ.ஜெகதீஸ்வரன், புசல்லாவ.
* அமீர்டீன். கே. முகமட், திருக்கோணமலை.
* ஜே.ரவீந்திரன், ஃபிரான்ஸ்.
* எம்.லோகநாதன், சவுதிஅரேபியா.
* என்.எம்.இர்பான், கிளிவெட்டி.
* எல்.ரகுமான், பதுளை.
* வி.சிவகுமார், அவுஸ்திரேலியா.
* ஏ.பாலேந்திரா, இலண்டன்.
* எம்.கனகராஜா, மட்டக்களப்பு.
* ஏ.செபஸ்தியன், உக்குவலை.
* ஜி.யோகராணி, இரத்தினபுரி.
* ஏ.முபாரக் அலி, கிண்ணியா-06.
* ச.காங்கேயன், ஈச்சிலம்பற்று.
* த.ரவிக்குமார், ஆரையம்பதி-01.
* ப.இளமுருகன், உடப்பு-05.
* ஏ.சி.எம்.மசூர், பலாங்கொடை.
* ஜி.யயந்தசீலன், பெரிய நீலாவணை-02.
* ச.கணேசதாஸ், ஆரையம்பதி.
* இ.வளர்மதி, கண்டி.
* கா. நாகேஸ்வரன், நுவரெலியா.



படிப்பகம்

www.padippakam.com

# “ஆளும் தரப்பின் தேர்தல் வெற்றிக்கு பேரிடி!”

## கிழக்குத் தாக்குதல் குறித்து புலிகள் தெரிவிப்பு!

‘உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கும் போது புலிகள் பாரிய தாக்குதல்களில் ஈடுபடுவர். ஆளும் தரப்பின் பாரிய வெற்றியை பிரபாகரன் விரும்பமாட்டார்’ என்று முரசு முன்னரே தெரிவித்திருந்தது நினைவிருக்கலாம்.

அதனை எதிர்பார்த்தும், உள்ளூராட்சித் தேர்தல் வெற்றிக்கு வலு தேடவும் ‘ஒப்பரேசன் எடிபலவை’ படையினர் மேற்கொண்டனர். அதனை ‘ஒப்பரேஷன் எலக்ஷன் றூட்’ என்று முரசு விமர்ச்சித்திருந்ததும் தெரிந்ததே.

வவுணதீவு, சீனக்குடா இருமுனைத் தாக்குதலின் பின்னர் புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தமது நோக்கத்தை மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளனர்.

### பாரிய தாக்குதல்

புலிகள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

“புலுக்குணாவ அதிரடிப்படை முகாம் அழிக்கப்பட்ட பின்னர் கிழக்குப் போர்முனையில் புலிகள் ஏற்படுத்தியுள்ள அதிர்ச்சி இதுவாகும். மட்டக்களப்பில் புலிகள் இராணுவத்திற்கு ஏற்படுத்திய மிகப் பெரிய உயிரிழப்பும் இதுவேயாகும்.

ஆனையிறவு படைத் தளத்தை பாதுகாக்க கிளிநொச்சிப் படை முகாமை அமைத்தது போல, மட்டக்களப்பு நகரில் உள்ள படையினரை பாதுகாப்பதற்காக வவுணதீவு இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. அங்கு 300 படையினர் இருந்தனர் என்று அறியப்படுகிறது.

மிகவும் நுட்பமாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலே மட்டக்களப்பில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பாரிய தாக்குதலாகும்.

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதைக் குறியாகக் கொண்டு எடிபல நடவடிக்கையை அரசு ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து “இந்த ஆண்டுக்குள் போரை முடித்துவிடுவோம்” என்றும் தேர்தல் பிரசாரத்தில் கூறிவருகிறது.

அவ்வாறான பிரசாரத்தில் ஈடுபடும் பொதுஜன முன்னணிக்கு சீனக்குடா தாக்குதலும், வவுணதீவு தாக்குதலும் பேரிடியாக அமைந்துள்ளன. ஏற்கனவே குறைந்துள்ள மக்கள் ஆதரவை புலிகளின் தாக்குதல்கள் மேலும் குறைத்துள்ளன.” என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

### பேரிடி விழுந்தது

புலிகளின் தினசரியான ‘ஈழநாதம்’ எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

“சீனக்குடாவிலும் வவுணதீவிலும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் இராணுவத்தின்மீது மட்டுமல்ல, சிறீலங்கா அரசுமீதும் பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தி உள்ளன.

குறிப்பாக எதிர்வரும் 21ம் திகதி உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சி பெற்றிருந்த அனுகூலங்களில் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற வடக்கு- கிழக்கு போர் வெற்றி மாயை தனக்குக் கைகொடுக்கும் என்று சந்திரிக்கா நம்பினார். எடிபல இராணுவ நடவடிக்கையையும் அவர் தொடங்கினார்.

போரில் வெற்றி என்னும் ஆளும் கட்சியின் தேர்தல் பிரசாரத்துக்கு சீனக்குடா, வவுணதீவு தாக்குதல்கள் மூலம் பலத்த அடி கொடுக்கப்பட்டுள்ளது,” என்று 10.03.97ல் வெளியான ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ‘மூலதனத்திற்கு பாதிப்பு’ என்ற தலைப்பில் அத் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது.

### பாதிக்குமா?

முரசின் கணிப்புப்படி பார்த்தால், வடக்கு-கிழக்கு போர் முனையில் புலிகளின் தாக்குதல்கள் ஆளும் தரப்புக்கு தேர்தலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது என்றே தெரிகிறது.

ஏனெனில் இரத்தினபுரியில் ஆளும் கட்சி எம்.பி. படுகொலையானதும், ஐ.தே. கட்சி தலைமை பலவீனமாகியிருப்பதும் பொதுஜன முன்னணிக்குக் கிடைத்துள்ள சாதகங்களாகும்.

தேர்தல் பிரசாரத்திற்கு அரச கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்களையும் பொதுஜன முன்னணி திறம்படப் பயன்படுத்தி வருகிறது.

‘ஒப்பரேஷன் எடிபல’வை பிரதானமாக சித்தரித்த வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வவுணதீவு, சீனக்குடா தாக்குதல் தொடர்பாக முக்கியத்துவமற்ற சம்பவங்கள் போலவே செய்தி வெளியிட்டன. புலிகள் தரப்பு இழப்பையும் வெகு அதிகமாகச் சித்தரித்திருந்தன.

தேர்தல் நெருங்கும்போது புலிகள் மற்றொரு பாரிய நடவடிக்கையில் ஈடுபடலாம் என்ற எதிர்பார்ப்பும் நிலவுகிறது. அதனால் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளலாமா என்று படை வட்டாரங்களும் யோசித்து வருகின்றன. புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் **விமானத்** தாக்குதல் பரவலாக நடத்தும் சாத்தியமும் இருக்கிறது.

## திலகர் பாரிஸ் திரும்பினார்

## சர்வதேச அனுதாபத்தைத் திரட்டுவார்

(நமது அரசியல் நிருபர்)

பாரிஸில் இருந்து வர்த்தகக் கப்பல் ஒன்றில் வந்திருந்த புலிகளின் பாரிஸ் பிரமுகர் லோரன்ஸ் திலகர் திரும்பிச் சென்றுவிட்டார்.

கிழக்கில் புலிகள் இருமுனைத் தாக்குதல் ஈடுபட்டிருந்தவேளையில் புலிகளின் அதிவேக விசைப்படகு மூலம் இலங்கைக் கடற்பரப்பைத் தாண்டி அவர் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்றில் சர்வதேச கடல் எல்லையில் வைத்து ஏற்றி விடப்பட்டார், என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசுடன் உடனடியாக பேச்சு நடத்துவது புலிகளின் விருப்பமல்ல. அதேசமயம் தம்மை பேச்சுக்கு எதிரானவர்களாக அரசாங்கம் பிரசாரம் செய்வதை முறியடிப்பதுதான் புலிகளின் முக்கிய நோக்கம் என்று தெரிகிறது.

மேற்குலக நாடுகள் மத்தியஸ்தத்தில் ஈடுபட விருப்பம் தெரிவித்துள்ளன. இலங்கை அரசு தமது மத்தியஸ்தத்துக்கோ, சமாதான பேச்சுக்கோ முன்வராவிட்டால், அல்லது அப்படி முன்வந்து நியாயமாக நடந்து கொள்ளாவிட்டால் புலிகளுக்கு இரகசிய உதவிகள் செய்வதாக மேற்குலக நாடு ஒன்று தெரிவித்துள்ளது.

எனவே- அரசாங்கம் மத்தியஸ்தப் பேச்சுக்குத் தயாரில்லாத சூழ்நிலையை ஏற்படுத்தி, குறிப்பிட்ட மேற்குலக நாட்டின் இரகசிய உதவியைப் பெறுவதையே பிரபாகரன் விரும்புகிறார் என்று தெரிகிறது. அதற்கேற்ற இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு லோரன்ஸ் திலகரிடம் உத்தரவிட்டுள்ளார் பிரபாகரன் என்றும் தெரியவந்துள்ளது.

மேற்குலகில் முன்பிருந்த அனுதாபத்தை மீண்டும் கட்டியெழுப்புவது, இலங்கை அரசு இராணுத்தீர்வில் அக்கறையாக இருப்பதை வெளிப்படுத்தி மேற்குலக உதவிபெறுவது என்பவை தொடர்பாக லோரன்ஸ் திலகருடன் பிரபாகரன் கலந்தாலோசனை நடத்தியதாகவும், சில முக்கிய முடிவுகளுடன் லோரன்ஸ் திரும்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புலிகளின் பிரமுகர் தமிழ்ச்செல்வன் வெளிநாடு சென்றுள்ளதாக சில செய்திகள் வெளியாகி இருந்தன. அவை தவறான செய்திகளாகும். யாழ் குடாநாட்டில் புலிகள் இயக்க நடவடிக்கைகளை தற்போது தமிழ்ச் செல்வனே நெறிப்படுத்தி வருகிறார்.

## கைப்பற்றிய ஆயுதப் பட்டியல்

## 91 புலிகள் மோதலில் பலி

வவுணதீவு இராணுவ முகாம் தாக்குதலில் புலிகள் தரப்பில் 84 பேர் பலியாகினர். 140 பேர்வரை காயமடைந்தனர்.

கரும்புலி ‘விநோதன்’ நினைவாகவே வவுணதீவு முகாம் தாக்குதல் நடத்தப்பட்டது.

‘விநோதன்’ படையணித் தலைவர் லெப்டினன்ட் கேணல் பாலேந்திரா, மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட நிதிப்பொறுப்பாளர் மேஜர் மணிமாறன், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மகளிர் அணித் தளபதி மதனா உட்பட 84 பேர் பலியாகினர்.

காயமடைந்த உறுப்பினர்களில் 7 பேர் 08.03.97 அன்று மரணமாகினர். அவர்களுடன் சேர்ந்து முகாம் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 91 ஆக உயர்ந்துள்ளது.

வவுணதீவு இராணுவ முகாமில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்: கலிபர் 50 ரக துப்பாக்கி-01, பி.கே.எல்.எம்.ஜி-02, ஏ.கே.எல்.எம்.ஜி-10, ஆர்.பி.ஜி-04, 40 எம்.எம்.மோட்டார்கள்-02, 60 எம்.எம்.மோட்டார்கள்-02, ரி.56-2ரக துப்பாக்கிகள்-35, ரி. 56-1 ரக துப்பாக்கிகள்-03, ரி. 56 பட்மோடல்-05, 50 கலிபர் தொலைநோக்கி-01, 50 கலிபர் ரவைகள்-1000, 50 கலிபருக்கான லிங்குடன் ரவைகள்-540, பி.கே.எல்.எம்.ஜி ரவைகள்-8060, நடுத்தர ரவைகள்-20400, தொலைநோக்கிகள்-05, ஆர்.பி.ஜி. ஷெல்-15, 50 கலிபர் மேலதிக சுடுகுழல்-01, 60 எம்.எம்.ஷெல்கள்-11, ஏ.ரக மகசீன் -130 என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

முகாமில் உள்ள ஆயுதங்கள் அனைத்தும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டதாக சில செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் முகாமிலிருந்த ஆயுதக் களஞ்சியம் திறக்கப்படவில்லை. உணவுக் களஞ்சியமும் தாக்கப்படாமல் இருந்தது.

6.3.97 பிற்பகல் 2 மணியளவில் முகாமை சென்றடைந்தனர் படையினர். முகாமில் கிடந்த புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் உடலையும், குண்டுத்தாக்குதலால் அழிக்கப்பட்ட உழவு இயந்திரத்தையும் படையினர் கண்டனர். புலிகளால் கொண்டுவரப்பட்ட அந்த உழவு இயந்திரம் வந்தாறு மூலையைச் சேர்ந்த ஒருவருடையது.

முகாம் பகுதியில் சிதறிக் கிடந்த 35 துப்பாக்கிகளையும் படையினர் கண்டெடுத்தனர். படையினர் தப்பிச் செல்லும்போது கைவிட்டுச் சென்ற, புலிகளின் கண்ணில் படாமல் தப்பிய ஆயுதங்களே அவையாகும்.

முகாமை மீட்கச் சென்ற படையினருடன் ரெலோ உறுப்பினர்களும் இணைந்து சென்றனர்.

வவுணதீவு முகாம் மட்டக்களப்பு நகர் பாதுகாப்புக்கும், மட்டக்களப்பு விமானத் தளப் பாதுகாப்புக்கும் அவசியம் என்பதால் மீண்டும் பலப்படுத்தப்படுகிறது. எஸ்.எஃப் என்னும் விசேட படைப்பிரிவு ஒன்று அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## இரு புலிகள் பலி

கடந்த 7.3.97 அன்று வவுணதீவு பிரதேச செயலகத்திற்கு அருகில் பதுங்கியிருந்த படையினர் தாக்கியதில் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு முன்னாள் பொறுப்பாளர் பாபு மற்றும் வவுணதீவுப் பொறுப்பாளர் ஜிம்றோன் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இப்பகுதியில் இவர்கள் நடமாடியதாகப் பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்தே பாதுகாப்புப் படையனர் அங்கு மறைந்திருந்து கண்காணித்தனர்.

இவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள், கிரனைட், எம்-16, எம்-70 ஆகிய ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

## ‘எடிபல’ இராணுவ நடவடிக்கை!

## 15 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் பாதிப்பு!

(மன்னார் நிருபர்)

வவுனியா-மன்னார் தரை மார்க்கப் பாதையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் படையினரால் ஆரம்பிக்கப்பட்ட ‘ஒப்பரேஷன் எடிபல’ நடவடிக்கையையடுத்து மன்னார் மாவட்டத்தில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் 750 ஏக்கர் நிலத்தை முற்றாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வயல்களுக்கு நீர்பாய்ச்சவும் மாடு கலைக்கவும் முடியாத நிலமாக அவை அமைந்துள்ளன.

இம்மாவட்டத்தில் வழமையாக 7500 ஏக்கர் நிலத்தில்தான் வேளாண்மை செய்யப்பட்டு வந்தது. இம்முறை இது இரட்டிப்பு மடங்காகியுள்ளது.

வவுனியா? மன்னார் வீதியில் வடக்குப்புறம் அமைந்துள்ள வயல்களுக்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை. தெற்குப் புறமாகவுள்ள வயல்களில் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு விவசாயிகளுக்குக் கூறப்பட்டுள்ளது.

இம்மாதம் முடிவதற்குள் இங்குள்ள வயல்களில் 75 சத வீதமானவை அறுவடைக்குத் தயாராகிவிடும் எனக் கூறப்படுகிறது. எனினும் அநேகமான விவசாயிகள் இன்னும் தமது வயல் நிலங்களை எட்டியும் பார்க்கவில்லை.

கட்டுக்கரைக்குளத்திலிருந்து தாராளமாகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. ஆடு, மாடு போன்ற கால் நடைகள் ஏராளமானவை வயல்களைப் பதம் பார்த்து வருகின்றன. இப்பகுதியிலிருந்தவர்களில் அநேகமானோர் இடம் பெயர்ந்துள்ளதால் அவர்களது கால் நடைகள் வீதியோரங்களில் திரிகின்றன.

புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதியில் இருபதாயிரம் பேர் வரை உள்ளதாகக் கூறப்படுகிறது. ஏனையோர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் சென்றுள்ளனர்.

## நடுநிசியில் புலிகள் வீடியோப் படம்

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் தற்சமயம் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. மக்களுடன் மக்களாகக் காணப்படும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பொலிஸாரோ, படையினரோ கண்டு கொள்ள முடியாதவாறு நடமாடுகிறார்கள்.

சில தினங்களுக்கு முன்னர் வாழைச்சேனை கண்ணகி கிராம மக்களுக்குப் புலிகள் வீடியோப் படம் காண்பித்தனர். அந்தக் கிராம மக்களை நடுநிசி ஒரு மணியளவில் வீடு வீடாகச் சென்று தட்டியெழுப்பி படம் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றனர். சமீப சில நாட்களுக்கு முன்னர் புலிகளால் நடாத்தப்பட்ட மட்டக்களப்பு-மாவடிவேம்பு படை முகாம் தாக்குதல் பற்றிய படக் காட்சியே அங்கு காண்பிக்கப்பட்டது. பொதுமக்கள் வீடியோப் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது புலிகள் அவ்விடத்தைச் சூழ்ந்து ஆயுதங்களுடன் நின்றிருந்தார்கள்.

அண்மையில் வாழைச்சேனைப்பகுதியில் பதற்றம் நிலவிய வேளையிலே இப்படக் காட்சி காண்பிக்கப்பட்டது.

## குறிதவறி வெடித்த ஷெல்கள்

## புலிகளின் ஷெல்-பொதுமக்கள் பலி

வவுணதீவு இராணுவ முகாம் 06.03.97 அன்று தாக்கப்பட்டபோது மட்டக்களப்பு விமானத் தளம் நோக்கி புலிகள் ஆட்டிலெறித் தாக்குதல் நடத்தினர். புலிகளால் ஏவப்பட்ட ஷெல்களில் 15 ஷெல்கள் விமானத்தளத்துக்கு அருகிலுள்ள திருப்பெருந்துறைக் கிராமத்தில் விழுந்து வெடித்தன. எனினும் பொதுமக்கள் பாதிக்கப்படவில்லை. பாடசாலை ஒன்று சிறு சேதத்திற்கு உள்ளானது.

கொம்மாதுறை படைமுகாம்மீது புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் குறிதவறிய சில ஷெல்கள் குடியிருப்புக்கள்மீதும் விழுந்து வெடித்தன. செங்கலடியைச் சேர்ந்த சா.சுமதீபன் (வயது10) க.மகேஸ்வரன் (வயது 54), ஜெ.சாந்தி என்னும் ஆறு மாதக் கர்ப்பிணி (வயது 32) ஆகியோர் பலியாகினர். ஆறுபேர் காயமடைந்தனர்.

படையினரின் ஷெல் வீச்சுக் காரணமாகவும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. பலியானவர்களில் ஜெயந்தினி என்னும் 2 வயதுக் குழந்தையும் ஒருவர்.

முகாம் தாக்குதலின் பின்னர் சுற்றிவளைப்புத் தேடுதல் வேட்டை தீவிரமாகியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு சென்றுவரும் பொதுமக்களும், அரச ஊழியர்களும் தமது விபரங்களைத் தெரிவிக்குமாறு படையினரால் கேட்கப்பட்டுள்ளனர். விபரங்கள் திரட்டும் நடவடிக்கையில் படையினருக்கு உதவியாக ரெலோ இயக்கத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிப்போரும், தேவை காரணமாக சென்று வருவோரும் இந்த நடவடிக்கையால் பீதியுற்றுள்ளனர்.

## எல்லைகள் மீள நிர்ணயம்

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச சபை எல்லைகள் மீளநிர்ணயம் செய்யும் அரசியல் நடவடிக்கையை அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது ஒரு திட்டமிட்ட நிலப்பறிப்புத் திட்டமாகும். முன்னர் அக்கரைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஒன்றாக இருந்த ஆலையடிவேம்பு, கருங்கொடித்தீவுப் பகுதியில் கடந்த அரசால் தனித்தனி பிரதேச செயலர் பிரிவுகளாகக் கொண்டு வரப்பட்டு நிலப் பகிர்வு செய்யப்பட்டது. இந்த எல்லை நிர்ணயத்தினாலேயே தமிழர்களின் பூர்வீக நிலங்கள் முன்னர் பறிக்கப்பட்டன எனத் தமிழர் மகா சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

தற்போது ஆலையடிவேம்பு, கருங்கொடித்தீவு ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளையும் எல்லை மீள் நிர்ணயம் செய்ய அரசு திட்டமிட்டுவருகிறது. இத்திட்டமிடப்பட்ட செயலைத் தாம் எதிர்ப்பதாக அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கப் பொதுச் செயலர் சிவசிறி சிவஞானச் செல்வ ஐயர் தெரிவித்துள்ளார். இவ்விடயத்தில் தமிழ்க் கட்சிகள் மௌனமாக இருந்துவருகின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி மறைமுகமாக ஆதரவளிப்பதாக நம்பப்படுகிறது.

## கண்டியில் வெற்றி உறுதி

### பொதுஜன முன்னணி பிரமுகர் தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் கண்டி மாநகர சபைக்கான தேர்தலே பெரும் அளவில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. கண்டி மாநகர சபையின் 125 வருடகால வரலாற்றில் ஐ.தே.கட்சியே ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது. கடந்த மாநகர சபைத் தேர்தலில் 132 வாக்குகள் வித்தியாசத்திலேயே ஐ.தே.கட்சி ஆட்சியைக் கைப்பற்றி போனஸ் சலுகையின் கீழ் ஒரு உறுப்பினரைக் கூடுதலாகப் பெற்றுத் திகழ்ந்தது.

இம்முறைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இ.தொ.காவும் மு. காங்கிரஸும் இணைந்து கொண்டதால் அதன் ஆதரவு அதிகரித்துள்ளது. இம்முறை ஆட்சியைக் கைப்பற்றி நகரின் நிருவாகத்தை எடுத்துக் காட்டாக நடாத்திக் காட்டுவோம் என கண்டி மாவட்ட எம்.பியும் பிரதி உள்நாட்டுப் பொதுநிருவாக அமைச்சருமான திரு. லக்ஷ்மன் கிரியெல்ல முரசுக்குத் தெரிவித்தார்.

கடந்த தேர்தலின்போது இ.தொ.காவின் ஆதரவு ஐ.தே.கட்சிக்கே சென்றது எனவும் தெரிவிக்கும் திரு. கிரியெல்ல ‘எமது வெற்றி இப்பொழுதே நிச்சயமாகிவிட்டது,’ என்றும் தெரிவித்தார்.

## வள்ளங்களில் மக்கள் சென்றனர்

சூரியக்கதிர் நடவடிக்கையின் காரணமாக இடம்பெயர்ந்து பூநகரிக்குத் தெற்கே பாலாவியில் தங்கியிருந்த 205 பேர் 18 வள்ளங்களிலும் 2 பிளாஸ்டிக் படகுகளிலும் யாழ்ப்பாணம் குருநகரைச் சென்றடைந்தனர்.

முழங்காவில் பகுதியில் இருந்தும் 9 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேர் 3 வள்ளங்களில் வேலணைக்குச் சென்றனர். அவர்களை ஈ.பி.டி.பி.யினர் பராமரித்து வருகின்றனர்.

10.03.97 அன்று இவர்கள் யாழ்ப்பாணம் சென்றனர்.

## மன்னாரில் நிர்வாக நடவடிக்கைகள்

(மன்னார் நிருபர்)

‘எடிபல’ இராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ‘சிவில் நிர்வாக’ நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக முசலி, நானாட்டான் ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமுள்ள சகல அரசாங்க ஊழியர்களும் தத்தம் வேலைத் தலங்களுக்குத் திரும்புமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளர் ஏ.எஸ்.ஜயவர்த்தன கேட்டுள்ளார்.

மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தற்போது இயங்கி வருகிறது. மடு, மாந்தை மேற்கு ஆகிய இரு பிரிவுகளின் பெரும்பகுதி இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் அமைந்துள்ளன.

இதேவேளை, மன்னாரிலிருந்து உயிலங்குளத்திற்கு பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இது முருங்கன் வரை நீடிக்கப்படவுள்ளது.

சிலாவத்துறை, நானாட்டான் போன்ற உள்ளூர் சேவைகளுக்கும் கொழும்பு, புத்தளம், திருகோணமலை போன்ற வெளியூர்களுக்கும் விரைவில் பஸ் சேவை ஆரம்பிக்கப்படலாம் என்று தெரிகிறது. எனினும் மன்னார்ச் சாலையில் பஸ்களுக்குப் பலத்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இம்மாதம் சீனத்தயாரிப்பான ஐந்து பஸ்கள் இச்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பத்து பஸ்களாவது உடன் அனுப்பி வைக்குமாறு இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையைக் கேட்டுள்ளதாக மன்னார் சாலை முகாமையாளர் திரு.என். இராசரட்ணம் முரசுக்குத் தெரிவித்தார்.

இப்பகுதி வீதிகளில் சேவையிலீடுபட ‘அசோக்லேலண்ட்’ பஸ்கள் மட்டுமே பொருத்தமானதாகவுள்ளதால் அதனையே அனுப்புமாறு அவர் கேட்டுக் கொண்டதாகத் தெரிய வருகிறது. தற்போது இச்சாலையில் 17 பஸ்களே ஓடக் கூடிய நிலையிலுள்ளன.

## இளம் பெண் கைது!

## ஈ.பி.டி.பி. விடுவிப்பு!

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதி, இணுவிலில் வசிக்கும் இளம் பெண் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கணேசன் ஜீவந்தினி (23) என்னும் அப்பெண் 09.03.97 அன்று இரவு 10 மணியளவில் வீட்டில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். படையினர் அப்பெண்ணைக் கைதுசெய்து அழைத்துக் கொண்டு சென்ற போது வீட்டில் இருந்தவர்களும், அயலவர்களும் கூக்குரலிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் அக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா.உ.விடம் இது தொடர்பாக உறவினர்கள் முறையிட்டனர்.

51வது படையணித் தளபதியான மேஜர் ஜெனரல் பலகல்லயுடன் டக்ளஸ் தேவானந்தா பா.உ.. தொடர்பு கொண்டதையடுத்து 10.03.97 அன்று மாலையில் அப்பெண் விடுதலை செய்யப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

# போதிய பஸ்கள் சேவையில் இல்லை
## கண்டி – மாத்தளை பஸ்சேவை சீர்குலைவு!

(அக்குறணை நிருபர்)

அக்குறணை வழியாக கண்டி-மாத்தளை இலங்கை போக்குவரத்து பஸ்சேவை பல வருடங்களாக சீரில்லாத நிலையிலேயே இயங்கி வருகின்றது.

ஆஸ்பத்திரி மற்றும் அலுவலகங்கள் போன்றவற்றிற்குச் செல்லும் பொதுமக்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் பாடசாலை மாணவர்களும் பஸ்களில் இடம்பிடிக்கத் தினமும் முண்டியடிக்கின்றனர். இதனால் பெரும் நெருக்குவாரத்துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கின்றது. குறைந்தளவு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதே இதன் காரணமாகும்.

இந்த இடம்பிடிப்பு முண்டியடிப்பில் அண்மையில் கர்ப்பிணித் தாயொருவர் இடறி விழுந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிலநாட்களின் முன் அக்குறணையைச் சேர்ந்த முஸ்லிம் ஆண் ஒருவர் ஓடிவரும் பஸ்ஸில் ஏற முனைந்தபோது கால் இடறிவிழுந்து பஸ் சக்கரத்தினால் தலை நசுக்கப்பட்டு மாண்டுபோனார்.

இதேபோல மாத்தளையைச் சேர்ந்த செனவிரத்ன (65) என்பவரும் பஸ்ஸில் ஏறப்போய் கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

இவ்வளவு நடந்தும் மத்திய போக்குவரத்துச்சபை இந்த அவலங்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

மாத்தளைக்கு தினமும் மாலை நேரத்தில் அதிகமான பிரயாணிகள் பயணம் செய்ய வேண்டியிருப்பதால் பஸ்களை போதியளவு பயன்படுத்தாமல் மத்திய போக்குவரத்துச் சபை கருமித்தனம் செய்கிறது.

பிரயாணிகளின் இந்த அசௌகரியங்களை நீக்க மாத்தளை பஸ் நிறுத்தும் இடத்தை, நெருக்கடி நிறைந்த கண்டி மணிக்கூட்டுக் கோபுர பஸ் நிறுத்தும் இடத்தில் இருந்து, கண்டி 'குட்ஷெட்' பஸ் தரிப்பு நிலையத்திற்கோ அல்லது 'போஹம்பர' தரிப்பு நிலையத்திற்கோ இடம்மாற்றவேண்டும். அவ்வாறு செய்தால் அனர்த்தங்களும் மரணங்களும் இல்லாத பயணத்திற்கு உத்தரவாதம் அளிக்கமுடியும். கண்டி மத்திய போக்குவரத்து பிராந்திய அலுவலகம் இதனைக் கவனத்தில் கொள்ளுமா?

# நிரம்பி வழியும் மருத்துவ மனைகள்



வன்னியில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இடநெருக்கடி, சுகாதாரச் சீர்கேடுகள், ஊட்டச்சத்தற்ற உணவுகள் காரணமாக நோய்கள் பரவுகின்றன. வன்னி மருத்துவமனையில் நிரம்பி வழியும் நோயாளர்கள்தான் படத்தில் காணப்படுகின்றவர். என்றுதான் தீரும் பிணியும்-துயரும்.......?

# திம்புலாகல தமிழ் மக்கள் துயர் தீருமா?

(குருநாகல் நிருபர்)

திம்புலாகல, நாமல்பொகுண பகுதி வாழ் தமிழ் மக்கள் நிலை பலவழிகளிலும் மோசமடைந்த நிலையில் உள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளன. இங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் பல தங்கள் தலைவனை இழந்து பொருளாதார ரீதியாக வறுமைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அடிக்கடி இப்பகுதியில் தமிழர்கள் மீது புலி வேட்டை நடத்தப்படுவதால் தற்காலிகத் தொழில் வசதியும் இல்லை. இங்குள்ள சிறார்கள் கல்வி கற்க நான்கு மைல்கள் நடந்து, காட்டுப்பகுதி வழியாக சொறிவில என்ற இடத்தில் அமைந்துள்ள பாடசாலைக்கே செல்ல வேண்டும். இல்லாவிட்டால் ஆறு மைல்கள் தொலைவில் உள்ள மன்னம்பிட்டிக்குச் செல்ல வேண்டும். பாதுகாப்பு இன்மையால் மாணவர்கள் இந்த இரு பாடசாலைகளுக்கும் செல்லமுடியாத நிலை உருவாகியுள்ளது. நாமல்பொகுண பகுதியில் அரச கட்டிடங்கள் பல வெறுமனே உள்ளதால், தமிழ்ப் பாடசாலையொன்றை அமைத்து மாணவர்களின் கல்விப் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் எனப் பெற்றோர் கூறுகின்றனர்.

பாடசாலை அமைப்பது பற்றி கல்வித்திணைக்களத்துக்கு அறிவித்தபோது, இப்பகுதியில் பாடசாலைகள் அதிகம் எனக் கூறி கைவிரித்து விட்டதாம். ஆனால் இருப்பது சிங்களப்பாடசாலைகள். தமிழ்ப்பாடசாலைகள் இல்லை. இவற்றை வேறுபடுத்தி அறிய முடியாதவர்களா கல்வித் திணைக்களத்தில் உள்ளனர்?

விவசாய வேலைகளில் ஈடுபட முடியாது. காரணம் பாதுகாப்புக் கெடுபிடிகள். எனவே நலிந்து போயுள்ள இவர்கள் தங்களுக்கு சுய தொழில் செய்யக்கூடிய வாய்ப்புக்களை அரசு ஏற்படுத்தித் தருமா என எதிர்பார்க்கின்றனர். சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் இவ்விடயத்தில் தலையிட்டு இம் மக்களின் வாழ்வை மேம்படுத்த உதவுமா?

# கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

மட்டக்களப்பு கல்வித்திணைக்களத்தின் நிர்வாகத்தில் உள்ள சில பாடசாலைகளிலும் திணைக்களத்திலும் கடமை புரியும் காவலாளிகளுக்கு அரச விடுமுறை மற்றும் அவர்களது ஓய்வு தினத்திலும்- பதில் கடமை புரிவதற்கு ஆட்கள் இல்லாத நிலையில்- அவர்களே தொடர்ந்து கடமை புரிந்து அதற்குரிய கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெற்று வந்தனர்.

மேலும் இக்கொடுப்பனவுகள் 1997ம் ஆண்டு தை மாதத்திற்குரியவை, இதுவரைக்கும் வழங்கப்படவில்லை. ஒருசில சிற்றூழியர்களுக்கு 1996ம் ஆண்டு மார்கழி மாதத்திற்குரிய கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. வடகிழக்கு மாகாண சபையிலிருந்து இதற்குரிய கொடுப்பனவுகள் கிடைக்கவில்லையென்பதன் காரணத்தினால் இவை வழங்கப்படவில்லையென இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுகின்றனர். இச் செய்தி எழுதப்படும் வேளையில் கூட இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

எனவே இது தொடர்புடைய வட-கிழக்கு மாகாண சபையின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மேற்படி ஊழியர்களின் கொடுப்பனவுகளை வழங்க ஆவன செய்ய முன்வருவார்களாக.

கல்லடி மூர்த்தி.

# 10 புலமைப் பரிசில்கள்

(கல்முனை நிருபர்)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகை, செய்தித் தொடர்புத்துறை டிப்ளோமா பயிற்சி நெறியைக் கற்பதற்காக பத்து (10) புலமைப் பரிசில்களை வழங்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் வெகுசனத் தொடர்பு அமைப்பு முன்வந்துள்ளது என்பதை அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் முரசுக்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் தகவல் தருகையில், மேற்படி டிப்ளோமா பயிற்சி நெறி 1997.03.01 ஆரம்பிக்கப்பட இருந்ததென்றும், பயில்வோருக்கு, தபால் வேலை நிறுத்தம் காரணமாக அழைப்புக் கிடைக்காமல் இருக்கும் என்று கருதி, அதற்குப் பொறுப்பாளரான பேராசிரியர் ஜே.டி. திசாநாயக்க அவர்களைச் சந்தித்து உரையாடி, 97.03.08 ஆந் திகதி ஆரம்பிக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி பயிற்சி நெறிக்கு 56பேர் தமிழ் மூலம் கற்பதற்குத் தெரிவாகி உள்ளதாக 'கொலிஜ் ஹவுஸ்' தெரிவிக்கின்றது.

# முல்லையில் அபிவிருத்தி

முல்லைத்தீவில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

யுத்தத்தில் தமது வாழ்க்கைத் துணையை இழந்த பெண்களுக்கு தையல் நிலையங்கள் திறக்கப்பட்டு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

ஆரம்ப பாடசாலைகளும் திறக்கப் பட்டுள்ளன. விளையாட்டு மைதானம், வாசிகசாலைகள் என்பனவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டபின்னர் முல்லைத்தீவு புலிகள் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.


**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



**உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் +**

எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
**M.I.H. Ind. S.M.P.**

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, ரோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல்வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**

No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு - 11.



**றெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411





33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

**மலையாள மாந்திரீகம்**

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
பக்ஸ் இல-342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972 இனைக் கேட்கவும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET, NO.....
E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,
WWW LGO SLT.LK.

நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்
வெள்ளிக்கிழமை விடுமுறை.


## விளம்பரப் பகுதி


**பழுதுபார்த்தல்**
**Repairs**
T.V, VIDEO DECK, HI FI RADIO, CASSETTE PLAYER, TELEPHONE, FAX போன்ற எலக்ரோனிக் உபகரணங்கள் உடனுக்குடன் நம்பிக்கையான முறையில் திருத்தப்படும்.
"CONTACT ELECTRONIC SYSTEMS"
256A, THIMBRIGASYAYA ROAD,
COLOMBO-05.
TELE PHONE: 594022, 594671



**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
**ரிஷி. S.மணி**
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030



**பழுதுபார்த்தல்**
T.V, VIDEO DECK,
HI FI RADIO SETS, CALCULATORS,
ORGAN, TYPE WRITERS
மற்றும் எல்லாவிதமான எலக்ரோனிக் உபகரணங்களை உத்தரவாதத்துடன் திருத்தி பெற்றுக்கொள்ள தலை நகரில் நம்பிக்கையான நிறுவனம்
THIVIYA ELECTRONICS
121 3/3R, FIRST CROSS ST.
COLOMBO-11.
தொலைபேசி—334322



**BRIGHTன் SPOKEN ENGLISH**
(தபால் மூலம் கல்வி)
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மிகச் சிறந்த பாடநூல்களுடன் கூடிய பாடத்திட்டம். விபரங்களுக்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27, FIRST FLOOR, P.O.BOX- 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO-11. T.P. : 434770



**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

மார்ச் 15 முதல் 31 வரை Dr.P.ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10. RECLAMATION ROAD. (ENTRANCE BANKSHALL ST.. Opposite Ranjanas) COLOMBO11. T.P.436383, 436390. கொழும்பு நாட்களில் மட்டும் செல்டல் No.078-71101. கொழும்பில் முன்கூட்டி புதிவு செய்யவும். மார்ச் 8, 9, 10 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No:33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD. BATTICALOAவிலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கிழக்கில் புலிகளின் இடிமுழக்கம் தொடரும் இருமுனைத் தாக்குதல்

'ஒப்பரேஷன் எடிபல' இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கம்- உள்ளூராட்சித் தேர்தலுக்கான வெற்றிப் பாதையைத் திறப்பதுதான்.

அதன் மற்றொரு நோக்கம்- புலிகளை தமது பிரதான தளமான வன்னியைப் பாதுகாக்கவேண்டிய தற்காப்பு யுத்தக் கட்டத்துக்குள் தள்ளிவிடுவதுமாகும்.

படையினர் 'ஒப்பரேஷன் எடிபல'வை தொடங்க முன்னரே புலிகளின் கிழக்கு மாகாண அணிகளும், அவற்றுக்கு உதவியாக வடபகுதி அணிகளும் கிழக்குக்கு அனுப்பப்பட்டிருந்தன.

இச் செய்தி முரசிலும் வெளியாகி இருந்தது. வன்னியில் விசேட பயிற்சி பெற்ற புலிகளின் புதிய அணிகளும்- பெண்கள் அணி உட்பட கிழக்குக்கு படகுகள் மூலமாக வந்திறங்கின. புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் புதிய அணிகளின் நட மாட்டத்தை அவதானிக்க முடிந்தது. அச் செய்திதான் முரசில் வெளியாகி இருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் புலுக்குணாவ முகாம் வெற்றிகரமான தாக்குதலுக்கு உள்ளானது. அம்பாறை மாவட்டத் தளபதி ராம் தலைமையில் அத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

அதனையடுத்து மட்டக்களப்பு அணியினர் தாமும் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த வேண்டும் என்று திட்டமிட்டனர்.

**02.02.97ல் மாவடி வேம்பு முகாம்மீது புலிகளின் மட்டக்களப்பு தளபதி கருணா தலைமையில் பாரிய தாக்குதல் தொடுக்கப் பட்டது. அதே நேரம் வடக்கில் வெற்றி லைக் கேணி முகாம்மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.**

புலிகளால் முதன்முதலில் மேற் கொள்ளப்பட்ட இரு முனைத் தாக்குதல் தந்திரோபாயம் அதுதான்.

அத்தாக்குதல் தொடர்பாக எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் குறிப்பிடும்போது: "மாவடி வேம்பு தாக்குதல் ஒரு பரீட்சார்த்த முயற்சி தான். கிழக்கில் பாரிய தாக்குதலுக்கு புலிகளின் அணிகள் குறிவைத்துள்ளனர். இருமுனைத் தாக்குதல் தந்திரமும் தொடரலாம்" என்று தெரிவித்திருந்தது நினைவிருக்கலாம்.

மட்டக்களப்பில் வவுணதீவிலும், திருமலையில் சீனக்குடா விமான தளத்தின் மீதும் ஒரே சமயத்தில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலும், வவுணதீவு முகாம் மீதான பயங்கரமான அதிரடித் தாக்குதலும் முரசின் கணிப்பை உச்சிதமாக உறுதிப் படுத்தியுள்ளன.




வை - 12

**வவுணதீவு முகாம் தாக்குதலின் போது அருகிலுள்ள முகாம்கள்மீதும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஆனால் பிரதான தாக்குதல்கள் இரு முனைகளில் மட்டுமே நடைபெற்றன.**

வவுணதீவு இராணுவ முகாமும், சீனக்குடா விமானத் தளமும்தான் பிரதான இலக்குகள்.

எனவே இரு முனைத் தாக்குதலில் புலிகள் இறங்கிய இரண்டாவது போர்க் களம் இதுதான்.

புலிகளை தற்காப்புக் கட்டத்துக்குள் தள்ளிவிட்டதாக படையினர் நினைத்துக் கொண்டிருக்கையில் கிழக்கில் இரு முனைத் தாக்குதலுக்கு புலிகள் கச்சிதமாகத் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தனர்.

சீனக்குடா விமானத் தளம் திருமலையில் இருக்கிறது. வவுணதீவு இராணுவ முகாம் மட்டக்களப்பில் இருக்கிறது.

ஆனால் இரு முனைத் தாக்குதல்களுக்கு இலக்குகளை தெரிவு செய்யும்போது ஒன்றோடொன்று தொடர்பு இருக்கக்கூடிய வகையில் தான் தெரிவு செய்வர்.

வவுணதீவு இராணுவ முகாம் தாக்கு தலை முறியடிக்க விமானப்படை உதவியைத் தான் படையினர் நாடவேண்டியிருக்கும்.

சீனக்குடா விமான தளத்தை தாக்குவதால் அங்குள்ள விமானங்கள் வவுணதீவு முகாம் படையினருக்கு உதவச் செல்ல முடியாது.

வவுணதீவு முகாம்மீதான தாக்குதலை ஆரம்பிக்க முன்னரே சீனக்குடா விமானத் தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அவ்வாறு தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் விமானப் படையினரின் கவனமும் அங்குதான் திரும்பும். ஏனைய விமானத் தளங்களில் உள்ள விமானங்களும் சீனக்குடா நோக்கித்தான் உதவிக்கு விரையும்.

விமானப் படையினரை சீனக்குடா நோக்கி திசை திருப்பி இழுத்துக்கொண்டு, வவுணதீவு முகாமைத் தாக்குவதுதான் புலிகளின் திட்டம்.

இலங்கை விமானப்படையின் முக்கிய தளங்களில் ஒன்று சீனக்குடா விமானத் தளம். கடும் பாதுகாப்பு அரண்களைக் கொண்ட வளாகம் அது.

ஆயினும் பாதுகாப்பான விமானத் தளத் துக்குள் புலிகள் ஊடுருவது இது முதற் தடவையல்ல.

1994 ஒக்டோபர் மாதம் பலாலி விமானத் தளத்துக்குள் ஏழு கரும்புலிகள் ஊடுருவித் தாக்கினார்கள். ஒரு ஹெலிகொப்டரும், கவச வாகனம் ஒன்றும் தகர்க்கப்பட்டன. பிரபாகரனின் நேரடி வழி நடத்தலின் கீழ் அத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

படையினர் உஷாரடைவதால் அங்கு தரித்து நின்ற சியாமாசெட்டி குண்டு வீச்சு விமானங்கள் தப்பிக்கொண்டன. கரும்புலிகள் ஏழுபேரும் பலியானார்கள்.

சீனக்குடா விமானத்தளம்மீதான தாக்கு தலும் கரும்புலிகளை பிரதான ஊடுருவல் ஆயுதமாக வைத்தே திட்டமிடப்பட்டது.

வவுணதீவு இராணுவ முகாமை தாக்கத் தொடங்க முன்னர் சீனக்குடா விமானத் தளம்மீது தாக்குதல் ஆரம்பமானது.

**வியாழக்கிழமை புலிகளுக்கு ராசியான நாட்களில் ஒன்று.**

**முல்லைத்தீவு முகாம் தாக்குதல், புலுக் குணாவ முகாம் தாக்குதல், பரந்தன் தாக்குதல் போன்ற பாரிய நடவடிக்கைகள் புலிகளால் வியாழக்கிழமைதான் மேற் கொள்ளப்பட்டன.**

**இம்முறை இருமுனைத் தாக்குதலும் வியாழக்கிழமைதான் திட்டமிடப்பட்டது.**

சீனக்குடா விமானத்தளத் தாக்குதலை தளபதி சொர்ணம் வழி நடத்தினார். வவுணதீவு தாக்குதல் மட்டக்களப்பு மாவட்ட விசேஷ தளபதி கருணாவின் தலைமையில் நடத்தப் பட்டது. அம்பாறை மாவட்ட அணியும் 'ராம்' தலைமையில் பங்கு கொண்டது.

நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் சீனக்குடா விமானத்தளத்தை நோக்கி கரும் புலிகள் மூன்றுபேரும், புலிகளின் விசேஷ படையணியும் முன்னேறத் தொடங்கின.

காவலரண்கள்மீது தாக்குதல் நடத்தி கரும்புலிகள் உள்ளே ஊடுருவிச் செல்ல வைப்பதுதான் விசேஷ படையணியின் பொறுப்பு.

உள்ளே ஊடுருவும் கரும்புலிகள் டொம்பா மூலமாக விமானங்களை தகர்க்க வேண்டும். ஆர்.பி.ஜி. ரக ஆயுதங்களை தூக்கிச் செல்வதை விட டொம்பாவை கொண்டு செல்வது சுலபம்.

கொலன்னாவ ஒருகொடவத்த எண் ணெய்க்குதத் தாக்குதல்கள், பலாலி விமானத் தளம் மீதான ஊடுருவல் ஆகியவற்றின் போதும் டொம்பாதான் புலிகளால் பயன் படுத்தப்பட்டது.

**சீனக்குடா விமானத் தளத்துக்குள் புலிகள் ஊடுருவியபோது வை-12 விமானம் இரண்டு, எம்.ஐ.24 ரக ஹெலிகள், எம் 17 ரக போக்கு வரத்துக் ஹெலிகள், புக்காரா விமானம் என் பவை நிறுத்தப்பட்டிருந்தன.**

காவலரண் தாக்கப்பட்டதும் காவரணில் இருந்த படையினர் பின்வாங்கிச் சென்று விட்டனர். திடீரென்று சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் கேட்கத் தொடங்கியதும் காவலர ணில் உள்ளவர்கள் திகைத்துப்போயினர்.

காவலரண் உடைபட்டதும் கரும்புலிகள் ஊருடுவி விமானத்தள ஓடுபாதை வரை பாய்ந்து சென்றுவிட்டனர்.

அங்கு தரித்து நின்ற வை-12 ரக போக்குவரத்து விமானம் அவர்கள் கண்ணில் பட்டுவிட்டது. ஒரு கரும்புலி பாய்ந்து சென்று விமானத்துக்குள் புகுந்து தன்னைத் தானே வெடிக்க வைத்தார். விமானம் சிதறி, அதன் அடிக் கட்டுமானம் மட்டும் எலும்புக்கூடுபோல காட்சியளித்தது.

ஏனைய விமானங்கள் மற்றும் ஹெலி களை தகர்க்க வேண்டுமானால் மேலும் உள்ளே செல்ல வேண்டும். கரும்புலிகள் நின்ற இடத்தில் இருந்து மேலும் நூறுயார் தூரமாவது செல்ல வேண்டும்.

துப்பாக்கி வேட்டுக்கள், வெடியோசை கள் கேட்டு விமானப்படையினர் விழிப்படைந்து பதில் தாக்குதலில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

அனுராதபுரத்தில் உள்ள விமானத் தளத்துடன் தொடர்பு கொண்டு சீனக்குடா விமானப்படையினர் உதவி கேட்டனர். எம்-24 ரக ஹெலிகொப்டர் உதவிக்கு விரைந்தது.

சீனக்குடா முகாமின் அருகில் நின்ற புலிகளின் விசேஷ படையணியினர் எம்-24 ஹெலிமீது சுட்டனர். அதனால் ஹெலி சிறிது சேதமுற்றது என்று கூறப்படுகிறது.

விமானப்படையினர் உஷாராகிவிட்டதால் ஏனைய விமானங்களையோ ஹெலிகளையோ புலிகளால் நெருங்க முடியவில்லை. கரும்புலி களுக்கு உதவியாகச் சென்ற புலிகளின் விசேஷ படையணி பின் வாங்கிச் சென்றது.

**மூன்று கரும்புலிகளும் பலியானார்கள். மேஜர் சிற்றம்பலம், கப்டன் நிவேதன், கப்டன் விஜயரூபன் ஆகியோரே பலியான கரும்புலி களாவர்.**

**புலிகளின் செய்தியின்படி வை-12 விமானம் ஒன்றும், விமான எதிர்ப்பு பீரங்கி கள் இரண்டும் அழிக்கப்பட்டன.**

சீனக்குடா விமான நிலையம்மீதான தாக்குதல் காரணமாக கிட்டத்தட்ட 12 1/2 கோடி ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது.

விசேஷ படையணியினர் பின்வாங்கிய பின்னர் கப்பல்துறையில் இருந்து புலிகள் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். தாக்கு தலை தொடரப் போவதுபோல போக்குக் காட்டிக் கொண்டிருந்தனர்.

அதேநேரம் மட்டக்களப்பு வவுணதீவு முகாம் தாக்குதலுக்கு தயாராக நின்ற மட்டக்களப்பு தளபதி கருணாவுக்கு சீனக்குடா வில் நின்ற சொர்ணத்திடமிருந்து தொலைத் தொடர்பு சாதனம் மூலமாக தகவல் பறந்தது.

உடனடியாக வவுணதீவு முகாம் தாக்கு தலுக்கு புலிகளின் அணிகள் முன்னேறின.

மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரை யில் இருப்பதுதான் வவுணதீவு. மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது.

கடந்த வருடம்தான் வவுணதீவு முகாம் அமைக்கப்பட்டது. இந்த முகாம் அமைக்கப் பட்டதன் நோக்கம் இரண்டு.

**ஒன்று: மட்டக்களப்பு வாவிக்கு கிழக்கே உள்ள மட்டக்களப்பு விமானத் தளம்.**

**இரண்டாவது நோக்கம்: வாவிக்கு மறுபுற மாக உள்ள படுவான்கரை புலிகளின் கட்டுப் பாட்டில் இருக்கிறது. அங்கிருந்து மட்டக்களப்பு நகருக்குள் புலிகள் ஊடுருவாமல் தடுப்பது.**

கிட்டத்தட்ட இருநூறு படையினர் முகாமில் இருந்தனர். புளொட், ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எஃப். ராசிக் குழுவினர் ஆகியோரும் முகாமிலிருந்த இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டு வந்தனர்.

வவுணதீவு தாக்குதல் நடைபெறுவதற்கு சில நாட்கள் முன்னரே புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற செய்தி மெல்லக் கசிந்திருந்தது.

ஆயினும் படையினருடன் இருந்த புளொட் உறுப்பினர்கள்தான் அப்படி புலிகளால் தாக்குதல் நடத்தமுடியாது. முகாமை அண்டிய பகுதிகள் சமதரையாக இருப்பதால் புலிகள் வந்தால் தெரிந்துவிடும் என்று தைரியம் கொடுத்திருந்தார்கள்.

வவுணதீவு பாலம் அருகே புளொட் பாதுகாப்பு பணியிலும் ஈடுபட்டிருந்தது.

இரவு ஒருமணியளவில் தாக்குதல் ஆரம்பித்ததும் வவுணதீவு பாலத்தை புலிகள் கைப்பற்றிக் குண்டுவைத்துத் தகர்த்தனர். அதனால் போக்குவரத்துக்கு ஒரு சிறிய துண்டுப் பகுதி மட்டுமே மிஞ்சியிருந்தது.

கிட்டத்தட்ட ஐநூறு புலிகள் அணி அணியாகத் திரண்டு சென்றனர். புலிகளின் அணிகள் திரண்டுவந்ததைக் கண்டதுமே பாலத்தடியில் பங்கர் அமைத்திருந்த புளொட் உறுப்பினர்களும், பொலிசாரும் தப்பிச் சென்று வாவியின் கிழக்குப் பக்கமாக நின்று நடப்பதை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

வவுணதீவு முகாம் தாக்குதலுக்கு முன்னர் புலிகள் செய்த தந்திரம் ஒன்றையும் குறிப் பிட்டாக வேண்டும்.

**மட்டக்களப்பில் இருந்து 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது கொம்மாதுறை இராணுவ முகாம். அந்த முகாமை தாக்கத் திட்டமிடு வதுபோல புலிகள் பாசாங்கு செய்து கொண்டி ருந்தனர். வவுணதீவு தாக்குதலுக்கு நாலு நாட்கள் முன்பாக மட்டக்களப்பு பதுளை வீதி யிலும், வந்தாறுமூலை, கொம்மாதுறை வீதி யிலும் நூற்றுக்கணக்கான புலிகள் வாகனங் களில் நடமாடித் திரிந்தனர்.**

அத் தகவல் படையினருக்கும் எட்டியது. உடனடியாக கொம்மாதுறை முகாமின் பாது காப்பைப் பலப்படுத்தினார்கள்.

எனவே வவுணதீவு முகாம்மீதான தாக்குதல் பற்றிய செய்தி ஒரு வதந்தி என்றே படையினர் நம்பியிருந்தனர்.

பாலம் தகர்க்கப்பட்ட ஓசையும், முகாம் காவலரண்களை தகர்த்துக் கொண்டு புலிகளின் அணிகள் பாய்ந்தபோதும்தான் அது வதந்தி அல்ல என்று படையினர் உணர்ந்தனர்.

மட்டக்களப்பில் உள்ள ஏனைய முகாம் களில் இருந்து படையினரின் உதவி கிடைப் பதை பாலத்தை உடைப்பது மூலம் தடுத் ததுடன், கொம்மாதுறை இராணுவ முகாம் அருகிலும் கட்-அவுட் போட்டு புலிகள் பதுங்கியிருந்தனர்.

புலிகள் எதிர்பார்த்தது போலவே சீனக்குடா விமானத்தளம் தாக்கப்பட்டதால் விமானப்படை விமானங்களும் உடனடியாக வவுணதீவுக்கு வரமுடியவில்லை.

படையினருக்கு இன்னொரு பிரச்சனை யும் இருந்தது. வவுணதீவு முகாமின் உதவிக்கு செல்வதைவிட மட்டக்களப்பு விமானத் தளத்தை பாதுகாத்தாக வேண்டும். வவுணதீவு இராணுவ முகாமில் இருந்து ஒரு சில கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது விமானத் தளம்.

முகாமைத் தாக்குவதுபோல் போக்குக் காட்டிவிட்டு விமானத்தளம்மீது புலிகள் பாய்ச்சல் நடத்தலாம் என்று படையினர் உஷாராக இருந்தனர்.

அதிகாலை 4.30 மணியளவில் துப்பாக்கி கள் பொருத்தப்பட்ட இரண்டு ஹெலிக் கொப்டர்கள் வந்தன. இரண்டுமே விமானத் தளத்தை பாதுகாப்பதில்தான் ஈடுபட்டிருந்தன.

பொழுது விடிந்து கொண்டிருந்தபோது தான் கிபீர் யுத்த விமானம் வந்தது. அப்போது முகாம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்தது.

படையினரில் பலியானவர்கள் தவிர ஏனையோர் வாவியில் குதித்து நீந்தியபடி தப்பிச் சென்றனர்.

முகாம் புலிகளின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டது என்ற தகவலை உறுதிப் படுத்திய பின்னர் கிபீர் விமானம் முகாம் பகுதியை தாக்கத் தொடங்கியது.

**முகாமைக் கைப்பற்றும் தாக்குதலில் ஏற்பட்ட சண்டையில் புலிகள் தரப்பு இழப்பை விரல்விட்டு எண்ணிவிடலாம். கிபீர் விமானம் தாக்கத் தொடங்கியதால் புலிகளின் அணிகளில் பலத்த சேதம் ஏற்படத் தொடங்கியது.**

விமானங்கள் உடனடியாக வராது என்ற நம்பிக்கையில் புலிகள் அதிக நேரம் முகா முக்குள் நின்றுவிட்டனர்.

தப்பியோடிய படையினரையும், மோதலில் பலியான படையினரையும் தவிர 18 படையினர் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை கயிற்றால் பிணைத்துக்கட்டி மண்டையில் சுட்டுக் கொன்றனர். சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் ஒருவர் அதிகாரி.

இதேவேளை படையினரின் கவனத்தைத் திருப்ப தமது கட்டுப்பாட்டில் உள்ள படுவான்கரையில் இருந்து 85 எம்.எம் ஆட்டிலெறியால் மட்டக்களப்பு விமானத்தளம் இராணுவ தலைமையகம் ஆகியவற்றை நோக்கி ஷெல்களை ஏவிக்கொண்டிருந்தனர். புலுக் குனாவ முகாம் தாக்குதலின்போது புலி களால் ஒரு ஆட்டிலெறி கைப்பற்றப்பட்டது. அதுதான் 85 எம்.எம்.ஆட்டிலெறி. அதன் மூலமே ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேவேளை கொம்மாதுறை இரா ணுவமுகாம், மட்டக்களப்பு இராணுவத் தலைமையகம் ஆகியவற்றின்மீது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இராணுவத் தலைமையகத்தில் கடமையில் இருந்த இரண்டு பெண் இராணு வத்தினரும், ஒரு பொலிஸ்காரரும் கொல் லப்பட்டனர். 7 பொலிசார் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு இராணுவத் தலைமையத் தில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி நோக்கி சரமாரியான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஷெல் யுத்தத் தால் மட்டக்களப்பு அதிர்ந்து கொண்டிருந்தது.

காலை 9 மணியளவில் புலிகளின் அணிகள் முகாமைவிட்டு வெளியேறின. கிபீர் குண்டுமழை பொழிந்தது.

அறுபதுக்குமேற்பட்ட புலிகள் குண்டுத் தாக்குதலால் மாண்டுபோனார்கள்.

**மாண்டுபோனவர்களின் உடல்களை கொண்டு செல்வது, பலியான படையினரின் ஆயுதங்கள் மற்றும் தப்பியோடியவர்களின் ஆயுதங்களை சேகரிப்பது என்பவற்றில் மட்டுமே ஈடுபட நேரமிருந்தது. அதனால் முகாமில் ஒரு மரத்தின் கீழ் இருந்த ஆயுதக் களஞ்சியத்தை புலிகளால் தேடிக் கண்டுபிடிக்க அவகாசம் போதவில்லை.**

அந்தக் களஞ்சியம் உடைக்கப்பட்டி ருந்தால் மேலும் நூற்றுக்கணக்கான ஆயுதங் களும், ரவைகளும் புலிகள் வசம் சென்றி ருக்கும்.

முகாமில் இருந்த உணவுக் களஞ்சிய மும் அப்படியே இருந்தது.

படையினர் தரப்பில் நூறுபேர்வரை பலியாகி இருக்கலாம் என்று செய்திகள் மற்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 70 பேர் காயமடைந்ததாகவும் தெரிகிறது. காய மடைந்தவர்களில் இரண்டுபேர் டெலோ இயக்க உறுப்பினர்கள்.

**புலிகள் தரப்பில் 84 பேர் பலியாகி உள்ளனர். அதில் 36 பேர் பெண் உறுப் பினர்கள். மட்டக்களப்பில் புலிகள் நடத்திய பாரிய தாக்குதல்களில் முதலாவது பெரிய தாக்குதல் இதுதான். புலிகளின் பெண் அணி மட்டக்களப்பில் பெரியளவில் ஈடுபடுத் தப்பட்ட தாக்குதலும் இதுதான்.**

**உயிரிழப்புக்கள் என்றளவில் பார்த்தால் படையினரின் ஆட்பலத்துடன் ஒப்பிடும் போது புலிகளுக்கு பாரிய இழப்புத்தான். சண்டை என்றளவில் நோக்கும்போது புலி களுக்கு வெற்றிதான். ஆனால் இந்த வெற் றிக்கு புலிகள் அதிக விலை கொடுத் துள்ளனர் என்பதையும் மறுக்க முடியாது.**

சீனக்குடா விமான தளத்தில் வை-12 விமானத்தை புலிகள் தகர்த்துள்ளனர்.

மூன்றாம் கட்ட ஈழப்போரின் பின்னர் இதுவரை 11 விமானங்களையும், 2 ஹெலி களையும் விமானப்படை இழந்துள்ளது.

இவற்றில் ஐந்து விமானங்களும், ஒரு ஹெலியும் புலிகளால் தகர்க்கப்பட்டன.

வை-12 விமானம் மணிக்கு 292 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய போக்கு வரத்து விமானமாகும். அதன் முழுப்பெயர்: யன்சுஜி-12 (Yun Shwji-12).

**இதுவரை மூன்று ஆட்டிலெறிகளை புலிகள் கைப்பற்றியுள்ளனர். முல்லைத் தீவில் 120 எம்.எம்.ஆட்டிலெறிகள் இரண்டு. புலுக்குணாவையில் 85 எம்.எம்.ஆட்டிலறி ஒன்று. சில விமர்சகர்கள் தம் மனம் போன போக்கில் கணக்குகளை வெளியிட்டு வருகிறார்கள். நம்பாதீர்கள். மூன்றாம் கட்ட ஈழப்போரின் பின்னர் 15 விமானங்களை புலிகள் வீழ்த்தியதாக ஒரு தமிழ்ப் பத்திரிகை விமர்சகர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் விழுந்த விமானங்களோ 11 தான்.**

**அதேவேளை சிங்களப் பத்திரிகைகள் சில புலிகளின் பலத்தை தப்பாகக் கணிப் பிட்டு செய்திகள் வெளியிடுகின்றன. 'எடிபல' நடவடிக்கையில் புலிகள் பலத்த எதிர்ப்பைக் காட்டாதது அவர்களின் பலவீனம் என்று செய்தி போட்டனர்.**

**குறைந்த மதிப்பீடு, தேவையற்ற மிகைப்படுத்தல் இரண்டுமே தவறுதான்.**

முரசின் செய்திகளுக்கு மாறாக அத்தகவல்கள் அமைந்ததால் மட்டுமே மேற்கண்ட உண்மையை சுட்டிக்காட்ட வேண்டியிருந்தது.

நா ர த ர்

## அதிரடி அய்யாத்துரை



**கொழும்பில்** தேர்தலில் போட்டி யிடும் குழுவொன்று பிரசாரத்திற்கு 'வேன்' வேண்டும் என்று முதலில் பவ்வியமாகக் கேட்கிறார்களாம். பின்னர் மறைமுக மிரட்டலில் இறங்கு கிறார்களாம். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் எண்டதுபோல வடக்கு-கிழக்கில் செய்ததை கொழும் பிலும் செய்தால் சரிப்பட்டுவருமோ? சனத்தையும் மிரட்டிக்கொண்டு சமாதானம் வெல்ல எலக்ஷன் கேட்கிறோம் எண்டு சொல்லுறதுதான் பென்னம்பெரிய பகிடி.

**ரெண்டு எழுத்தார்** 'கூட்டு முன்னணி' அமைக்கப்போவதாக சில தமிழ்க் கட்சிகள் சூப்பர் டூப் விட்டிருக்கினமாம். ஆங்கிலப் பத்திரிகைகளும் அதனை நம்பி டூப்'பை பிரசுரித்து தாங்களும் ஏமாந்து வாசகர்களையும் ஏமாற்றிப் போட்டினம். ஏற்கனவே ஒரு கூட்டு முன்னணி இருப்பதையே ரெண்டு எழுத்தார் விரும்பேல்லை. பிறகு புதிய கூட்டு முன்னணி அமைப்பை விரும்புவினமோ? ரெண்டு எழுத்துத் தலைவரின் கரெக்டரையே சிலர் புரிந்து கொள்ளவில்லைப் பாருங்கோ. தன் கையே தனக்குதவி என்பதுதான் அவரின் பொலிசி. புத்திசீவிகளையெல்லாம் வைக்க வேண்டிய இடத்தில் வைத்து பயன்படுத்துவாரே தவிர, தலையில் தூக்கி வைத் துக் கொண்டு அவையைப் பெரியாளாக்கும் வேலையெல்லாம் செய்யமாட்டார். இவையென்னடா என்றால் புத்திசீவிகளை எல்லாம் வைச்சு புதிய முன்னணி கட்டப்போகிறார் எண்டு கதையளக்கினம். காதிலை பூ தான்.

**அடுத்தவர் சொத்தை** திருடுவது ஒன்றும் கெட்ட காரியம் இல்லையெண்டது மாதிரி யாழ்ப்பாணத்தில் சிலரது அபிப்பிராயமாம். பக்கத்து ஓடுகளையும், தளபாடங்களையும் எடுத்து தங்கள் வீட்டில் போட்டுக்கொண்டு ஹாயாக இருக்கினமாம். உரியவை வந்து கேட்டாலும் அசையாமல் பதில் சொல்லுகினமாம். எங்கடை வீட்டு பொருட்கள் பக் கத்து வீட்டில் கிடக்கு. உங்கடை வீட்டுப் பொருட்கள் எங்கடை வீட்டில் கிடக்கு. உங்களுக்கு தேவையெண்டால் எதிர்வீட்டில் ஆக்கள் இல்லைத் தானே, போய் எடுத்துக் கொள்ளுங்கோ?" எண்டு பதில் வருகிறதாம்.

**யாழ்ப்பாணத்தில்** சங்கரத்தையில் பதுங்கியிருந்த பச்சையினர் தாக்கியதில் இரண்டுபேர் அவுட. பயங்கரவாதிகள் பலி. வெடிமருந்து கலன் கைப்பற்றப்பட்டது எண்டு செய்தி சொல்லப்பட்டது. பலியான ஒரு 'பயங்கரவாதி' தேங்காய் வியாபாரியாம். தேங்காய் பூரானை பையில் வைச்சுக்கொண்டு போனவராம். பூரான் பயங்கர ஆயுதமாக கருதப்படும் எண்டு அவர் கனவிலும் நினைச்சிருக்க மாட்டார். பயங்கரவாதியாகிறது படுலேசான காரியமாகிட்டுது பார்த்தியளோ?

**வவுணதீவு** இராணுவ முகாமில் படையினருடன் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களும் இருந்தவை. ரெண்டு எழுத்தார் தாக்கிய பின்னர் அவையும் மாயமாய் மறைஞ்சு போச்சினம் எண்டு கொழும்பு 'லங்காதீப' செய்தி போட்டிருக்குது. கொழும்பில் ரெலோ தேர்தல் கேட்கினம். ரெண்டு எழுத்தாருடன் பேச்சு நடத்தவேணும் எண்டதுக்காகத்தான் எலக்ஷன் கேட்பதாகவும் சொல்லுகினம். வடக்கு-கிழக்கில் போருக்கும் கை கொடுக்கினம். முடியைப் பிய்க்கலாம்போல கிடக்கல்லோ. உதுதான் அரசியல். பொலிட் 'ரிக்ஸ்'.

**யாழ்ப்பாணத்தில்** படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி களில் ரெண்டு எழுத்தார் பற்றிய தகவல்கள் பச்சைத்தரப்பாருக்கு போய்ச் சேருகிறதாம். ரெண்டு எழுத்தாரின் யாழ்மாவட்ட உளவுப பிரிவுப் பொறுப்பாளர் செந்தமிழனின் நடமாட்டம் பற்றியும் இரகசியத் தகவல் கிடைத்துத்தான் பதுங்கியிருந்து பச்சை உடையார் தாக்கினவையாம். அவர் பலியாகிவிட்டார். அதே நேரத்தில் ரெண்டு எழுத்தாரின் குறூப் 'அங்கே நிற்கிறது, இங்கே நிற்கிறது' எண்டும் வதந்திகளும் பரவுகிறதாம்.

**சங்கானையில்** ரெண்டு எழுத்தாரை எதிர்பார்த்து பொலிசனில் கிடந்தவையாம். கார் றைவர் சின்னத்துரைக்கு நல்ல மப்பு. வீட்டுக்குள் இருந்து வெளியே வந்திருக்கிறார். தள்ளாடி தள்ளாடி அவர் நடக்க பதுங்கிப் பதுங்கி வாறமாதிரி தெரிஞ்சிருக்க வேணும். டப்பு டப்பு. ஆள் குளோஸ். அதுக்குப் பிறகு அவர் பக்கத்தில் கிரனைட் எப்படி வந்து சேர்ந்தது எண்டுதான் தெரி யேல்லை. எல்லாம் மர்மக் கதை மாதிரியல்லோ கிடக்குது. சின்னத்துரைக்கு வயது 45.

ஒரு அருமையான பொன்மொழி

**"பணத்தால் நீ விலைக்கு**
**வாங்கும் நண்பனை**
**உன்னிடமிருந்து இன்னொருவன்**
**விலை கொடுத்து**
**வாங்கிக்கொள்வான்"**

(தோமஸ் டில்லர்)



படிப்பகம்

www.padippakam.com




அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

# -தமிழகத்தில் கொந்தளிப்பு-
# சென்னையில் திரண்ட மக்கள் வெள்ளம்!

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### போர் நிறுத்தம்?

இந்தியப் படையோடு போர் நிறுத்தம் செய்வது தொடர்பாக புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா மூன்று நிபந்தனைகளை விதித்திருந்தார் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

மாத்தையா நிபந்தனைகளை அறிவித்த பின்னர் ஈரோஸ் இயக்கத் தலைவர் வே.பாலகுமாரும் இந்திய அமைதிப்படை தளபதி திபீந்தர் சிங்கும் சந்தித்தனர்.

பலாலி இராணுவத் தளத்துக்கு வெளியே ஒரு பாழடைந்த கட்டிடத்தில் அச் சந்திப்பு நடைபெற்றது.

போர் நிறுத்தம் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டையும், அதற்கான காரணத்தையும் நாடிபிடித்தறியவே பாலகுமாரை சந்தித்தார் திபீந்தர் சிங்.

ஈரோஸ் இயக்கமும், அதன் தலைவர் வே.பாலகுமாரும் புலிகளுடன் நெருக்கமாக இருந்த காலகட்டம் அது.

தனியான இயக்கங்களாக அப்போது இருந்தபோதும் புலிகளின் விருப்பு வெறுப்பு அறிந்து அதற்கேற்பவே ஈரோஸ் செயற்பட்டது.

ஆயினும் தனியான சந்திப்புக்களின் போது காதும் காதும் வைத்தமாதிரி புலிகள் தொடர்பான தமது அதிருப்திகளை வெளியிடவும் ஈரோஸ் தலைவர்கள் தயங்கியது கிடையாது.

திபீந்தர் சிங்குடனான சந்திப்பிலும் பாலகுமார் தன்னிடம் சில தகவல்கள் கூறியதாக திபீந்தர் சிங்கே தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்கள் புலிகளிடம் இருந்து விலகிச்செல்லத் தொடங்கிவிட்டனர் என்பதை அமைதிப்படையின் யாழ்ப்பாண தளபதி, மற்றும் வே.பாலகுமார் ஆகியோரின் தகவல்கள் மூலம் தன்னால் அறிந்து கொள்ள முடிந்தது என்கிறார் திபீந்தர் சிங்.

போர் நிறுத்தம் தொடர்பான தமது நிபந்தனைகளில் தளர்வு ஏற்படுத்த புலிகள் தயாராக உள்ளனர் என்றும் பாலகுமார் தெரிவித்தார்.

போர் நிறுத்த விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் தன்னிடமில்லை என்று பாலகுமாரிடம் தெரிவித்தார் திபீந்தர் சிங்.

புலிகளின் மூன்று நிபந்தனைகளையும், அந்த நிபந்தனைகளிலும் தளர்வு செய்ய புலிகள் தயாராக இருப்பதாகவும் டில்லிக்கு தகவல் அனுப்பினார் திபீந்தர் சிங்.

திபீந்தர் சிங் அனுப்பிய தகவலைப் படித்துவிட்டு டில்லியில் இருந்து பதில் அனுப்பப்பட்டது.

"புலிகள் நெருக்கடிக்குள் சிக்கி உள்ளனர். அதனால்தான் போர்நிறுத்தம் செய்ய முன்வந்துள்ளனர். போர் நிறுத்தம் அவசியமில்லை. புலிகள்மீதான அழுத்தத்தை மேலும் அதிகரிக்கவும்" என்று உத்தரவு பறந்து வந்தது.

இந்திய வெளிநாட்டமைச்சும், 'றோ' உளவுப்பிரிவும் புலிகளை மேலும் நெருக்குதலுக்கு உள்ளாக்கவேண்டும் என்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தன.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் டில்லிக்கு அனுப்பிய செய்தியிலும் "புலிகள் பலவீனமடைந்துள்ளனர். சரிந்து விழும் கட்டத்தை நெருங்கிவிட்டனர்" என்றே தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 'அரசியல் தீர்வு'

இந்தியப்படைத் தளபதி திபீந்தர் சிங் தனது அபிப்பிராயத்தை டில்லியில் உள்ள இராணுவத் தலைமையகத்துக்கு அனுப்பிவைத்தார்.

திபீந்தர் சிங் தெரிவித்த அபிப்பிராயம் இதுதான்: "யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து காடுகளுக்குள் பின்வாங்கிச் சென்ற புலிகள் சிறு சிறு குழுக்களாக நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இத்தகைய தாக்குதல்களை இராணுவ நடவடிக்கைகளை மட்டும் வைத்து அடக்கிவிட முடியாது. இதற்கு அரசியல் தீர்வுதான் சரியானது.

புலிகளை படிப்படியாக அரசியல் தீர்வுக்கு உடன்படச் செய்யும் வகையில் தான் அவர்கள்மீது இராணுவ அழுத்தம் கொடுக்கப்படவேண்டும்.

மக்களின் நம்பிக்கையைப் பெறும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும். அவ்வாறு செய்தால் மக்கள் மத்தியில் புலிகள் மீண்டும் செல்வாக்குப் பெற முடியாது. ஆனால் இதற்கு நீண்ட கால அவகாசம் தேவைப்படும்" என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தார் திபீந்தர்.

திபீந்தர் அனுப்பிய அபிப்பிராயத்தைப் படித்துவிட்டு தூக்கிப்போட்டு விட்டது இராணுவத் தலைமையகம். அவருக்கு பதிலே அனுப்பப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியது இந்தியப் படை.

பிரிகேடியர் ஆர்.ஐ.எஸ்.காலன் என்பவர் யாழ் நகர பொறுப்பதிகாரியாக நியமிக்கப் பட்டார்.

உணவு விநியோகம், மருந்து விநியோகம் என்பவை ஆரம்பிக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து உணவுப்பொருட்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கிரமமாகக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன.

காங்கேசன்துறையில் இருந்து உணவுப் பொருட்களை யாழ்ப்பாண நகருக்குள் கொண்டுசென்று சேர்ப்பதுதான் சிரமமாக இருந்தது.

இந்தியப் படை வாகனங்கள்தான் உணவு கொண்டுசெல்லப் பயன்படுத்தப் பட்டன. இந்தியப் படை வாகனங்களைக் கண்டதும் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

அதன்பின்னர் செஞ்சிலுவைச் சங்கம் உணவு விநியோகத்தில் உதவ முன்வந்தது. தனியார் வாகனங்களும் பணியில் ஈடுபடுத்தப் பட்டன.

மெல்ல மெல்ல ரயில் போக்குவரத்தும், வீதிப் போக்குவரத்துக்களும் ஆரம்பமாகின.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்வரை கடுமையாகவும், கொலைப் பசியுடனும் நடந்துகொண்ட இந்தியப் படை பின்னர் தனது முகத்தை மாற்றிக் கொள்ள முயன்றது.

எப்போதும் மக்களுக்குள் ஒருசாரார் இருப்பார்கள். யார் பக்கம் பலம் இருக்கிறது என்று பார்த்து அந்தப் பக்கம் சாய்ந்துவிடுவார்கள்.

புலிகள் இருந்தவரை அவர்களின் ஆதரவாளர்களாக காட்டிக் கொண்ட சிலர், இந்தியப் படைமுகாம்களுக்கு பலகாரங்கள் செய்து கொண்டுபோய்க் கொடுத்தார்கள்.

புலிகளின் மறைவிடங்கள், ஆயுதங்கள் பதுக்கிவைக்கப்பட்ட இடங்கள் போன்ற தகவல்கள் இந்தியப் படையினருக்குக் கிடைக்கத் தொடங்கியிருந்தன.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் பெருந்தொகையான ஆயுதங்களும், கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

### ஏமாற்றம்

புலிகளிடம் தொலைத் தொடர்பு சாதனங்கள் தாராளமாக இருந்தன. அதனால் தொடர்புவிட்டுப்போன புலிகள் இயக்க அணிகளுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது தலைமைப்பீடம்.

புலிகளின் தொலைத் தொடர்பு சாதன வளர்ச்சி கண்டு இந்தியப் படை அதிகாரிகளே பிரமித்தனர்.

புலிகளின் உள்விவகாரங்கள், மற்றும் இரகசியத் திட்டங்களை அறிவதற்காக புலிகளின் தொலைத் தொடர்பு சாதனங்களை ஒட்டுக்கேட்க ஆரம்பித்தனர்.

புலிகளின் தொலைத் தொடர்பு சாதனத்தை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த இந்தியப் படையினருக்கு ஒரு தகவல் கிடைத்தது.

பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் மூளாயில் ஒரு வீட்டில் இருப்பதாகவும், அங்கு சென்று தலைவரை சந்திக்குமாறும் தமது ஒரு பிரிவினருக்கு புலிகள் தகவல் கொடுத்தனர்.

அந்த வீட்டுக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்பதையும் புலிகள் விளக்கியிருந்தனர்.

அது ஒரு அபூர்வமான தகவல். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது மாதிரி கிடைத்த தகவல் அல்லவா?

டாங்கிகள், ஹெலிகள் சகிதமாக விரைந்தது இந்தியப்படை. குறிப்பிட்ட வீடு முற்றுகையிடப்பட்டது.

பிரபாகரனது உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் கைதுசெய்ய வேண்டும் என்பது தான் மேலிட உத்தரவு.

வீடு முற்றுகையிடப்பட்டு கதவை உடைத்துக்கொண்டு உள்ளே பாய்ந்தனர் படையினர்.

அங்கே-வீட்டின் உள்ளே..

யாருமே இருக்கவில்லை.

ஏமாற்றத்துடன் திரும்பினர் இந்தியப் படையினர்.

தமது தொலைத் தொடர்பு சாதனங்களை இந்தியப் படையினர் ஒட்டுக் கேட்கிறார்கள் என்பது புலிகளுக்கும் தெரியும்.

இந்தியப் படையினரை அலையவைத்து ஏமாற்றுவதற்காக புலிகள் பரிமாறிக்கொண்ட பொய்யான தகவல்தான் அது.

அவ்வாறு பல தடவைகள் இந்தியப் படையினர் ஏமாற்றப்பட்டனர்.

### தமிழகத்தில் கொந்தளிப்பு

இந்தியப் படையினருக்கும் புலிகளுக்கும் இங்கே கடும் போர் மூண்டபோதும், தமிழ்நாட்டில் புலிகள் இயக்க அலுவலகம் இயங்கிவந்தது.

சென்னை அடையாறு இந்திரா நகரில் இருந்த புலிகள் இயக்க அலுவலகத்தில் கிட்டு, பேபி சுப்பிரமணியம் ஆகியோர் இருந்தனர். அலுவலகத்திற்கு காஸ்ரோ பொறுப்பாக இருந்தார்.

இந்தியப் படை- புலிகள் மோதல் ஆரம்பித்த பின்னர் சென்னையில் இருந்து பல பிரசுரங்களை வெளியிட்டனர் புலிகள்.

"இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏன் எதிர்க்கிறோம்?" என்பதற்கான விளக்கத்தை வெளியிட்டுவந்தனர்.

தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் புலிகளின் நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் நடந்துகொண்டார். அதுமட்டுமல்லாமல் புலிகளுக்கான நிதி உதவியும் எம்.ஜி.ஆரால் தொடர்ந்தும் செய்யப்பட்டது.

ஆனால் கலைஞர் கருணாநிதியோ எம்.ஜி.ஆரை இலங்கைத் தமிழர்களுக்கு எதிரானவராகச் சித்தரிக்கவே விரும்பினார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாக எம்.ஜி.ஆரும் ஒரு காரணம். இந்தியப் படையால் ஈழத் தமிழர்கள் கொல்லப்படவும் எம்.ஜி.ஆர்தான் காரணம் என்று தமிழக மக்களை நம்பவைக்க முற்பட்டார் கருணாநிதி.

தமிழகமெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

அக்டோபர் 15ம் திகதி சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியது தி.மு.க. கலைஞர் கருணாநிதிதான் அதற்குத் தலைமைதாங்கினார்.

"எம்.ஜி.ஆர். ஒரு மலையாளி. அதனால் தான் இலங்கையில் தமிழர்கள் வேட்டையாடப்படுவதையிட்டுக் கவலையில்லாமல் இருக்கிறார்" என்பதுதான் தி.மு.க. தொண்டர்களின் குற்றச்சாட்டு.

1987 அக்டோபர் 15ம் திகதி 'த வீக்' பத்திரிகைக்கு கருணாநிதி ஒரு பேட்டியளித்திருந்தார்.

கலைஞர் கருணாநிதியின் இன்றையப் பேச்சுக்களோடு அன்றைய நிலைப்பாட்டை ஒப்பிட்டுப் பார்க்கவும் இப்பேட்டி நமக்கு உதவும்.

### வாக்கெடுப்பு ஏன்?

கலைஞர் கருணாநிதியின் 'த வீக்' சஞ்சிகைக்கான பேட்டியிலிருந்து சில பகுதிகள்:

**யார் காரணம் என்று கருதுகிறீர்கள்?**

ப: போதுமான அனுபவமற்ற ராஜீவைத் தான் குற்றம்சாட்டுவேன். ஜயவர்த்தனா தனது நலத்துக்காக அவரைப் பயன்படுத்திவிட்டார். இந்த ஒப்பந்தம் உரிய முறையில் அமைக்கப்படவில்லை. வடக்குக்கிழக்கு மாகாணங்கள் இணைப்பது தொடர்பாக ராஜீவ் ஏன் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு ஒப்புக் கொண்டார்? ஈழம் தமிழர்களுக்குச் சொந்தமானது. அம்மக்களை அபிப்பிராய வாக்கெடுப்புக்குள் ஏன் உட்படுத்த வேண்டும்?

**கே: இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தாங்கள் தரும் ஆலோசனை என்ன?**

ப: இப்பொழுது உடனடியாக, நீண்டகாலத் தீர்வு பற்றி எனக்கு அக்கறையில்லை. IPKF தமிழர்களைக் கொல்வதைத் தடுக்கவேண்டும். பிரபாகரன் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கிறார். ஆகவே அவருடன் பேசட்டும். புலிகளை IPKF முடிவுகட்டிவிட்டால் அது ஒரு பெரிய சாதனையாகாது. இந்தியத் துருப்புக்கள் தங்களுடைய வலிமையைக் காட்ட வேண்டுமானால் சீனாவிடமிருந்து எமது பிரதேசத்தைத் திரும்ப மீட்கட்டுமே?

**கே: ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினர் ஒப்பந்தத்துக்கு ஒத்துழைப்புத் தருகிறார்களில்லையே?**

ப: ஒப்பந்தத்தை மீறியவர் யார்? ஜயவர்த்தனாவா அல்லது பிரபாகரனா? தமிழ் பிரதேசங்களில் இனிமேல் குடியேற்றம் இடம்பெறலாகாது என்கிறது ஒப்பந்தம். கிழக்கில் பெருந்தொகையான சிங்களக் குடியேற்றம் நடைபெறுவது தொடர்பாக ஒரு பட்டியலே என்னிடம் இருக்கிறது. எல்.ரி.ரி.ஈ.யினர் கைது செய்யப்பட்டமை, ஒப்பந்தம் மீறப்பட்டதற்கு மற்றுமொரு சான்று. அவர்கள் IPKFயிடம் கையளிக்கப்பட்டிருக்கவேண்டும். அல்லது பலாலியில் வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.



கலைஞர் தலைமையில் ஊர்வலம்

**கே: சிறிலங்கா நிலமை பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

ப: இந்தியா இப்போது மிகக் கொடூரமாகவும் இரக்கமற்ற முறையிலும் நடந்து கொள்ளுகிறது. தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்ட அமைதிப் படை இப்பொழுது தமிழர்களை வதைத்து அழிக்கிறது. இந்தியா பெரும் தவறு இழைக்கிறது; இது மாபெரும் குற்றமாகும் என்று பலர் கூறுகிறார்கள்.

**கே: இத்தகைய பிரச்சனைகளுக்கெல்லாம்**

### பிரபா தொடர்பு

ஆரம்பத்திலிருந்தே பிரபாகரன் தொடர்பு கொண்டு வந்திருக்கிறார். கொழும்பு ஒப்பந்தத்தை மீறுகிறது என்று பிரபாகரன் குற்றம் சாட்டி வந்திருக்கிறார். எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே அவருடைய தளபதி திலீபன் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். திலீபன் இறக்கும்வரை இந்திய அரசாங்கமோ சிறிலங்கா அரசாங்கமோ எதுவுமே செய்யவில்லை. தமிழர்களின் வலுவான கிளர்ச்சியின் பின்னரே இடைக் கால நிர்வாகத்துக்கு புலிகளுக்கு 7 அங்கத்தவர் தர ஒப்புதலளித்தனர். அப்போது இந்தியத் தூதர் (J.N.திக்ஷித்) பிரபாகரனிடம், அவருடைய சிபார்சின்படியே பிரதம நிர்வாகி நியமிக்கப்படுவார் என்று கூறினார். ஆனால், புலிகளால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**கே: முன்பு எல்.ரி.ரி.ஈ. தங்களுடைய உதவியை ஏற்க மறுத்தனர், பின்னர் ஏன் தங்களை நாடினர்?**

ப: அவர்கள் ஒரு நெருக்கடியிலிருந்தனர். அதனால்தான் என்னிடம் வந்தனர். என்னைப் பொறுத்தவரை, அவர்கள் என்னிடம் வந்தாலும்சரி வராவிட்டாலும்சரி, தமிழ்ப் போராளிகளுக்கு எனது ஒத்துழைப்பு இருந்து வந்திருக்கிறது. இரு வருடங்களுக்கு முன்னர் தி.மு.க. பொதுமக்களிடம் சேகரித்த பணத்தில் ஒரு பகுதியை எல்.ரி.ரி.ஈ. ஏற்க மறுத்துவிட்டது. ஏனெனில் தமிழ் நாடு அரசு சேகரித்த 3 கோடி ரூபாவை-எமது பணத்தை ஏற்றுக்கொண்டால்-தரப்போவதில்லை என்று எச்சரித்தது. அது எனக்குத் தெரிந்தமையினால் நான் அதனைப் பொருட்படுத்தவில்லை.

**கே: தமிழ் நாட்டில் 1966-67ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் காங்கிரஸ் வீழ்ச்சிக்குக் காரணமானது. சிறிலங்கா பிரச்சனையின் காரணமாக அ.இ.அ.தி.மு.க.வும் அதே கதியை அடையுமா?**

ப: அது என்னுடைய நோக்கமல்ல... எமது போராட்டங்கள் ஒப்பந்தத்துக்கு எதிராகத் தொடர்ந்து நடத்தப்படவில்லை. பிரபாகரனே ஒப்பந்தத்தை ஏற்று நடப்பதற்கு சிலகாலம் ஒப்புதல் அளித்திருந்தமையினால் நாங்கள் அமைதியாகவே இருந்தோம். ஆனால் இப்போது- தமிழர்கள் துன்பப்படும்போது அதனைப் பார்த்துக்கொண்டு எங்களால் சும்மா இருக்க முடியாது. அ.இ.அ.தி.மு.க. தனது தவறுகளாலேயே பதவியை இழந்துவிடும்.

இதுதான் கலைஞர் கருணாநிதி அளித்த பேட்டி. புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தன்னுடனும் தொடர்பு வைத்திருக்கிறார் என்பதை பெருமையுடன் கூறுவதில் கலைஞர் எத்தனை ஆர்வம் காட்டியிருக்கிறார் பார்த்தீர்களா?

மீண்டும் யாழ்ப்பாண நிலவரத்துக்கு செல்லுவோம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது– இராஜதந்திரி

# இராணுவ அழுத்தங்கள் மத்தியில் சாத்தியமாகாத அரசியல் தீர்வு!

இந்த ஆண்டு ஆரம்பமானது முதற்கொண்டு மாதமொரு தாக்குதல் என்ற ரீதியில் புலிகள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

கடந்த ஜனவரிமாதம் பரந்தன் இராணுவ முகாம் பலத்த தாக்குதலுக்குள்ளாகி நூற்றுக்கணக்கான படையினர் அங்கு கொல்லப்பட்டனர்.

அதனையடுத்து பெப்ரவரி மாதத்தில் கிழக்கில் மாவடிவேம்பு, வாழைச்சேனை



ஆகிய இடங்களில் படைமுகாம், பொலிஸ் நிலையம் ஆகியன தாக்குதலுக்குள்ளாகியதில் படையினரும், பொலிஸாரும் கொல்லப்பட்டனர்.

தற்போது மார்ச் மாதத்தில் ஏககாலத்தில் திருமலையில் சீனன்குடாவிலும், மட்டக்களப்பில் வவுணதீவிலும் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

இத்தாக்குதல்களில் சீனன் குடாவில் தரித்துநின்ற வை-12 சீனத்தயாரிப்பு விமானப்படை விமானமொன்று தாக்கியழிக்கப்பட்டது. அதனையடுத்து வவுணதீவு முகாம் தாக்கப்பட்டதில் படையினர் தரப்பில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளதாகத் தெரிகிறது. வழமைபோலவே அம் முகாமிலிருந்த ஆயுதங்களையும் எல்.ரி.ரி.ஈ.கெரில்லாக்கள் எடுத்துச்சென்றனர்.

விமானப்படை இரத்மலானை விமான நிலையத்தில் 'அன்டநோவ்' விமானமொன்றை இழந்த ஒருவார காலத்தில் திருமலையில் வை-12 ரக விமானம் புலிகளால் நாசமாக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்கென வாங்கப்படும் ஒவ்வொரு விமானமும் பல மில்லியன் டாலர்கள் பெறுமதி வாய்ந்தவையாகும்.

விமானப்படையின் துணை இல்லாவிடில் இராணுவத்துக்கு எந்த விதமான நகர்வையும் மேற்கொள்ளமுடியாது. படையினருக்கான விநியோகங்கள் கூட ஸ்தம்பிக்கும்.

இவைதவிர முகாமொன்று தாக்குதலுக்குள்ளானதும், முதலில் உதவிக்குவருவது சண்டை விமானங்களும், ஹெலிக்கொப்டர்களுமேயாகும். எனவே ஆயுதப்படையினர் பெரிதும் தங்கியிருக்கும் விமானங்கள் அடுத்தடுத்து அழிந்து செல்வது, படையினர் தரப்பில் பலத்த பாதிப்பையே ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

அண்மைக்காலங்களில் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் ஆயுதப்படையினரைத் திக்குமுக்காட வைத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஏககாலத்தில் இரு முகாம்களைத்தாக்கிப் பின்னர் படையினர் கவனத்தை திசைதிருப்பி ஏற்கனவே திட்டமிட்டவாறு தமது இலக்கைக் கச்சிதமாகப் புலிகள் தாக்கிவிடுகின்றனர்.

புலிகள் நடத்தும் தாக்குதல்களைப் படையினர், 'தாக்கி விட்டு ஓடும்முறை' என்றே குறிப்பிட்டு வந்தனர்.(Hit and run tactics)

எனினும் கெரில்லாப் போர்முறையின் பழைய உத்திகளையும், நம்நாட்டு சூழலுக்கும் தமது பலத்துக்கும் ஏற்ற புதிய உத்திகளையும் புலிகள் கையாண்டு வருகின்றனர்.

இத்தகைய தாக்குதல் முறை புலிகளின் கெரில்லா போர் முறை நன்கு வளர்ச்சியும், உத்வேகமும் பெற்றுள்ளதையே எடுத்துக்காட்டுகின்றது.

**கெரில்லாக்களின் தாக்குதல்களுக்கு அடிக்கடி அதிகளவில் படையினரைப் பலிகொடுக்கும் ஒரு நாடாகவே இலங்கை இருந்து வருகின்றது.**

உலகில் பல்வேறு நாடுகளிலும் கெரில்லாத் தாக்குதல்களுக்குப் படையினர் உள்ளாகின்றனர்.

ஆனால் இலங்கையில் போன்று இழப்புகள் நூற்றுக்கணக்கில் உலகில் எந்தவொரு இராணுவத்துக்கும் அண்மைக்காலங்களில் ஏற்படவில்லை.

சிலகாலத்துக்கு முன்னர், உலகிலேயே சிறந்த ஒரு கெரில்லா அமைப்பாக எல்.ரி.ரி.ஈ. காணப்படுகின்றதென வெளிநாட்டுச் சஞ்சிகையொன்று தெரிவித்திருந்தது. அச் சஞ்சிகையின் கணிப்புச் சரியாக இருப்பதையே எல்.ரி.ரி.ஈ. கெரில்லாக்கள் நடத்திவரும் தாக்குதல்கள் வெளிப்படுத்துகின்றன.

பெரும்பலத்துடன் நிலப்பிரதேசங்களைக் கைப்பற்றி, முகாங்களைப் படையினர் போடலாம். ஆனால் அம் முகாம்களில் அவர்களால் நீண்டநாட்கள் நிலை கொள்ள முடியாதென்பதையே வடக்கு-கிழக்குப்பகுதிகளில் இடம்பெற்றுவரும் கெரில்லாத் தாக்குதல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

கனரக வாகனங்கள், ஆட்டிலறிப் பீரங்கிகள் என்பவற்றோடு விமானங்களின் துணையுடன் பெரும் எடுப்பிலான மரபு வழி யுத்தத்தை படையினர் நடத்தலாம். இந்த யுத்தத்துக்கு புலிகளால் முகங்கொடுப்பதுகூட கடினமாகவே இருக்கும்.

ஆனால் மறு புறத்தே புலிகள் மேற்கொள்ளும் கெரில்லாத்தாக்குதல்கள் காரணமாக இராணுவத்தினரால் ஒரு கட்டுக்கோப்பான பலத்தைக் கொண்டிருக்க முடியாமலே இருக்கும்.

உலகின் முக்கிய இராணுவங்களில் ஒன்றே இந்திய இராணுவமாகும். இலங்கையில் சுமார் இருவருடகாலம் பெருமளவிலான ஆளணிகளுடன் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்தது.

ஆயினும் புலிகளின் கெரில்லாத்தாக்குதல்களுக்கு ஈடு கொடுப்பது இந்திய இராணுவத்துக்கு பெருஞ்சிரமமாகவே இருந்தது.

இருந்தபோதிலும், இந்திய இராணுவம் புலிகளின் தாக்குதல்களுக்குத் தாக்குப்பிடிக்குமளவுக்கு அதன் முதிர்ச்சி, அனுபவம் என்பன காணப்பட்டன.

**ஆனால் இலங்கை இராணுவத்தினால் நீண்ட காலத்துக்கு புலிகளின் தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிப்பது இயலாத காரியமாகவே இருக்கும்.**

**ஏனெனில் ஒரு பலம்மிக்க இராணுவத்தைப் பேணுவதற்கு பெருமளவிலான பொருளாதாரப் பின்னணியொன்று இருக்கவேண்டியதாகின்றது.**

வியட்நாமில் அமெரிக்கா பல வருடங்கள் நிலைகொண்டிருந்தது. அதற்கு அந்த நாட்டின் பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சி என்பன துணைபோயின.

அமெரிக்க இராணுவம் வியட்நாமில் தோல்வியைத் தழுவி வெளியேறியிருந்தது. அத்தோல்வியினால் அமெரிக்காவுக்கு கௌரவப் பிரச்சினை மட்டுமே தோன்றியதேதவிர, அதன் பொருளாதாரத்தில் எவ்வித தளம்பல் நிலையும் காணப்படவில்லை.

உலகில் கெரில்லா யுத்தங்களுக்கு முகங்கொடுக்கும் நாடுகள் அந்த யுத்தங்களை நீடிக்க விரும்புவதில்லை. ஏனெனில் அதுவோர் அர்த்தமற்ற யுத்தமாக நீடித்துச் சென்று உயிரழிவையும், பொருள் விரயத்தையுமே ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.

இலங்கையின் ஆயுதப்படைகளைச் சேர்ந்த தளபதிகள், யாழ்ப்பாணக்குடாநாட்டைக் கைப்பற்றியதையும், வேறு விஸ்தரிப்புக்களை மேற்கொண்டதையும் பற்றி நிறையவே கூறிவருகின்றனர்.

ஆனால் உண்மையான யுத்தத்துக்கு இனிவருங்காலங்களிலேயே முகங்கொடுக்க வேண்டியிருக்கும்.

புதிய முகாம்கள் போடப்படுவதும், பின்னர் அம் முகாம்கள் புலிகளினால் அழிக்கப்படுவதும் ஒரு தொடர்கதையாகவே நீடித்துச்செல்லும்.

**கடந்த ஆண்டில் சுமார் 50 பில்லியன் ரூபாக்களை யுத்தத்துக்காக இலங்கை ஒதுக்கியிருந்தது. ஆனால் பெருகிச் செல்லும் படையினர் தரப்பு இழப்புகளை நோக்கும்போது, கடந்த ஆண்டின் செலவைவிட மேலும் அதிகளவில் இனிவரும் காலங்களில் யுத்தச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்குமென்பதையே ஊகிக்க முடிகின்றது.**

கடந்தவாரம் ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியல் தீர்வு பற்றி மீண்டும் கூறியிருந்தார்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை நாட்டில் அமுலாக்கி, வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக ஜனாதிபதி தமது ரூபவாஹினிப் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

**அப்பேட்டியில், வடக்கு-கிழக்குத் தமிழ் மக்கள் பாரதூரமான அரசியல் பிரச்சினையைக் கொண்டுள்ளார்கள் என்பதை தாமும், இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எனவும் ஜனாதிபதி கூறினார்.**

அதேசமயம், தமிழ்மக்களைப் புலிகளுக்கு ஆதரவாகச் செல்லும் மனப்பாங்கைக் கொண்டிருக்கவேண்டாமெனவும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி சந்திரிகா, ரூபவாஹினியில் புலிகளுக்கு ஆதரவாக இருக்கவேண்டாமெனக் கூறியிருந்தார்.

ஆனால் ஆட்சிப்பீடத்துக்கு வரமுன்னர் ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது கட்சிக்காரர்களும் புலிகளின் நிலைப்பாட்டை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டு அதனை நியாயப்படுத்தியிருந்தனர்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை புலிகளுடனேயே நடத்த வேண்டும். ஏனெனில் பலம்மிக்க போராட்ட சக்தியாக அவர்களே இருக்கிறார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியிருந்தார்.

எனவே ஜனாதிபதி அன்று குறிப்பிட்டது போல இன்றுங்கூட புலிகளே பலம்மிக்க போராட்ட சக்தியாக இருந்து வருகிறார்கள்.

**இந்நிலையில் அவர்களை ஓரந்தள்ளிவிட்டு ஒரு தீர்வை நோக்கிச் செல்ல முடியாதென்பது முன்பைவிட தற்போது மேலும் உறுதியாகிவிட்டுள்ளது**

தேர்தல் பிரசாரக் களங்களில் பேசும்போது, இனப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் ஆயிரமாயிரம் பிரபாகரன்கள் தோன்றிக்கொண்டே இருப்பார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா கூறிவருகின்றார்.

மறுபுறத்தே, எல்.ரி.ரி.ஈ.யினர் பயங்கரவாதிகள், அவர்களது நிலைப்பாடு தவறானது என்றும் ஜனாதிபதியே கூறிவருகின்றார்

இந்நிலையில் எல்.ரி.ரி.ஈ.யினர்பற்றி ஆட்சியாளரே ஓர் உறுதியான-தளம்பலற்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

ஜனாதிபதியாக வந்ததும், எல்.ரி.ரி.ஈ. தலைவரை, மிஸ்டர் பிரபாகரன் என்று கூறிய ஜனாதிபதியே தற்போது அவரைப் பயங்கரவாதி என்றும் கூறுகிறார்.

அரசியல் தீர்வு என்ற விடயம் முழுஅளவில் அரசியல் சார்ந்ததாக மட்டும் இருக்கவில்லை. இராணுவ அழுத்தங்களால் அரசியல் முனைப்புகளும் நெருக்குதல்களுக்குள்ளாகியுள்ளன.

ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வைக் கொண்டுவரலாம். ஆனால் வடக்கு-கிழக்குப் பிரச்சினை இராணுவ அழுத்தங்களிலிருந்தும் விடுபடாதவரை எந்தவொரு அரசியல் தீர்வும் வெற்றிபெறும் என எதிர்பார்ப்பது மடமையே.

# ஈழத்தமிழர்- ஈழப்புலிகள்- தமிழகம்!

**இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்திய மத்திய அரசினதும், தமிழக மாநில அரசினதும் பாராமுகம் தொடர்பாக தமிழகத்தில் சர்ச்சைகள் உருவாகத் தொடங்கியுள்ளன. இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக தமிழக தினசரி 'தினமணி'யில் வெளியான விவாதமேடையில் எஸ்.எம்.கார்மேகம் எழுதிய கண்ணோட்டம் இது:**

தமிழ்நாட்டில் தி.மு.க.1967–ல் ஆட்சிக்கு வந்தது ஈழத்தமிழர் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. அதனை ஒடுக்க அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் மேற்கொண்ட பல அடக்குமுறை நடவடிக்கைகள் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் விடுதலை வேட்கை உணர்வுக்கு வித்திடத் தவறவில்லை.

"மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" என்று தி.மு.க. கோரியதுபோல இலங்கைத் தமிழர் தலைவர்களும் "தமிழ் மக்களின் பாரம்பரியத் (வட, கிழக்கு) தமிழ் மண்ணில் தமிழ் மக்களின் தேசிய இனசுயாட்சி, தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து" கேட்டு குரல் கொடுக்கத்துவங்கினர். அவர்களது அறப் போராட்டங்களை தமிழ் நாட்டில் தி.மு.க. ஏடுகள் வரவேற்று ஆதரித்து உற்சாகப்படுத்தின.

தி.மு.க. தலைவர்களின் ஆதரவைப் பெற ஈழத்தமிழர் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம் உள்ளிட்ட பலரைக் கொண்ட ஈழத் தமிழர் அரசியல் தூதுக்குழு 1972 பெப்ரவரியில் தமிழ் நாட்டுக்கு வந்தது. இக்குழு தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் விரிவான சுற்றுப்பயணம் செய்து ஈழத்தமிழர் உரிமைப் போராட்டங்களைப் பற்றி விளக்கிப் பேசியது. தமிழக முதல்வர் மு.கருணாநிதி, ஆளுநர் கே.கே.ஷா, எம்.ஜி.ஆர்.,காமராஜர், பக்தவத்சலம், காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிபு என பல தலைவர்களையும், அரசியல் குழுக்கள், மாணவர் தலைவர்களையும் சந்தித்து ஆதரவு திரட்டியது.

## செல்வா விளக்கம்

சென்னை கோகலே மண்டபத்தில், அன்றைய மேயர் காமாட்சி ஜெயராமன் தலைமையில் ஈழத் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட பொது வரவேற்பில் தங்களது தமிழக விஜயத்தின் நோக்கம் பற்றி ஈழத் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் விளக்கிப் பேசினார்.

"எந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சியோடும் தனிப்பட்ட உறவை வளர்த்துக் கொள்ள நாம் இங்கு வரவில்லை. ரத்த பாசத்தினால் பிணைக்கப்பட்ட ஒரே இனம் என்ற முறையில் தமிழக மக்கள், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து

**வங்கதேசத்தை இந்தியா பிரித்துக்கொடுத்த மாதிரி தமிழ் ஈழத்தையும் இந்தியா பிரித்துக் கொடுக்கும் என் ஈழத்தமிழர் எதிர்பார்க்கவில்லை. தங்கள் பாரம்பரிய மண்ணில் மானத்தோடும் மரியாதையோடும் சிங்கள மக்களுடன் சம உரிமையுடனும் வாழவே அவர்கள் விரும்புகிறார்கள்.**

அரசியல் கட்சிகள், அவர்கள் மூலம் இந்திய அரசின் தார்மீக ஆதரவை நாடுகிறோம். மனித உரிமைகளுக்காக ஈழத் தமிழ்த் தேசிய இனம் விரைவில் துவங்கவிருக்கும் தர்ம யுத்தத்துக்கு ஆதரவு கோரி தமிழ்நாட்டுக்கு வந்தோம். இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை" என்று அப்போது அவர் சொன்னார்.

அதன்பிறகு ஈழத் தமிழ்த் தலைவர்கள் மீது சிங்கள அரசு பல அடக்குமுறை நடவடிக்கைகளை ஏவிவிட்டது. 1974-ல் பிரதமர் இந்திரா காந்தி இலங்கை சென்றிருந்தபோது அவரைச் சந்திக்கக்கூட இத்தலைவர்களை சிங்கள அரசு அனுமதிக்கவில்லை.

ஈழத்தமிழர் போராட்டம் கடுமை அடையத்துவங்கியதும், தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியும், அ.தி.மு.க. தலைவர் எம்.ஜி. ராமச்சந்திரனும் போட்டி போட்டுக் கொண்டு அப்போராட்டத்துக்கு நேசக்கரம் நீட்டினர்.

## தி.மு.க. தீர்மானம்

1983–ல் இலங்கையில் தமிழர் இனப் படுகொலை செய்யப்பட்டபோது– 27.8.1983ல் தி.மு.க. பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானம் வரலாற்றுச் சிறப்புக்குரியது.

"அண்மையில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையை அடுத்து இலங்கைத் தமிழர், தமது பண்பாடு, மொழி, தனித்துவம், வாழ்வியல்முறை போன்றவற்றைப் பேணி ஒரே கொடியின் கீழ் வாழ்வதென்பது முடியாத காரியம். எனவே ஈழத் தமிழர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைக்கு தமிழீழம் ஒன்றே நிலையான தீர்வு எனப் பொதுக்குழு கருதுகிறது. இந்நிலையில் அத்தமிழ் ஈழம் அமைவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்துக்கும் இனி தி.மு.க. பொதுக்குழு முழு ஆதரவு அளிக்கும்" என்று அத்தீர்மானம் கூறியது.

பிரதமர் இந்திரா காந்தி, இந்தியாவுக்கு எதிரான சர்வதேச சக்திகளுடன் கூடிக்குலாவிக் கொண்டிருந்த இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜயவர்த்தனவை வழிக்குக் கொண்டுவர, ஈழத் தமிழர் பிரச்சினையை ஆயுதமாக ஏந்தினார்.

ஈழத்தமிழ்த் தலைவர்கள் இந்திராவிடம் சரணடைந்தனர். அன்றையத் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும்கூட இந்திராவின் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருந்தார்.

இந்திராவின் படுகொலை ஈழத்தமிழரின் துரதிருஷ்டமாகவும் சிங்கள அரசின் அதிர்ஷ்டமாகவும் அமைந்தது. அந்த உற்சாகத்தில் சிங்கள அரசு யாழ்ப்பாணத்தில் தமிழரை ஆயுத முனையிலும் பட்டினிபோட்டும் அழித்தொழிக்க முற்பட்டபோது அன்றையப் பிரதமர் ராஜீவ் காந்தி உதவிக்கு விரைந்தார்.

தமிழர்க்கு உரிமை கிடைக்க இலங்கை அதிபர் ஜயவர்த்தனாவுடன் ஒப்பந்தமும் செய்து கொண்டார். சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளின் ஒப்புதல் இல்லாமலேயே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அது என்று கூறி தமிழ்ப் போராளிகள் அதனை நிராகரித்தனர்.

இலங்கையைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட மக்களின் ஒப்புதலின்றியே இந்தியா ஒப்பந்தம் செய்துகொண்டது அதுதான் முதல் தடவை அல்ல. இந்தியத் தமிழர் விஷயத்தில் அவர்களது கருத்தைக் கேட்காமலேயே நேரு காலத்தில் இருந்தே இலங்கை அரசுடன் பல ஒப்பந்தங்களை இந்தியா செய்து கொண்டது. அவை அனைத்தும் தோல்வியில் தான் முடிந்தன.

ராஜீவ் கொலைக்குப் பிறகு இந்தியாவினதும், தமிழகத்தினதும் நிலை திசை மாறிப்போனது.

## புலிகள் இல்லாமல்

ஈழத் தமிழர் பிரச்சினை என்பது ஈழப் புலிகள் பற்றிய பிரச்சினை அல்ல. இரண்டையும் ஒன்றுபடுத்திக் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஈழப்புலிகளின் பங்களிப்பு இன்றி ஈழத்தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த முடியாது, என்பதுதான் யதார்த்த நிலை.

ஒருவகையில் பார்த்தால் ஈழத்தமிழர் பிரச்சினை தீவிரமடைய தி.மு.க.ஒரு மறைமுகக் காரணம். தி.மு.க.வின் நேசக்கரம் ஈழத்தமிழரை எழுச்சி பெறச் செய்த அதே நேரத்தில் சிங்கள அரசுகளை அச்சப்படச் செய்தது என்பதை மறந்துவிடக்கூடாது. அந்த அச்சத்தின் விளைவுகளே சிங்கள அரசுகளின் அடக்குமுறை நடவடிக்கைகள்.

ஈழத்தமிழர் இன்று இந்தியாவினதும் தமிழகத்தினதும் ஆதரவையே நம்பி இருக்கிறார்கள். வங்கதேசத்தை இந்தியா பிரித்துக் கொடுத்த மாதிரி தமிழ் ஈழத்தையும் இந்தியா பிரித்துக் கொடுக்கும் என ஈழத்தமிழர் எதிர்பார்க்கவில்லை. தங்கள் பாரம்பரிய மண்ணில் மானத்தோடும், மரியாதையோடும் சிங்கள மக்களுடன் சம உரிமையுடனும் வாழவே அவர்கள் விரும்புகிறார்கள்.

தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு- தங்களுக்கு விடிவு காலம் பிறக்கும் என்று முழு மனதுடன் அவர்கள் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த நம்பிக்கையைத் தமிழகம் விரைந்து நிறைவேற்ற முடிந்தால் தமிழகத்துக்குப் பெருமை. அதற்கு என்ன வழி என்று அனைத்துத் தமிழக அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்து அதற்கேற்றபடி தி.மு.க.அரசு செயல்படுவது காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

முதல்வர் கருணாநிதி தமது காலத்திலேயே ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடிந்தால் வரலாறு அவரை வாழ்த்தும்.



படிப்பகம்

www.padippakam.com

**கடந்த வாரம்**

பூலான் தேவிக்கு விக்கிரம் மல்லா துப்பாக்கிசுடும் பயிற்சி கொடுக்கிறான். விக்கிரம் மல்லாவின் கூட்டத்தாரைப் பிடிக்க பொலிசார் வருகின்றனர். பொலிஸ் கோஷ்டியை தந்திரமாக தமது வலையில் சிக்கவைக்க வியூகம் வகுக்கிறான் விக்கிரம் மல்லா. சண்டை நடக்கிறது **இனி......**

# கொள்ளை ராணி பூலான் தேவி


பூலான்

35

தருவது ரசிகன்

நாங்கள் பதுங்கியிருந்த பக்கமாக நாய் பாய்ந்துவந்ததைக் கண்டதும் மல்லாவின் திட்டங்கள் யாவும் பயனற்றுப் போய்விட்டன என்றுதான் நினைத்தேன்.

மாது சிங் ஆட்கள் பொலிசாருக்கு போக்குக் காட்டிக்கொண்டு அவர்களை நாம் தாக்க வசதியான இடத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

பரத் சிங் ஆட்கள் திடீரென்று பக்கவாட்டில் இருந்து பொலிசாரைத் தாக்கத் தொடங்குவர். பொலிசார் அவர்களை நோக்கி திரும்பும்போது நாங்கள் பாய்ந்து தாக்க வேண்டும் என்பதுதான் மல்லாவின் திட்டம்.

எமது ஆட்களில் ஒருவன் அவசரப்பட்டு வெளியே தலை நீட்டியதால் அதனைக் கண்டுவிட்ட நாய் நாங்கள் இருந்த பக்கமாக வெறியோடு பாய்ந்து வந்தது.

பெரிய காதுகள் வளைந்திருக்க, கொழுத்த உடலோடு நாக்கைத் தொங்கப் போட்டபடி அந்த நாய் பாய்ந்துவருவதைப் பார்க்க எனக்குப் பயமாகிவிட்டது.

நாய் பாய்ந்து வரத்தொடங்கியதால் அது வந்த திசையில் நீட்டிய துப்பாக்கிகளுடன் பொலிசாரும் ஓடிவரத் தொடங்கினார்கள்.

நாய் இப்போது நாங்கள் பதுங்கியிருந்த குன்றின் அருகே வந்துவிட்டது.

இன்னமும் சில அடிகள் எடுத்து வைத்தால் நம்மில் ஒருவர்மீது பாய்ந்துவிடும்.

பார்க்கவே பயமாக இருந்தது. என் நெஞ்சுக்குள் படக் படக் என்று அடித்தது. துப்பாக்கியைப் பிடித்திருந்த கரம் வெட வெடவென்று நடுங்கியது.

மனித நாய்களைக் கண்டுகூட நான் இப்படிப் பயந்ததில்லை.

இத்தனை பெரிய, பயங்கரமான கொழு கொழு நாயை நான் இவ்வளவு கிட்டத்தில் பார்ப்பது இதுதான் முதற் தடவை.

அது குரைக்கும் சத்தமே காதுக்குள் பயங்கரமாகக் கேட்டது.

நான் மல்லாவைத் திரும்பிப் பார்த்தேன்.

நான் பார்க்கும்போதுதான் மல்லா தன் துப்பாக்கியை உயர்த்தி எதிரே பாய்ந்துவரும் நாயைக் குறிவைத்தான்.

மல்லாவிடம் பதட்டமோ, பயமோ சிறிதளவும் தெரியவில்லை.

எல்லோருமே துப்பாக்கிகளைத் தயாராக வைத்தபடி மல்லாவின் உத்தரவுக்காகக் காத்துக்கொண்டு பதுங்கியிருந்தார்கள்.

மல்லாவின் துப்பாக்கியில் இருந்து தோட்டா சீறிப் பாய்ந்துவிட்டது என்றால், நாங்களும் துப்பாக்கிகளை சீறவைக்க வேண்டும். அதுதான் 'சிக்னல்'.

நாய் பாய்ந்து பாய்ந்து எங்கள் அருகே.. மிக மிக அருகே...

ஐயோ.. இது என்ன மல்லா ஏன் சுடாமல் இருக்..

ஐயோ நாய் கிட்டத்தில்...

"டுமீல்!"

மிகத் துல்லியமான சூடு. மிகவும் நிதானமாக, எவ்வித பதட்டமும் இல்லாமல் குறிவைத்து, விசையைத் தட்டியிருக்கிறான்.

குட்டிப் பிசாசு மாதிரிப் பாய்ந்து வந்த நாயின் தலை சிதறியது.

ஒரு மரண முனகலோடு நாய் சுருண்டு விழுந்தது.

மல்லா திடீரென்று எழுந்து முன்னோக்கி. ஓடினான்.

சுட்டுக்கொண்டே ஓடினான். நானும் எழுந்து ஓடினேன்.

என் பின்னால் இருந்தவர்களின் துப்பாக்கிகள் பொலிசாரை நோக்கிச் சீறத் தொடங்கிவிட்டன.

"கொல்லுங்களடா..! சுடுங்களடா!" வெறிபிடித்தவன்போல மல்லா கத்திக் கொண்டே சுட்டுக் கொண்டிருந்தான்.

முன்னே பாய்ந்து தாவிய மல்லா மற்றொரு மலை இடுக்கின் மறைவில் இப்போது பதுங்கிக்கொண்டு பொலிசாரை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தான்.

நான் மல்லாவின் முதுகுக்குப் பின்னால் குந்தியிருந்தேன்.

நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. சுடலாம்தான்: ஆனால் ஏனோ தயக்கமாக இருந்தது.

மல்லா சட்டென்று என்னைத் திரும்பி பார்த்தான். அதே வேகத்தில் முகத்தை திருப்பிக் கொண்டு பொலிசாரை நோக்கி குறிபார்த்தபடியே எனக்குக் கட்டளையிட்டான்.

"பயப்பிடாதே சுடு! காக்கிச் சட்டைகளை இரத்தத்தில் குளிப்பாட்டு. உன்னை துரத்தித் துரத்தி கடித்தவர்கள்தான் எதிரே நிற்கிறார்கள். சுடு!"

மல்லாவின் கட்டளையும், அவன் வாயிலிருந்து வந்த சொற்களும் எனக்குள் நாடி நரம்பெல்லாம் தூண்டப்பட்டது போல, இரத்தமெல்லாம் சூடானதுபோல உணரச் செய்தன.

எனக்கு இப்போது மல்லாவைத் தெரியவில்லை. இதுதான் எனது முதலாவது சண்டை என்பதும் அதன் காரணமாக எழுந்த தயக்கமும் போன இடமும் தெரியவில்லை.

துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு மல்லாவின் வலது புறமாக சென்று பதுங்கிக் கொண்டு குறிபார்த்தேன்.

எங்கள் ஆட்களின் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து ஐந்தாறு பொலிஸ்காரர்கள் விழுந்து கிடந்தார்கள்.

பொலிஸ்காரர்களும் ஆங்காங்கே மலை இடுக்குகளுக்குள் மறைந்து கொண்டுதான் இப்போது எம்மை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்தனர்.

திடீரென்று துப்பாக்கிச் சத்தங்கள் முன்னிலும் பார்க்கப் பயங்கரமாகக் கேட்கத் தொடங்கின.

"ஜே. ஜே" மல்லா உற்சாகக் குரலில் கத்தினான்.

நான் முதன் முதலாக சண்டையில் ஈடுபடுவதால் துர்க்காதேவியை மனதில் நினைத்துக் கொண்டு துப்பாக்கி விசையை அழுத்தினேன்.

'டுமீல்'

தோட்டா பறந்து சென்று எதிரே இருந்த மலைக்குன்றில் பட்டது. அந்தக் குன்றின் மறைவில் இருந்து ஒரு பொலிஸ்காரன் எம்மை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தான்.

அவனைத்தான் சுட்டேன். குறி பிசகியதால் குண்டு குன்றில் பட்டுத் தெறித்தது.

மல்லா உற்சாகக் குரல் கொடுத்த காரணம் எனக்கும் புரியத் தொடங்கியபோது நானும் என்னை மறந்து 'ஜே.ஜே' என்று கத்தினேன்.

மாது சிங் ஆட்களும், பரத் சிங் ஆட்களும் பொலிஸ் கோஷ்டியை பின்புறமாக வந்து வளைத்துக் கொண்டார்கள்.

அவர்களின் துப்பாக்கிகள் வெடித்த ஓசைகளும் சேர்ந்து பயங்கர சத்தமாக அப்பிரதேசத்தையே அதிரவைத்துக் கொண்டிருந்தது.

எமது கை ஓங்கி வருவதை அறிந்ததும் பொலிஸ் கோஷ்டிக்கு பயம் பிடித்துக் கொண்டது போலும்.

ஏற்கனவே அவர்களில் நான்கு ஐந்துபேர் பலியாகிவிட்டார்கள்.

எங்களை நோக்கி முன்னேறிய பொலிஸ் கோஷ்டி இப்போது பின்வாங்கத் தொடங்கியது. தங்களை நாங்கள் யாரும் நெருங்கவிடாமல் சுட்டுக்கொண்டு பின்வாங்கத் தொடங்கினார்கள்.

அப்படிப் பின்வாங்கிய பொலிஸாரில் சிலர் மாது சிங், பரத் சிங் ஆட்களிடம் வகையாகச் சிக்கிக் கொண்டு குண்டு வாங்கி செத்து வீழ்ந்தார்கள்.

ஒரு மலை இடுக்கிலிருந்து இன்னொரு மலை இடுக்கை நோக்கி ஓடிய பொலிஸ்காரன் ஒருவனை நான் கண்டுவிட்டேன்.

"டேய்ய்ய்" என்று கத்திக் கொண்டே சுட்டேன்.

சூடென்றால் சூடு.

குறி தப்பவில்லை.

ஐயோ துர்க்கையம்மா உனக்கு நன்றியம்மா.

நான் சுட்டது அந்தப் பொலிஸ்காரனின் விலாவில் பட்டிருக்க வேண்டும்.

தன்கையில் இருந்த துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு விலாவைப் பிடித்தபடி, "யம்மா.." என்று அவன் கத்தியது என் காதுகளில் கேட்டது.

அவன் ஒரு புறமாய்ச் சரிந்து சுருண்டு விழுந்தது என் கண்களில் தெரிந்தது.

மல்லாவும் அக்காட்சியைக் கண்டுவிட்டான்.

"அதுதான், அப்படித்தான். விடாதே.. பூலான்.." என்று குரல் உயர்த்திக் கத்தினான்.

என்னைவிட அவனுக்குத்தான் என் செயல் கண்டு அளவற்ற மகிழ்ச்சிபோலும்.

பொலிஸ் கோஷ்டி உயிர்தப்பினால் போதும் என்று தலைதெறிக்க பின்வாங்கி ஓடியது.

இரண்டுமணி நேரம்வரை பொலிஸ் கோஷ்டிக்கும் எங்களுக்கும் இடையே அந்தச் சண்டை நடந்தது.

பொலிஸ் கோஷ்டியில் எல்லாமாக எட்டுப்பேர் செத்துக் கிடந்தனர். உடம்பெல்லாம் துப்பாக்கிக் குண்டுகள் பொத்தல் பொத்தலாகத் துளைத்திருந்தன.

இரத்த வெள்ளத்தில் வாய்பிளந்து, கண்கள் திறந்து குத்திட்டபடி கிடந்த பொலிஸாரைப் பார்த்தபோது எனக்குக் கொஞ்சம்கூட இரக்கமோ அனுதாபமோ வரவில்லை.

எங்கள் கிராமத்தில் மரணச் சடங்குகள் நடந்தால் ஆளாளுக்கு ஒப்பாரி வைப்பார்கள். எனக்குப் பாவமாக இருக்கும்.

என் அம்மா அப்பா செத்துப்போனால் எனக்கு எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்த்துக் கொள்வேன். அழுகை வந்துவிடும்.

"செத்துப்போகாமல் இருக்க முடியாதா? ஏன் சாகவேண்டும்?" என்று ஒருநாள் அம்மாவிடம் கேட்டேன். "போடி அசடு" என்று அம்மா பொசுக்கென்று சிரித்துவிட்டாள்.

சாவு வீடுகளுக்கு சென்றுவிட்டு வந்தால் அன்று முழுக்க எனக்கு சாப்பாடு இறங்காது. செத்துப் போனவர்களை நினைக்க நினைக்க பாவமாக இருக்கும்.

ஆனால், இப்போது எட்டுப்பேர் செத்துக் கிடக்கிறார்கள். வெள்ளம்போல இரத்தத்தில் கிடக்கிறார்கள்.

எனக்கு இரக்கமே வரவில்லை. நான் மாறித்தான் போனேன்.

நானாகவா மாறினேன்; மாறவைத்தது இவர்கள்தானே! என்று நினைத்தேன்.

பிணங்களையெல்லாம் தூக்கிக் கொண்டு போய் எரிக்கச் சொன்னான் மல்லா.

பலியான பொலிஸ்காரர்களிடமிருந்து எட்டுத் துப்பாக்கிகளும், தண்ணீர் புட்டிகளும், தொலைநோக்கிக் கருவிகள் இரண்டும் எங்களுக்குக் கிடைத்தன.

தப்பியோடிய பொலிஸ்காரர்களை துரத்திச் செல்ல முற்பட்ட மாது சிங் ஆட்களை மல்லா தடுத்துவிட்டான்.

"ஓடட்டும், நம்மைப் பற்றி தங்கள் சகாக்களுக்கு, பயத்தோடு விபரிக்கட்டும். அப்போதுதான் இனிமேல் மல்லாவின் ஆட்கள் என்றால் பின்கால் பிடறியில்பட ஓடுவார்கள்!" சொல்லிவிட்டு உரத்துச் சிரித்தான் மல்லா.

அதற்கு முன் மல்லா இப்படிச் சிரித்து நான் பார்த்ததில்லை.

என்னை நோக்கிய மல்லா "பூலான் வா இங்கே!" என்று அழைத்தான்.

ஏன் அழைக்கிறான் என்று யோசித்தபடியே அருகில் சென்றேன்.

மல்லாவின் கையில் ஒரு நீளமான சிகப்புத் துணி இருந்தது. தன் துப்பாக்கியை அருகில் நின்ற பரத் சிங்கிடம் தந்துவிட்டு,

அந்த சிகப்புத்துணியை என் தலையில் நெற்றியைச் சுற்றி குறுக்காகக் கட்டினான் மல்லா.

கட்டியவன் சட்டென்று "பூலானுக்கு ஜே" என்று கத்தினான். ஏனையோரும் அவனைத் தொடர்ந்து கத்தினார்கள்.

எனக்கு புல்லரித்தது.

எனக்கு வெட்கமாக இருந்தது.

(தொடர்ந்து வரும்)

## ஜெயலலிதாவின் ஒருதலைக் காதல்


பட்டோடி


ஜெயலலிதா

ஜெயலலிதா சினிமாவுக்கும், அரசியலுக்கும் வருவதற்கு முன்னர் விளையாட்டுக்களில்தான் ஈடுபாடாக இருந்தார். ஜெயலலிதாவுக்கு மிகவும் பிடித்தமானது கிரிக்கெட். கிரிக்கெட்டை மட்டுமல்ல, கிரிக்கெட் வீரர் ஒருவரையும் மனதார- ஒரு தலையாக லவ் அடித்தார் ஜெயலலிதா என்றால் நம்புவீர்களா?

பல வருடங்களுக்கு முன் 'குமுதம்' சஞ்சிகையில் ஜெயலலிதா எழுதிய கட்டுரைத் தொடரில் அவரே எழுதியிருப்பதைப் பாருங்கள்.

"எனக்குப் பதினைந்து பதினாறுவயது இருக்கும் போதுதான் சில மென்மையான பெண்மை உணர்வுகள், காதல் எண்ணங்கள் எல்லாம் வந்தன. ஆனாலும் அந்தக் காலத்தில் ரொம்பத் தைரியம் கிடையாது.

எங்க மோகம் எல்லாம் கிரிக்கெட் பிளேயர்ஸ்கிட்டேதான். என்னுடைய இரண்டு ஹீரோக்கள் அப்போது யார் தெரியுமா?

கிரிக்கெட் கப்டன் நாரி கன்ட்ராக்டர், அடுத்தது மன்சூர் அலிகான் நவாப் ஒப் பட்டோடி.

எனக்காகப் பணம் செலவழிச்சு பெவிலியன் டிக்கெட் வாங்கி அம்மா என்னை அனுப்புவாங்க. மாட்சிலே கூட மாட்ச் பார்க்காமல், பட்டோடியையே பைனாகுலரிலே பாலோ பண்ணிட்டே இருப்பேன்.

என்கூட வரும் சித்தி வித்தியாவதி "என்ன நீ மாட்சை பாலோ பண்ணாமல் பட்டோடியை பாலோ பண்ணிக்கிட்டிருக்கே?" என்பார். "ஐ ஆம் கிரேசி எபவுட் ஹிம். அதுதான் அவரையே பார்த்துக்கிட்டிருக்கேன். உனக்கென்ன?" என்று கேட்பேன்.

பட்டோடி போட்டோவை வாங்கி வீட்டிலே என்னுடைய பிரைவேட் பெட்டியில் இரகசியமாக வைத்திருந்தேன். வீட்டில் யாருக்குமே தெரியாது. பேப்பரிலே பத்திரிகையிலே பட்டோடி போட்டோ வரும்போது அதைக் 'கட்' பண்ணி ஒரு 'ஸ்கிராப்புக் ஆல்பம்' மாதிரி ஒட்டி வைப்பேன்.

சில சமயம் அம்மாவோ, தாத்தாவோ படிக்கறதுக்கு முன்னாடி கட் பண்ணிட்டேன்னா வீட்டிலே அவங்க கத்துவாங்க. அப்படித்தான் இந்த விஷயம் அவங்களுக்குத் தெரிஞ்சது.

பள்ளியில் பான்சி பேட் நடக்கும்னு சொன்னேன். இல்லையா? பக்கத்திலே இருக்கிற ஸ்கூல், காலேஜ் பையன்கள் எல்லாம் அதற்கு வருவாங்க.

அவங்ககிட்ட போய் பேசறதுக்கு தைரியம் இருக்காது! வெட்கம்!

'ஹௌ ஸ்விட் ஹி இஸ் ஜஸே!' 'ஹௌ ஹேன்ட்ஸம் ஜஸே' என்று எங்களுக்குள் பேசிட்டிருப்போம்.

அவன் பேசவந்தால் என்ன பேசறதுன்னு பிளான் பண்ணிப்போம். யாராவது ஒருத்தன் கிட்டேவந்து பேசினால் பேச வராது. "ஹி..ஹி.." என்று சிரிப்போம். என்ன பேசணும்கிறது மறந்து போயிடும். நகத்தைக் கடிப்போம்." என்று எழுதியுள்ளார் ஜெயலலிதா.

## 'ஹிட்லர் இனியவர்'



யூத இனத்தையே ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கிளம்பியவர் ஹிட்லர்.

ஹிட்லரை மிக மென்மையான மனிதராகச் சித்தரிக்கும் படமொன்று ஹொலிவூட்டில் தயாராகப்போகிறது.

'பேசிக் இன்ஸ்டிங்ட்', 'ரோபோ கேப்' ஆகிய படங்களை இயக்கிய போல் வெர்ஹோவன் அப்படத்தை இயக்கப்போகிறார்.

ஹொலிவூட்டில் யூதர்கள் ஆதிக்கம் அதிகம். தயாரிப்பாளர்களாக இருப்பவர்களிலும் பலர் யூதர்கள். ஹிட்லரை மென்மையான மனிதனாகச் சித்தரிக்கும் படத்தை தயாரிக்கக்கூடாது என்று ஹொலிவூட் யூதர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

ஆனாலும் அவர்களது எதிர்ப்பையெல்லாம் புறங்கையால் அலட்சியம் செய்துவிட்டு ஹிட்லர் படத்தை இயக்கி முடிக்கப் போகிறாராம் போல் வெர்ஹோவன். ஹொலிவூட்டில் தற்போது சர்ச்சைக்குரிய விவகாரம் அதுதான்.

## சங்கீதாவின் வருத்தம்



கிரிக்கெட் வீரர் அசாருதீன்-சங்கீதா காதல் விவகாரம் திருமணத்தில் முடிந்தது. இந்த உறவு நீடித்திருக்குமா? அல்லது மோகம் முப்பது நாள் கணக்குத்தானா? என்று பத்திரிகைகள் சில கேள்வி எழுப்பியிருந்தன.

தனது பெயரை ஆயிஷா என்று மாற்றிக் கொண்ட சங்கீதா கணவருக்கு காரியம் யாவிலும் கைகொடுக்கும் மனைவியாக மாறிவிட்டார்.

பொது நிகழ்ச்சிகளில் இருவரும் இணைந்தே கலந்துகொள்கின்றனர். சிரித்துச் சிரித்து பேசிக்கொண்டே இருக்கின்றனர். முன்னாள் மனைவியுடன் அசார் இப்படி பொது நிகழ்ச்சிகளுக்குச் சென்றது அரிது.

அசாருதீனை திருமணம் செய்தபின்னர் சங்கீதாவை நோக்கி சின்னத்திரை வாய்ப்புக்கள் குவியத் தொடங்கியுள்ளன. சங்கீதா நடிப்பதை அசாரும் ஊக்குவிக்கிறாராம். இருவரும் ஒருவரையொருவர் ஊக்குவித்தபடியே இருப்பதுதான் மகிழ்ச்சியின் இரகசியமோ?!

தற்போது 7 தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துவருகிறார் சங்கீதா. பிஸியான நடிப்புக் காரணமாக அசாருதீன் விளையாடும் போட்டிகளை தொலைக்காட்சியில் பார்க்க முடியவில்லை என்பதுதான் சங்கீதாவின் தற்போதைய வருத்தமாம்.

## பெண் ரவுடிகள்



வழக்கமாக தெருவில் உள்ள ரவுடிகளால் பெண்களுக்குத்தான் தொல்லைகள் ஏற்படுவதுண்டு.

அமெரிக்க நியுயார்க் நகரில் பெண் ரவுடிகளைக் கண்டு ஆண்கள் தலைதெறிக்க ஓடுகிறார்களாம்.

உலகிலேயே வழிப்பறி, கொள்ளை, மற்றும் குற்றச் செயல்கள் அதிகமாக உள்ள நகரம் நியுயார்க் நகர்தான்.

கொள்ளையர்களாலும், ரவுடிகளாலும் கத்தியால் குத்தப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் மரணங்கள் நிகழ்வது அங்கு சர்வசகஜம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆண் ரவுடிகளுக்கு நிகராக ஈடுகொடுத்தபடி பெண் ரவுடிகள் நியூயோர்க் நகரில் உருவாகியுள்ளனர்.

நியூயோர்க், சிகாகோ உட்பட அமெரிக்காவில் உள்ள சில நகரங்களில் பெண் ரவுடிகளின் கொடிதான் பறக்கிறது.

96ம் ஆண்டு மட்டும் அமெரிக்காவில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட பெண் ரவுடிகளின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? சுமார் 7 இலட்சம் பேர்.

பலரகமான கத்திகள், கைத்துப்பாக்கிகள் என்பவற்றுடன் நடமாடும் பெண் ரவுடிகளிடம் பெரும்பாலும் ஆண்கள்தான் பணத்தை இழந்துள்ளனராம்.

சபலிஸ்டுக்களான ஆண்களை வளைத்து தனியான இடத்திற்கு அழைத்துப்போய் பணத்தைப் பறிப்பதும் நடக்கிறது. துணியைக் காணோம் துண்டைக் காணோம் என்று சபலிஸ்டுக்கள் ஓட வேண்டியதுதான்.



வாரமலர் தினமுரசு

மார்ச்.16-22,1997

படிப்பகம்

www.padippakam.com

# அம்மா என்றால் அன்பு



↑ அம்மா என்றால் அன்பு. மனிதருக்கு மட்டுமல்ல, விலங்குகள், பிராணிகள் அனைத்துக்கும் அம்மா என்றால் உயிர்தான்.

படத்தில் பாருங்கள். கொரில்லாக் குரங்கார் தன் அம்மாவின் முதுகில் ஜாலியாகத் தூங்குகிறார்.

காடுகளில் வாழும் கொரில்லாக்கள் தமது குட்டிகளை முதல் நான்கு மாதங்களும் நெஞ்சில் அணைத்தபடி பாசத்துடன் பராமரிக்கின்றன.

கொஞ்சம் வயதான பின்னர் குட்டிகள் தாயின் முதுகில் சவாரி செய்கின்றன. சுகமாகத் தூங்கியும் விடுகின்றன.

விளையாடிக் களைத்த கொரில்லாக்குட்டிகளும் தாயின் முதுகில் ஏறித்தான் இளைப்பாறுகின்றன. 'தாயின் முதுகிலும் சிறந்த படுக்கையுமில்லை' என்பது குட்டிக் கொரில்லாக்களின் அபிப்பிராயமாம்.

இப் படம் 'கிளிக்' செய்யப்பட்டது அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள 'வுட்லண்ட் பார்க்' மிருகக் காட்சிச் சாலையில்.

## தகவல் பெட்டி

## குட்டிப் பயில்வான்




→ பிறந்து 18 மாதங்களில் 68 இறாத்தல் எடையுள்ள குழந்தையைப் பற்றிய தகவலை சென்றவாரம் வெளியிட்டிருந்தோம். அமெரிக்கா நியூயோர்க்கைச் சேர்ந்த அக் குழந்தையின் பெயர் ஷாக் ஸ்றென் கோர்ற.

தகவலைக் கேட்டதும் மூக்கில் விரல் வைத்திருப்பீர்களே?! கண்பட்டுவிட்டது போங்கள்! அந்தக் குழந்தையின் எடையை முறியடிக்கும் மற்றொரு குட்டிப் பயில்வானின் செய்தி வெளியாகியுள்ளது.

குட்டிப் பயில்வானின் பெயர் ஜோய். 12 மாதத்தில் 65 இறாத்தல் எடையுடன் இருக்கிறான். ஷாக் 18 மாதத்தில்தான் 68 இறாத்தல் எடையுடன் இருக்கிறான். ஆனால் ஜோய் 12 மாதத்தில் 65 இறாத்தல் எடையுடன் இருக்கிறான். ஒரே ஒரு அபூர்வ ஒற்றுமை இரண்டு குழந்தைகளும் அமெரிக்கா நியூயோர்க் நகரைச் சேர்ந்தவர்கள்தான்.

குழந்தை ஜோயை சற்றும் களைப்பே இல்லாமல் சுமந்து கொண்டிருப்பவர்தான் தாயார். பெயர்: அமந்தா ஸ்நைடர். மற்றொரு செய்தி என்ன தெரியுமா? குட்டிப் பயில்வானை பத்திரமாக பிரசவித்த அமந்தாவுக்கு 19 வயது மட்டும்தான். கணவர் பெயர் பிரெய்ன் மெக்கோ. அவரது வயது 21. ஆனால் அவரும் குண்டு மனிதர்தான். எடை 300 இறாத்தல். அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறது என்பது இது தானாக்கும். ஜோயின் உயரம் 3 அடி ஒரு அங்குலம். சாதாரண குழந்தைகளை விடவும் எடையில் 37 இறாத்தல் அதிகமாகவும், உயரத்தில் 3அங்குலம் அதிகமாகவும் இருக்கிறான். குட்டிப் பயில்வான் ஜோய்.

ஜோயின் அம்மாவுக்கு கொள்ளை மகிழ்ச்சி. "இது போன்றதொரு பெரிய குழந்தையைப் பெற்றெடுத்ததில் தனி மகிழ்ச்சியாக இருக்கிறது. ஏனென்றால் இது போன்ற குழந்தை எல்லோருக்கும் கிடைப்பதில்லையே!" என்கிறார் அம்மா அமந்தா. வாழ்க பயில்வான்!



## தந்திரக் குடை விரிப்பு

↑ படத்தைப் பார்த்ததும் இது என்ன வித்தியாசமான தாவரம்? என்று மனதில் தோன்றியிருக்கும். அப்படித் தோன்றியிருந்தால் அந்த எண்ணத்தை சத்தமாக துடைத்துவிடுங்கள். நாரைகளில் சாம்பல் நிற நாரை என்று ஒரு ரகம் இருக்கிறது. இதன் பிரதான உணவு மீன். ஆனால் அதில் ஒரு சிக்கல் உண்டு. மீன்களை துரத்திச் சென்று கப்பென்று பிடிக்க சாம்பல் நாரையால் முடியாது.

எனவே தன்பலம் அறிந்து ஒரு தந்திரம் செய்கிறது நாரை.

பொதுவாக வெயில் அடிக்கும் இடத்தில் தண்ணீர் மேற்பரப்புக்கு மீன்கள் வருவதில்லை. அதனை அறிந்துள்ள சாம்பல் நிற நாரைகள் கில்லாடித்தனமாக ஒரு காரியம் செய்கின்றன.

தமது இறக்கைகளை குடைபோல உருவாக்கி ஒன்றரை அடிப் பரப்புக்கு செயற்கை நிழலை உருவாக்குகின்றன. அந்த இடம் நிழலுள்ள பகுதி என்று நினைத்து அங்கே இளைப்பாற மீன்கள் வருகின்றன. அப்போது தனது கூர்மையான அலகால் மீனைக் கப்பென்று கொத்திக்கொண்டு பறந்துவிடும் சாம்பல் நாரை.

சாம்பல்நிற நாரை ஒன்று தந்திரமாக குடைவிரித்துக் காத்திருப்பதைத்தான் படத்தில் காண்கிறோம். தாக்குதல் உத்தியில் நாரைகளும் அசத்துகின்றன.



## அங்கும் பொறாமை

→ மனிதருக்கு மட்டும்தான் பொறாமையா? இந்த ஒட்டகத்துக்கு வந்த பொறாமையைப் பாருங்கள். மிருகக்காட்சிச் சாலைக்கு பெற்றோருடன் சென்றாள் 2வயதுச் சிறுமி லூசியானா. கூண்டுக்குள் நின்ற ஒட்டகங்களைக் கண்டதும் சிறுமிக்கு ஒரே கொண்டாட்டம். ஒட்டகமொன்றுக்கு தன்கையால் ஆசையாக உணவு ஊட்டினாள்.

அருகில் நின்ற மற்றொரு ஒட்டகத்துக்கு பொறுக்க முடியவில்லை. தன்னைவிட அது என்ன உசத்தி? என்று நினைத்துவிட்டதாக்கும்.

சிறுமிமீது கோபப்பட்டு அவளது முடியை லபக்கென்று பிடித்துக் கொண்டது. நல்லவேளையாக அருகில் நின்ற பாதுகாவலர் சிறுமியை இழுத்துவிட்டார். சிறுமி உணவு ஊட்டியதை படமெடுத்தவருக்கு, இந்த அரிய காட்சியும் கமராவில் சிக்கிவிட்டது.

விலங்குகளுடனும், பிராணிகளுடனும் பரிவு காட்டுவது தப்பேயில்லை. ஆனாலும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.



படிப்பகம்

www.padippakam.com

* பொங்கலுக்கு வெளியான படங்களில் முதலாவதாக இருக்கும் 'பாரதி கண்ணம்மா' படத்தின் இயக்குநர் சேரன். அடுத்து பிரபு, கார்த்திக் நடிக்கும் இரண்டு படங்களை இயக்கவுள்ளார்.

* 'இந்தியன்' படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்னம் முதன் முறையாகத் தமிழில் படமொன்றை இயக்கவுள்ளார். சில வருடங்களுக்கு முன் இவர் இயக்கிய 'பெத்தரிகம்' என்ற தெலுங்குப் படம் தமிழில் 'பெரியவர்' என்ற பெயரில் வெளியாகியிருந்தது.

* ரஜினியின் 'ராஜா சின்ன ரோஜா' படத்தில் அறிமுகமாகி சின்னச் சின்ன வேடங்களில் நடித்து வரும் ராகவி, இப்போது தனது பெயரை அஷ்யா என்று மாற்றிக்கொண்டிருக்கிறார்.

* 'விடுகதை', 'தில்லானா தில்லானா' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் கே. பாலச்சந்தர் அடுத்து தனது சீடர்களில் ஒருவரான சுரேஷ் கிருஷ்ணா இயக்கும் படமொன்றையும் தயாரிக்கவிருக்கிறார்.

* தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி தயாரிக்கும் 'ஜாலி', 'லவ்டுடே' ஆகிய படங்களுக்கு இசையமைக்க ரக்ஷித் ஓமர் என்ற புதிய இசையமைப்பாளரை அறிமுகப்படுத்துகிறார். இவரின் பெயரையும் சிவா என்று மாற்றிவிட்டார் சௌத்ரி.

* 'தாலி புதுச', 'காதல் ரோஜாவே' ஆகிய படங்களை இயக்கிவரும் கேயார் அடுத்து பாண்டியராஜன் நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தை பஞ்சு அருணாசலம் தயாரிக்கவுள்ளார்.

* நெப்போலியன் நடித்த 'முஸ்தபா' படத்தை இந்தியில் இதே பெயரில் பாரதிராஜாவும், பி.ஜி.ஸ்ரீகாந்தும் தயாரித்து வருகிறார்கள். தற்போது இந்தப்படத்திற்கு 'ஷேக் அப்துல்லா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

* அஜித்குமார்-மகேஸ்வரி நடிக்கும் 'உல்லாசம்' படத்தில் பஸ் டிரைவராக எஸ்.பி.பாலசுப்ரமணியம் நடிக்கிறார் என்பது தெரியும். கண்டக்டராக நடிப்பவர் யார் தெரியுமா? எழுத்தாளர் பாலகுமாரன்.

* இந்தியில் நானா படேகருடன் 'வஜூட்' என்ற படத்தில் நடித்து வரும் ரம்யா கிருஷ்ணன், இப்போது 'பனாரசி பாபு' என்ற இன்னொரு இந்திப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* 'காதல் கோட்டை' படத்தில் இடம்பெற்ற 'வெள்ளரிக்கா பிஞ்சு...' பாட்டுக்கு நடனமாடியவர் ராம். இவர் தற்போது 'வீரபாண்டிக் கோட்டையிலே' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

## மினி சினி

## மாட்டிக்கொண்டார் அப்பாஸ்

"நான் இதுவரை இணைந்து நடித்த நடிகர்களில் அப்பாஸ்தான் இனிமையானவர். மென்மையானவர். துடிப்பானவர். ரொம்ப புத்திசாலி." இப்படியெல்லாம் அப்பாஸை பாராட்டியிருப்பவர் யார் தெரியுமா? சங்கவிதான்.

முன்னர் விஜயையும் சங்கவி இப்படித்தான் பாராட்டியதாக ஞாபகம். அப்போது விஜயும் சங்கவியும் நகமும் சதையுமாக இருந்தனர்.

சங்கவியின் கிடுக்குப் பிடியில் சிக்கிய விஜய்யை மீட்க இயக்குநர் சந்திரசேகர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

விஜயை மீட்க அப்பா சந்திரசேகர் இருந்தார். அப்பாஸை மீட்க யார் இருக்கிறார்கள்? சங்கவியிடம் மாட்டிக்கொண்டவர்கள் லேசில் விடுபட்டுக் கொள்ள முடியாதாம்.

விக்னேஷ், விஜய் என்று சங்கவியின் வலையில் சிக்கிய இளம் ஹீரோக்கள் பட்டியலில் அப்பாசும் இடம்பிடித்துவிட்டார்.

'இனியெல்லாம் சுகமே' படப்பிடிப்பில் அப்பாஸை நிற்க, இருக்க விடாமல் துரத்தித்திரிந்தாராம் சங்கவி. முதலில் சற்று விலகியே போன அப்பாஸ் பின்னர் மெல்ல மெல்ல மனம் மாறினாராம். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். அப்பாஸ் மட்டும் எம்மாத்திரம்?

## நிழல்கள் ரவி பாய்ச்சல்

'மணிரத்னம்' படங்களிலேயே படுதோல்விப் படம் 'இருவர்'. சென்னை போன்ற நகர்களில்கூட தியேட்டர்களைவிட்டு வந்தவேகத்தில் ஓடிவிட்டது. சென்னை நகரில் இரண்டு திரையரங்கில் மட்டும் மூன்று காட்சிகளாக இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் ஏப்ரல் புத்தாண்டு படங்கள் வந்ததும் தூக்கிவிடுவார்கள்.

'இருவர்' பட தோல்வியால் மணிரத்னம் வெதும்பிக் கொண்டிருக்கிறார். போதாக்குறைக்கு மணிரத்னம்மீது வெதும்புகிறார் நிழல்கள் ரவி.

'இருவர்' படத்திற்காக 18 நாட்கள் நடித்துக்கொடுத்தாராம் நிழல்கள் ரவி. படம் பார்த்தவருக்கு செம அதிர்ச்சி. ஒரே ஒரு காட்சியில் மட்டும் முகம் தெரிந்ததாம். அந்த சீனில் நிழல்கள் ரவி வருவது சொன்னாலும் தெரியாதளவுக்கு இருக்கிறது.

"என்ன சேர் இப்படிப் பண்ணி விட்டீர்களே?" என்று கேட்டாராம். "சொறி ரவி" என்றாராம் மணிரத்னம். புகைந்து கொண்டிருக்கிறார் நிழல்கள் ரவி.

## நடிகர் தூதுவிட்ட நடிகை

மலையாளப் பட உலகில் இருந்து மம்முட்டி, மோகன்லால், ஜெயராம் ஆகியோர் தமிழ்ப்பட உலகில் வரவேற்பு பெற்றுள்ளனர். மற்றொரு மலையாள நடிகரான சுரேஸ் கோபிக்கும் தமிழில் நடிக்க ஆசை வந்துள்ளதாம்.

சுரேஸ் கோபி மலையாளத்தில் நடித்த பல படங்கள் ஏற்கனவே தமிழில் மொழிமாற்றப்பட்டு வந்துள்ளன.

'அமைதிப் பூங்கா' படத்தில் பிரபுவுடன் மற்றொரு ஹீரோவாக நடிக்கப் போகிறார் சுரேஸ் கோபி.

அதற்கிடையே 'காதல் கோட்டை' இயக்குநர் அகத்தியனிடம் தமிழில் வாய்ப்புக் கேட்டு தூதுவிட்டாராம் சுரேஸ் கோபி.

தூதாகச் சென்றவர் ஒரு நடிகை. அவர் ஊர்வசி. 'ஜனாதிபத்யம்' என்னும் மலையாளப் படத்தில் ஊர்வசியும் சுரேஸ் கோபியும் ஜோடியாக நடிக்கின்றனர். இருவருக்கும் இடையே நல்ல நெருக்கம்.

சுரேஸ் கோபிக்கு நல்லது செய்யும் எண்ணத்தில்தான் அகத்தியனிடம் தூது போக சம்மதித்தாராம் ஊர்வசி.

## முரளிக்கு

முரளி- கௌசல்யா
கும் படம் 'காலமெல்லா
முரளி பலகுரல் ம
ஒன்றை கண்டு ரசித்து
பாராட்டுகிறார் கௌச
முரளிக்கு கிறக்கம். பெய
தன்னைப் பற்றிய விபரங்
குரலில் மயங்கிய முர
நண்பர்களும் கௌசல்
கடைசிக் காட்சியில் ஒன்
'காதல் கோட்டை',
கோட்டை' படக் கதை த
கோரிய பாலுதான்
எப்படியோ படம் ஹி
முரளியின் மார்க்கெட்
'கோபாலா கோபா
நிறுவனமான ரோஜா க
படங்களை தயாரிக்கிற
முரளிதான் கதாநாயக
ஒரு படத்தின் பெய
கண்ணம்மா' பட இ
இயக்கப்போகிறார்.
'பூந்தோட்டம்' என்று பெ
'பொற்காலம்' படத்
இரண்டு ஜோடிகள். மீ
'பூந்தோட்டம்' படத்தில் மு
தேவயாணி. இ
களுக்கும் இசை
இளையராஜா.

## முகப்

பாண்டிய
படம்:-'நல்ல

சங்க
படம்:-'

## புதிய வாரிசு

தமிழ் சினிமா உலக மார்க்கண்டேயர் சிவகுமார். மனிதர் இப்போதும் இளமையாகத்தான் இருக்கிறார். மது, மாது போன்றவற்றை தேவைக்கதிகமாக பாவிக்காமல் இருக்கும் விரல்விட்டு எண்ணத்தக்க நடிகர்களில் ஒருவர் சிவகுமார்.

சிவகுமாரின் வாரிசாக நடிக்க வருகிறார் அவரது மகன் சரவணன். ஏற்கனவே சரவணன் என்ற பெயரில் ஒரு ஹீரோ இருப்பதால் பெயர் மாற்றப்பட்டுள்ளது. 'சூர்யா' என்று வைத்துள்ளனர். மணிரத்னம் தயாரிப்பில் வசந்த் இயக்கும் 'நேருக்கு நேர்' படத்தில் நடிக்கிறார் சூர்யா. அவருக்கு ஜோடியாக கவுசல்யா நடிக்கிறார்.

'காதல் கோட்டை' படத்தில் அஜித்குமாரின் பாத்திரப் பெயர் சூர்யா. வேடிக்கை என்ன தெரியுமா? 'நேருக்கு நேர்' படத்தில் அஜித்குமாரை தூக்கிவிட்டுத்தான் சிவகுமாரின் மகனைப் போட்டிருக்கிறார்கள்.



அப்பாஸ்-சங்கவி
படம்: இனியெல்லாம் சுகமே

## சிவாஜி-சரோஜாதேவி மீண்டும் அதே ஜோடி

'ஒன்ஸ்மோர்' படத்திற்கான முதல்நாள் படப்பிடிப்பு காலை 6.30 மணிக்கு ஆரம்பமானது.

காலை 6.15 மணிக்கே மேக்-அப் சகிதம் வந்துவிட்டார் சிவாஜி. இயக்குநர் சந்திரசேகரோ, ஹீரோ விஜய் யாருமே அப்போது வந்திருக்கவில்லை. 6.30 மணிக்குத்தான் எல்லோரும் வந்தனர். முன்கூட்டியே சிவாஜிவந்து காவல் இருப்பதைப் பார்த்ததும் கதிகலங்கிவிட்டனராம்.

அன்றுமுதல் இன்றுவரை நேரம் தவறாமையைக் கடைப்பிடித்து வருபவர் சிவாஜி. தொழில்மீது அவருக்குள்ள பக்தி வயதானபின்னரும் குறையவேயில்லை என்று புகழ்ந்தார் சந்திரசேகர்.

'ஒன்ஸ்மோர்' படத்தில் சிவாஜிக்கு ஜோடி சரோஜாதேவி. 'பாலும் பழமும்', 'புதிய பறவை' போன்ற பல வெற்றிப்படங்களில் கலக்கிய ஜோடியல்லவா. மறுபடி அந்த ஜோடியை திரையில் காணப்போகிறோம்.

'ஒன்ஸ்மோர்' படத்தில் பாடல் ஒன்றையும்பாடப் போகிறார் சிவாஜி. அவருடன் இணைந்து விஜயும் பாடுவார். முன்னர் 'ராஜராஜ சோழன்', 'தேவர் மகன்' போன்ற படங்களில் சிவாஜி பாடியிருக்கிறார்.

'ஒன்ஸ்மோர்' படத்தில் சிவாஜியின் பெயர் செல்வம். முதல் காட்சியில் ஜீன்ஸ் செட் போட்டுக்கொண்டு அசத்தலாக ஒரு டேக்கிலேயே நடித்து முடித்தாராம் சிவாஜி.

## ஒரே விரட்டல்

'கோபாலா கோபாலா' படம் ஹிட்டானதால் தனது புதிய படங்களுக்கும் அதே ஸ்ரைலில் பெயர் சூட்டி வருகிறார் பாண்டியராஜன். 'குபேரா குபேரா', 'கபடி கபடி' என்று பெயர்களுடன் இரண்டு படங்களுக்கு பூஜை போட்டுவிட்டார்.

பாண்டியராஜன் பக்கமாக அதிஷ்டக்காற்று வீசுவதாகத் தெரிந்ததும் படையெடுத்தார்களாம் தயாரிப்பாளர்கள். பழசையெல்லாம் மனதில் வைத்து நாக்கைப் பிடுங்குவது மாதிரி நாலு கேள்வி கேட்டு விரட்டிவிட்டாராம் பாண்டியராஜன்.



சரத்குமார்-தேவயாணி
படம்: சூர்யவம்சம்

## சினி விசிட்

## 'உள்ளத்தைக் கிள்ளாதே'

மோகன்- சுகாசினி நடித்து 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' என்றொரு படம் வந்தது. விருதும் பெற்றது. சுகாசினி அறிமுகமானதும் அப்படத்தில்தான்.

இப்போது 'உள்ளத்தைக் கிள்ளாதே' என்ற பெயரில் ஒரு படம் தயாராகிறது. பெயர்தான் வேறு. அர்த்தம் ஒன்றுதான். கதை எப்படி இருக்குமோ தெரியவில்லை.

கரண், சுரேஷ் இருவரும் கதாநாயகர்களாக நடிக்கின்றனர். கதாநாயகி குஷ்பு. இயக்கம் விஜயகண்ணா. இவர் 'தாலி கட்டிய ராசா', 'விடி வெள்ளி' போன்ற ஓடாத படங்களை இயக்கியவர்.

மணிவண்ணன், செந்தில், வடிவேலு, சுபாஸ்ரீ ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. பாடல்கள்: வாலி, பழனிபாரதி.

## தள்ளாடும் கொடி

அர்ஜுன்-விஜயசாந்தி நடிப்பதாக அமர்க்களமாக ஆரம்பிக்கப்பட்ட படம் 'தாயின் மணிக்கொடி'. பின்னர் விஜயசாந்தி கழன்று கொண்டார். மனிஷா கொய்ராலா, மாதுரி டிக்ஷித் என்று பல இந்தி நடிகைகளை துரத்திப் பார்த்தார் அர்ஜுன். எல்லோருமே பிஸி என்றுவிட்டார்கள்.

தற்போது 'காதல் தேசம்', 'சிறைச்சாலை' புகழ் தபுவை ஒப்பந்தம் செய்துள்ளார்கள். தபு ஒத்துழைத்தால் கொடி பறக்கும்.



ரம்பா
படம்: வி.ஐ.பி



படிப்பகம்

www.padippakam.com

## அமோகம்

நடித்து ஓடிக் கொண்டிருக்
'ம் காதல் வாழ்க.'
ன்னன். அவரது நிகழ்ச்சி
செல்லுலார் போனில்
ய்யா. குரலைக் கேட்டதும்
ரச் சொன்ன கௌசல்யா
களை சொல்ல மாட்டார்.
ளியும், முரளிக்காக அவரது
யாவை தேடி அலைவதும்,
று சேருவதும்தான் கதை.
யின் மறுபதிப்பு. 'காதல்
ன்னுடையது என்று உரிமை
கதை எழுதியிருக்கிறார்.
ட்டாகிவிட்டது. அதனால்
ம் உயர்ந்திருக்கிறது.
'லா' படத்தை தயாரித்த
ம்பைன்ஸ் புதிதாக இரண்டு
து. இரண்டு படங்களிலும்
ர்.
ார்: 'பொற்காலம்'. 'பாரதி
யக்குநர் சேரன் இதனை
இரண்டாவது படத்திற்கு
பயர் சூட்டியுள்ளனர்.
தில் முரளிக்கு
னா- மந்த்ரா.
ரளிக்கு ஜோடி
ரண்டு படங்
சயமைக்கிறார்

பிஸ்
யராஜன்
னசுக்காரன்'
தா
ள்ளல்'

## விருந்தில் குழப்பம்

ஸ்ரீதேவியின் திருமணத்தால் போனி கபூர் குடும்பத்தில் புயல் வீசிக்கொண்டிருக்கிறது. போனிகபூரின் மாமியார் நீதிமன்றம் சென்றுள்ளார். ஆனாலும் அதொன்றும் பயன் தராது என்பது வேறு விஷயம்.

ஸ்ரீதேவியும், போனிகபூரும் தமது திருமணச் செய்தியை வெளியிட முன்னர் நடந்த ஒரு சம்பவம் இது.

மும்பாயில் நடந்த விருந்து ஒன்றுக்கு சென்றாராம் ஸ்ரீதேவி. அங்கு போனிகபூரின் மாமியாரும் வந்திருந்தாராம். ஸ்ரீதேவியின் அருகில் வந்த மாமியார் அவரது வயிற்றைத் தொட்டுப்பார்த்துக் கொண்டு "இதுக்கு யார் அப்பா?" என்று கேட்டாராம். நிலவரம் இசகு பிசகாக மாறப்போகிறது என்று தெரிந்து அங்கு நின்றவர்கள் தலையிட்டு சமரசம் செய்தார்களாம். தப்பினோம் பிழைத்தோம் என்று நழுவினாராம் ஸ்ரீதேவி.

இது ஒரு புறமிருக்க, போனிகபூரின் முதல் மனைவி, "குழந்தை பிறக்கட்டும் பின்னர் நடப்பதைப் பாருங்கள்." என்று சொல்லிக் கொண்டிருக்கிறாராம்.

# வாய்ப்புக்குறைய பிடிவாதம் தளர்வு!

## பாண்டியராஜனிடம் சங்கீதா சரணம்

நடிகை சங்கீதாவுக்கு படவாய்ப்புக்கள் குறைந்துவிட்டன. ஆடைக்குறைப்பு மற்றும் நெருக்கமான காட்சிகள் என்றால் சங்கீதா முகம் சுளித்தார். அதுதான் படவாய்ப்புக்கள் குறைந்தமைக்கு முக்கிய காரணம்.

தேவயாணி, சுவலட்சுமி என்று புதிய நடிகைகளுக்கு வரவேற்பு கிடைத்ததும் சங்கீதாவைப் பாதிக்கச் செய்திருக்கிறது.

சேலை கட்டிய கதாநாயகி என்றால் உடனே தேவயாணியைத்தான் கூப்பிடுகிறார்கள். தேவயாணி மறுத்தால் சுவலட்சுமி. அதன்பின்னர்தான் சங்கீதா.

கவர்ச்சி காட்டினால் நீண்டகாலம் நிலைக்க முடியாது. ரசிகர்களுக்கு விரைவாகத் திகட்டிவிடும் என்று நினைத்தார் சங்கீதா. அவரது கஷ்டகாலம், கவர்ச்சி காட்டாமலேயே ரசிகர்களுக்கு திகட்டிவிட்டார். ரசிகர்களுக்கு திகட்டமுன்னரே இயக்குநர்களுக்கு திகட்டிவிட்டார் சங்கீதா.

நெளிவு சுழிவு, அனுசரிப்பு தெரிந்த நடிகைகளைத்தான் இயக்குநர்கள் தட்டிக்கொடுத்து முன்னுக்கு கொண்டுவருவார்கள். கமராவுக்கு முன்னால் மட்டும்தான் நடிப்பேன், சூட்டிங் முடிந்ததும் வீட்டுக்குப்போய்விடுவேன் என்றெல்லாம் கண்டிஷன் போடும் நடிகைகள் ஓரம்போதான்.

இதனையெல்லாம் இப்போதுதான் சங்கீதா பட்டறிந்து கொண்டுள்ளாராம். அதனால் முன்னர் போட்ட நிபந்தனைகளில் பலவற்றை நெகிழ்த்திவிட்டாராம்.

கவர்ச்சியான காட்சிகளில் நடிக்காவிட்டாலும் இயக்குநர்கள் மற்றும் ஹீரோக்களை அனுசரித்துப்போக முன்வந்துவிட்டார் சங்கீதா.

பாண்டியராஜனுடன் ஒரு படத்தில் ஜோடியாக நடித்தவர் சங்கீதா. பாண்டியராஜனின் சில்மிஷங்கள் தாங்காமல் முகம் சுளித்தபடிதான் நடித்தாராம். பின்னர் இன்னொரு படத்தில் பாண்டியராஜனுடன் ஜோடியாக நடிக்க அணுகியபோது ஒரே கும்பிடு போட்டார் சங்கீதா.

அதே சங்கீதா இப்போது பாண்டியராஜனுடன் நடிக்க ஓ.கே. சொல்லிவிட்டார். முன்னர் படவாய்ப்புக்கள் நிறைய இருந்தன. மறுத்தார். இப்போது படவாய்ப்புக்கள் பஞ்சம். பாண்டியராஜனிடம் சரணம் பாடவும் துணிந்துவிட்டார் சங்கீதா.

பாண்டியராஜனும் சந்தர்ப்பத்தை கை நழுவவிடாமல் சங்கீதாவை தான்தங்கியுள்ள விடுதிக்கு அழைத்து நீண்டநேரம் டிஷ்கஸ் பண்ணுகிறாராம். கதை டிஷ்கஷன் தீவிரமாய்த்தான் நடக்கிறது என்று கொடுப்புக்குள் சிரிக்கிறது கோடம்பாக்கம் வட்டாரம்.

## புத்திசாலி நடிகைகள்

மிஞ்சிப்போனால் மூன்று வருசம்தான் ஒரு கதாநாயகியால் தாக்குப்பிடிக்க முடியும். அந்த மூன்று வருசங்களுக்குள் பணம் சம்பாதித்தால்தான் உண்டு. அதனால்தான் நடிகைகள் பலர் நடிப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல் வேறு பல வழிகளிலும் பணம் சம்பாதிப்பதில் குறியாக இருக்கிறார்கள்.

கடைத்திறப்புவிழா, நட்சத்திரவிழா என்று சகல நிகழ்ச்சிகளுக்கும் பணம் வசூல் செய்கிறார்கள். அதனைவிட பிரபல நடிகைகள் என்றால் அவர்களுடன் நெருக்கமாக இருப்பதில் சில பிரபலங்களுக்கு கொள்ளை ஆசை. அந்தப் பிரபலங்களிடமும் சுளையாகப் பணம் கறந்துவிடுவார்கள் நடிகைகள்.

ஒரு படத்தில் நடித்தவுடன் கார் பங்களா என்று சொத்துச் சேர்க்கும் இரகசியமும் அதுதான்.

கண்ணியமான பாத்திரங்களில் நடிக்கும் சுவலட்சுமியும் பணம் குவிப்பதில் குறியாக இருக்கிறார். "சென்னையிலேயே குடியேறப் போகிறேன். கார், வீடு வாங்கவேண்டும். அதனால் ஊதியத்தை உயர்த்தித் தாருங்கள்." என்று கேட்கிறாராம்.

'கோகுலத்தில் சீதை' படம் வெளியாக முன்னர் சுவலட்சுமியின் சம்பளம் ஆறு லட்சம். 'கோகுலத்தில் சீதை' ஹிட்டானதால் இப்போது சம்பளம் 10 இலட்சம்.



விக்னேஷ்-புதுமுகம் சோனா
படம்:- மல்லிகை மருதாணி



ராஜ்குமார்-சுபாஸ்ரீ
படம்: குழுதம்

## 'கண்ணு படப்போகுது'

புதிதாகவந்துள்ள இளம் நடிகைகளுடன் நடிக்க வேண்டும் என்று ராமராஜனுக்கு ஆசையோ ஆசை. சங்கீதா, தேவயாணி என்று ஆரம்பித்து இப்போது சுவலட்சுமியில் வந்து நிற்கிறார்.

ரம்பா, மீனா ஆகியோரின் ஊதியம் கட்டுப்படியாகாது என்பதால் அவர்கள் பக்கம் இதுவரை செல்லாமல் இருக்கிறார்.

ராமராஜனும்- சுவலட்சுமியும் இணைந்து நடிக்கும் படத்திற்கு 'கண்ணுபடப் போகுது' என்று பெயர் சூட்டியுள்ளனர். இப்படியான பெயர்கள் சூட்டுவதில் ராமராஜனை மிஞ்ச ஆளில்லை.

தேவன், மணிவண்ணன், ஜனகராஜ், புதுமுகம் ராகஸ்ரீ ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: இளையராஜா. டி.டி.எஸ் என்னும் நவீன ஒலிப்பதிவு முறையில் இளையராஜா இசையமைக்கிறார்.

## பார்த்திபனுக்கு பாதுகாப்பு

'பாரதி கண்ணம்மா' படத்தில் ஒரு குறிப்பிட்ட ஜாதியினரை பார்த்திபன் கண்டித்து வசனம் பேசுகிறார். அதனால் குறிப்பிட்ட ஜாதிக்காரர்கள் பார்த்திபனை போனில் மிரட்டினார்களாம்.

தமிழக முதல்வரிடமும், ரஜினியிடமும் புகார் செய்து புலம்பினாராம் பார்த்திபன். உடனடியாக துப்பாக்கியுடன் கறுப்புப் பூனை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரையில் வில்லன்களை பந்தாடும் ஹீரோ ஒரு போன் மிரட்டலுக்கு நடுங்கிப்போய் விட்டார் என்று கேலி செய்கிறார்கள்.

"அதெல்லாம் இல்லை. பார்த்திபன் மகா விளம்பரப் பிரியர். அவரே போட்ட நாடகம்தான் இதெல்லாம்." என்று சொல்கிறார்கள் விஷயம் அறிந்தவர்கள்.

## பழைய பாடகர்கள்

டி.எம்.சௌந்தர்ராஜன், பி.வி.ஸ்ரீனிவாஸ், பி.சுசிலா, வாணிஜெயராம் என்று முன்னாள் பிரபல பாடகர்களை இப்போதெல்லாம் இசை நிகழ்ச்சிகளுக்காக மட்டும்தான் அழைக்கிறார்கள்.

பழைய பாடகர்களை கௌரவித்து வாய்ப்பு வழங்க முன்வந்துள்ளார் 'காதலி' பட இயக்குநர் சித்து. விக்னேஷ்-தேவயாணி நடிக்கும் காதலி படத்தில் விஜுச்சக்கரவர்த்தி, ஜெயசித்ரா, ஆர். சுந்தர்ராஜன், கவிதா ஆகியோர் பாடுவது போன்ற ஒரு பாடலுக்கு மேற்கண்ட பழைய பாடகர்கள் பின்னணி பாடுகிறார்கள். இசையமைப்பவர் தேவா. பழைய பாடல்களில் ஆர்வமுள்ள தேவாதான் இயக்குநரை சம்மதிக்கவைத்து பழைய பாடகர்களை பயன்படுத்தியுள்ளாராம்.



அஜய் தேவ்கன்-டிவிங்கிள்

## டிவிங்கிளின் காதலர்

இந்தித் திரையுலகின் முன்னாள் கனவுக் கன்னி டிம்பிள் கபாடியா. நடிகர் ராஜேஸ் கன்னாவை மணந்தவர். இந்த நட்சத்திரத் தம்பதியின் வாரிசுதான் நடிகை டிவிங்கிள்.

டிம்பிள் கபாடியா தொடர்பாகவும், ராஜேஸ்கன்னா தொடர்பாகவும் பல கிசு கிசுக்கள் முன்னர் உலா வந்தன. டிம்பிளுடன் கமலை இணைத்தும் பல கதைகள் வெளிவந்தன.

இப்போது டிவிங்கிள் பற்றி நாளொரு கிசு கிசு வெளியாகிறது. நடிகர் அஜய்தேவ்கனுடன் சுற்றித்திரிகிறார் டிவிங்கிள். டிவிங்கிள்மீது பைத்தியமாக இருக்கிறாராம் அஜய்தேவ்கன்.

"அஜய் என் நல்ல நண்பர் மட்டும்தான் அதற்குமேல் வேறு கற்பனைகள் செய்யாதீர்கள்." என்கிறார் டிவிங்கிள். மும்பாய் பத்திரிகைகள் டிவிங்கிள் சொல்வதை நம்பத் தயாராக இல்லை. இருவரையும் பல இடங்களில் நெருக்கமாக கண்டுள்ளோம். நம்மிடமே கதை சொல்கிறார் டிவிங்கிள்" என்கின்றன.

## மனிஷா சீற்றம்

'மனிஷா கொய்ராலாவுக்கு ஏதோ நடந்துவிட்டது' என்கிறது மும்பாய் படவுலகம். சமீபத்தில் படப்பிடிப்பு ஒன்றில் அநாகரிகமாக நடந்துகொண்டாராம். அவருக்குரிய உடைகளைக் கொடுத்தபோது சினந்து விழுந்தாராம். உடைகளைத் தூக்கி எறிந்தாராம்.

நானா பட்டேகருடன் பிரச்சனை ஏற்பட்டதில் இருந்து மனிஷாவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாம்.



படிப்பகம்

www.padippakam.com

# தம்பதிகள் காதலிக்கலாம்

## காதல் போயின் சாதல் சாதல்

**கா**தலுக்கு வயதில்லை. ஐம்பதிலும் காதல் வரும். அறுபதிலும் காதல் வரும். எப்போது வந்தாலும் காதல் இளமையானது: இனிமையானது.

திருமணமாகிவிட்டால் சில தம்பதியர் இயந்திரம் போலாகிவிடுகிறார்கள். காதலித்து கைப்பிடித்தோர்கூட திருமணம்வரைதான் காதல் என்று தப்பாக நினைத்துக்கொண்டு வாழ்க்கையை வசீகரப்படுத்தத் தவறிவிடுகிறார்கள்.

மணமாகி குழந்தைகள் பிறந்தால் அவர்கள்மீது பாசம் காட்டுவது முக்கியம் தான். அதற்காக தம்பதியர் தமக்கிடையே அன்பைப் பெருக்கவும், ஒருவரை ஒருவர் ஈர்த்துக்கொள்ளவும் தவறக்கூடாது.

குழந்தைகளுக்காக தியாகம் செய்வதாக நினைத்துக்கொண்டு உடலைக் கவனிக்காமல், உடைகளின் நேர்த்தியைக் கவனிக்காமல், எப்போதும் சுறுசுறுப்பாக அழகாக இருக்காமல் வாழ்க்கையை வீணடித்துவிடுவது தேவைதானா?

காதலிக்கும்போது மட்டும் ஒருவரை ஒருவர் ஈர்க்கவும், மகிழச் செய்யவும் எத்தனை கவனமெடுக்கிறீர்கள். மணமான பின்னர் அந்த சுவாரசியங்கள் தேவையில்லை என்று நினைத்துக்கொள்வது மாபெரும் தப்பான காரியம்.

ஒருவரை நினைக்கும்போது உற்சாகமும், எதிர்பார்ப்பும், வாழ்க்கை முழுவதும் இருந்து கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் சலிப்பு இருக்காது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பு இருக்கும்.

காதலித்து மணம் செய்யாத தம்பதியர் மணமானபின்னர் காதலிக்கக் கற்றுக்கொண்டு ஜமாய்க்கலாம்.

தம்பதியினர் காதலை வளர்க்க உபயோகமான யோசனைகள் சில கீழே தரப்படுகின்றன. ஊன்றிப் படியுங்கள்!

திருமணமாகி நீண்டகாலம் மகிழ்ச்சியாகவே வாழும் தம்பதிகளை அவதானியுங்கள். அவர்கள் தங்களுக்குள் ஒருவரைப் பற்றி மற்றவர்- சகல நிலைகளையும் அறிந்து வைத்திருப்பதை அறிவீர்கள். அவர்கள் எப்போதும் ஒருவரை ஒருவர் சார்ந்து இருப்பதையே காணலாம்.

ஒன்றாக இருக்கும்போது இருவரும் மிக நெருக்கமாகவே இருப்பார்கள் அவர்களுடைய கைகளாவது தொட்டுக் கொண்டேயிருக்கும்.

அவர்களுடைய வாழ்வில் ஏதாவது சிக்கல் புகுந்து வேறுஒருவரின் ஆலோசனை பெறநேரிட்டாலும் ஒருவர் தன்மீதே தவறு என்றும் தனது துணைவரோ துணைவியோ குற்றமற்றவர் என்றும் வாதிடுவர்.

தங்கள் அன்பை வெளிப்படுத்த விலையுயர்ந்த பரிசுகளையோ வாழ்த்து மடல்களையோ அனுப்பமாட்டார்கள். கவலைகள் ஏற்பட்டால் "என்னுடன் வாரும். உலாவி



விட்டு வருவோம்... நாம் இருவரும் தனித்தே போகலாம்," என்பர்.

ஒருவரை ஒருவர் அன்புடன் கட்டியணைத்துக் கொள்வர். செல்லப்பெயர்களைப் பயன்படுத்தி அன்பான வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டிருப்பர். இவை போன்றவற்றால் தங்கள் காதலை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டிருப்பர். பாலைவனத்தில் ஒரு நீரோடைபோல் காதல் பவித்திரமானது.

### காதல் லீலைகள்

கை போர்காகிரே.ப்-(உளவள ஆற்றல் வல்லுநர்-பாலியல் ஆய்வாளர்-மருத்துவர்) சொல்லும் யோசனை இது:

தம்பதியினர் தமக்கிடையிலான அன்பை வெளிப்படுத்த உதவுவது காதல் விளையாட்டுக்கள்.

தம்பதியினருக்கிடையிலான பரஸ்பர உறவுகளை, நல்லெண்ணங்களை உணர்த்த பலவகைகள் இருக்கலாம். ஆனால் காதல் லீலைகளின் மூலம் மட்டுமே இது சாத்தியப்படும். காதல் தொடர்பான தயக்கங்களைத் தகர்த்து உண்மையான இன்பத்தைப் பெறத் தூண்டுகோலாக அமைவது காதல் லீலைகளே.

உங்கள் காதலை உங்கள் காதலர் அறிந்து வைத்துள்ளார் என்று வெறும் அனுமானத்துடன் இருந்துவிடலாகாது. நீங்கள் உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவில்லையானால், உங்களுக்குச் சம்மதமில்லையோ என்று உங்கள் துணைவர் / துணைவி தப்பர்த்தம் கொண்டுவிடவும் கூடும்.

உணர்வுகள்- அவை எத்தகையனவாக இருந்தபோதிலும் அவை ஏதோ ஒருவகையில் (அடுத்தவருக்கு) உணர்த்தப்படவில்லையானால் பலனளிக்கப் போவதில்லை.

காதல் வேடிக்கையானது- அத்துடன் அக்கறையை ஏற்படுத்துவதும்கூட. பாலுடன் தேன்கலப்பது போல மணவாழ்க்கைக்கு ஒளிபோல் எழிலூட்டுவது காதல்தான்.

❤ ❤ ❤



### காதலை மெருகூட்ட சில அம்சங்கள்

- ♥ "நான் உங்களை என்றும் காதலிப்பேன்!"
- ♥ "நான் எப்போதும் உங்கள் பக்கம்தான்!"
- ♥ "நீங்கள் மிக அழகாக இருக்கிறீர்கள்."
- ♥ "உங்களிடமுள்ள வாசனை எனக்கு வியப்பூட்டுகிறது."
- ♥ "உங்கள் தோற்றம் என்னை எங்கோ இழுத்துச் செல்கிறது."
- ♥ "உங்களைப் பற்றி நான் மென்மேலும் தெரிந்துகொள்ள மென்மேலும் காதல் வசமாகுகிறேன்."
- ♥ "நீங்கள் கூறிய கருத்து மிகவும் அருமையானது."
- ♥ "தங்களுக்கு எந்த வகையில் நான் உதவலாம்?"
- ♥ "இதைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?"
- ♥ "நாம் இருவரும் ஒன்று சேரக்கிடைத்தது பேரதிஷ்டமே!"

இத்தகைய வார்த்தைப் பிரயோகங்கள் தம்பதிகளின் நல்லுறவு வளர உதவக் கூடியவை.

❤ ❤ ❤

### காதலை வெளிப்படுத்த சில நடவடிக்கைகள்

- மாலையில் கதிரவன் மறையும் வேளையில் கடற்கரையில் இருவரும் உலாவச் செல்லுங்கள்.
- மழையில் நனைந்தபடி- முத்தமிடுங்கள்.
- குளியலறையில் கொடி முந்திரிப் பழச்சாறு இருவரும் அருந்துங்கள்.
- உங்கள் இருவருக்கும் மிகப்பிரியமான உணவைத் தயாரியுங்கள்.
- உங்கள் கணவரின் / மனைவியின் சகோதர சகோதரிகளைத் திருப்திப்படுத்தக் கூடியவற்றைச் செய்யுங்கள்.
- ஏற்கனவே இடம்பெறாத ஒரு காரியத்தைச் செய்து ஒருவரை ஒருவர் வியப்பிலாழ்த்துங்கள்.
- அடிக்கடி கைகளை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்.
- படுக்கைக்கு வரும்படி பவ்வியமாக அழையுங்கள்.
- அவர் ஆசைப்படும் சினிமாவையோ நாடகத்தையோ பார்ப்பதற்கு- அவரை அறியாமலே முன்கூட்டி ஆசனங்களைப் பதிவு செய்து அவரை அழைத்துச் செல்லுங்கள்.

# தொலைக்காட்சியும் சதை போடும்

**வே**லைக்குச் செல்லாமல், வீட்டில் இருக்கும் இல்லத்தரசிகளில் பெரும்பான்மையானவர்களின் ஒரே பொழுதுபோக்கு தொலைக்காட்சி பார்த்தல். தினமும் குறைந்த பட்சம் மூன்று மணி நேரமோ அல்லது அதற்கு மேற்பட்ட நேரமோ ரீ.வி. பார்ப்பதில் நேரத்தைச் செலவிடும் பெண்களது உடல் எடை, ரீ.வியே பார்க்காத அல்லது குறைந்த நேரம் ரீ.வி. பார்க்கும் பெண்களின் உடல் எடையைவிட, இரண்டரை மடங்கு அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கிறது சமீபத்திய அமெரிக்க ஆராய்ச்சி ஒன்று.

வீட்டு வேலைகளை முடித்துவிட்டு,



வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டு, ஒரே இடத்தில் உட்கார்ந்தபடியோ, படுத்துக் கொண்டோ, ரீ.வி. பார்க்கும்போது, அவர்களது உடலுக்கு அசைவே இல்லாமல் போகிறது. உடலுக்கும் பயிற்சி இல்லாத காரணத்தால் அவர்களது உணவு சமிபாடடைய வழியின்றி உடல் எடைகூட வழி வகுத்து விடுகின்றது.

எனவே எப்படிப்பட்ட சுவாரசியமான நிகழ்ச்சியானாலும், கண்களை இமைக்காமல், ஒரே நிலையில் இருந்தபடி ரீ.வி. பார்ப்பதைத் தவிர்த்து, உடலுக்கு ஏதேனும் பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும் என்கிறது அந்த ஆராய்ச்சி.

# சமைப்போம் சுவைப்போம்

## உருளைக்கிழங்கு காலிஃபிளவர் கறி

(4-6 பேருக்கு பரிமாறுவதற்கு)

**தேவையானவை:**

நடுத்தர அளவு காலிஃபிளவர்- பூக்களைத் தனித்தனியாகப் பிரிக்கவும்.
உருளைக் கிழங்கு (சிறியவை)- 500 கிராம்- தோலுரித்து இரண்டாக வெட்டவும்.
கரட் (சிறியவை) - 150கிராம்- தோல் அகற்றியது.
இஞ்சிக்கிழங்கு- 2.5 சென்ரிமீட்டர் (1 அங்குலம்)- ஸ்கிரைப்பரில் தேய்த்துத் தூளாக்கவும்.
தக்காளி- 400கிராம்- துகழாக்கப்பட்டது
எண்ணெய்- 2 மேசைக்கரண்டி.
நற்சீரகம்- 1/2 தேக்கரண்டி
கடுகு- 1/4 தேக்கரண்டி
மஞ்சள் தூள்- 1/2 தேக்கரண்டி
மிளகாய்த் தூள்- 1/2 தேக்கரண்டி
உப்பு- 1/2 தேக்கரண்டி

**செய்முறை:**

பெரிய வாணலியில் எண்ணெய் விட்டு சூடாக்கவும். நற்சீரகம், கடுகு இரண்டையும் போட்டு அவை பொரிந்து வெடித்ததும் இஞ்சியைச் சேர்க்கவும். பிறகு மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், உப்பு இவற்றைச் சேர்த்து வதக்கவும். தக்காளியை அதனுள் சேர்த்துக் கிளறி 1 நிமிடம் வேக விடவும்.

அக்கலவையினுள் காலிஃபிளவர், உருளைக் கிழங்கு, கரட் சேர்த்து நன்றாகப் பிரட்டவும். நெருப்பினைக் குறைக்கவும். வாணலியை மூடிவிட்டு 20-25 நிமிடங்கள் வரை வேகவிடவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## பொகவந்தலாவ வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | ஜெயகலா ஜோதிநாதன், |
| | கர்கஸ் வோல்ட் எஸ்டேட், பொகவந்தலாவ. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.
உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.
☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** BH

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-03-1997
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# தனியான பயணமா? தகுந்த யோசனைகள்!

வன்முறைகளும், அராஜகங்களும் நாளுக்கு நாள் பெருகி வரும் காலமிது. இவற்றின் விளைவாக வீட்டில் இருக்கும் பெண்களை விட படிப்பு, வேலை என ஏதோ ஒரு காரணத்திற்காக வீட்டை விட்டு வெளியே வரும் பெண்கள் பலவித பிரச்சனைகளைச் சந்திக்கிறார்கள். எல்லா இடங்களுக்கும், எல்லாப் பெண்களும் சரியான ஆண்துணையுடன் செல்வது என்பது இயலாத காரியம். தவிர்க்க முடியாத காரணங்களால் துணைக்கு யாருமின்றி, தனியே நீண்டதூரம் பயணம் மேற்கொள்ள வேண்டிவரும் போது, பெண்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில விஷயங்கள்:

- ★ முதலில் நீங்கள் எந்த இடத்திற்குச் செல்லப்போகிறீர்கள், யாரைச் சந்திக்கப்போகிறீர்கள் என்பதையும், அங்கே தனியாகச் செல்வது நூறு சதவீதம் பாதுகாப்பானதுதானா என்பதையும் உறுதிசெய்து கொள்ளுங்கள். ஊர்விட்டு ஊர் செல்வதாக இருந்தால், நீங்கள் செல்லவிருக்கும் இடத்தின் சரியான முகவரியையும், முடிந்தால் அவ்விடத்தின் வரைபடத்தையும் உடன் எடுத்துச் செல்லுங்கள்.
- ★ உங்களுக்கு அறிமுகமில்லாத புதிய இடத்திற்குச் சென்று சேர்ந்ததும், நீங்கள் போக வேண்டிய இடத்திற்கான வழி உங்களுக்குத் தெரியாவிட்டால் உடனே மிரண்டு போய், அந்த இடத்திலேயே நின்று கொண்டிருக்காதீர்கள். அருகில் உணவு விடுதிக்கோ, கடைக்கோ சென்று அமர்ந்து நீங்கள் கொண்டு வந்த முகவரியையும், வரைபடத்தையும் வைத்துச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- ★ தனியே வெளியே செல்லும்போது விலை உயர்ந்த நகைகளை அணிவதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடுங்கள். இப்போது தங்கம் மற்றும் வைர நகைகளுக்கு இணையாக ஜொலிக்கக் கூடிய போலி நகைகள் விற்பனைக்கு வந்திருக்கின்றன. அவை உங்களை அழகாகக் காட்டுவதுடன், ஆபத்திலிருந்தும் காக்கக் கூடியவை.
- ★ வெளியூர்களுக்குப் பயணம் மேற்கொள்ளும்போது, அதி நவீன உடைகளை அணிந்து செல்வதைத் தவிர்த்து விடுங்கள். நீங்கள் செல்லும் ஊருக்கேற்றபடி உடையணிந்து செல்வது பாதுகாப்பானது. அந்த ஊருக்குப் பழக்கமில்லாத உடைகளில் சென்றால் நீங்கள் அவ்விடத்திற்குப் புதியவர் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியபடி ஆகிவிடும்.
- ★ வெளியூர்களுக்கு ரயில் பயணம் மேற்கொள்ளும்போது, கூடியவரை இரண்டாம் வகுப்பிலேயே செல்லுங்கள்.
- ★ பயணத்தின்போது நீங்கள் கொண்டு சென்ற பணத்தைச் சரிபார்க்கும் எண்ணத்தில் கைப்பைகளையோ, பெட்டிகளையோ திறந்து எண்ணிப்பார்ப்பதைத் தவிர்த்து விடுங்கள்.



- ★ வெளியூரில் தங்கியிருக்கும் வரை, உங்களது வேலைகளை மாலை வேளைக்குள் முடித்துக்கொண்டு இருட்டுவதற்கு முன் இருப்பிடத்திற்குத் திரும்பி விடுங்கள்.
- ★ வெளியூரில் நீங்கள் தங்கவிருக்கும் இடத்திற்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தின் முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைத் தெரிந்து வைத்திருங்கள்.
- ★ அறிமுகமில்லாத இடத்தில் உங்களை யாரேனும் பின்தொடர்ந்தாலோ, உங்களிடம் பேசமுனைந்தாலோ, அதற்கு மதிப்பளித்து, அவர்களைத் திரும்பிப் பார்ப்பதையும், நின்று பேசுவதையும் தவிர்த்து விடுங்கள். அவர்கள் உங்களை விடாமல் பின்தொடர்வது தெரிந்தால், அருகில் செல்லும் பெண்களுடன் சேர்ந்து-பேசியபடி வேகமாக அவ்விடத்தைவிட்டு நகர்ந்து விடுங்கள்.
- ★ எல்லாவற்றையும் மீறி, பிரச்சனை ஏற்படும்போது உதவி கேட்டு உரத்த குரலில் கத்தத் தயங்காதீர்கள்.
- ★ தற்காப்புக் கலைகளில் ஒன்றிரண்டையாவது கற்று வைத்திருத்தல் பெண்களுக்கு எந்தச் சூழ்நிலையிலும் கண்டிப்பாகக் கைகொடுக்கும்.

# சிவப்பு ரோஜா

**சி**வப்பு ரோஜா தலையில் சூடி அழகு பார்ப்பதற்கு மட்டுமே உகந்தது எனப் பலர் நினைக்கிறார்கள். ஆனால் அதற்கு பல மருத்துவ குணங்கள் உண்டு.

★ தங்க பஸ்பம் செய்ய இதன் சாறைப் பயன்படுத்துகிறார்கள்.

★ கருப்பையில் இரத்தக் கசிவைத் தடுத்து நிறுத்துகின்றது.

★ இதய நோய்களைக் குணமாக்குகின்றது.

★ விட்டமின் 'சி' அதிகம் உள்ளது.

★ பன்னீர் செய்யப் பயன்படுகின்றது.

★ ஈரலில் ஏற்படும் கல்நோயைத் தீர்க்கின்றது.

★ வாய்ப்புண் மற்றும் குடற்புண்ணை ஆற்றிடும் சக்தி இதற்குண்டு.

★ நரம்புக்கு வலிமையூட்டுகிறது.

★ தொண்டை நோய், சளி, இருமல், சுவாசக் கோளாறு, நாவறட்சியைக் குணமாக்குகின்றது.

★ ரோஜாவை காயவைத்துப் பொடிசெய்து தேய்த்து குளித்தால் வியர்வை நாற்றம் போகும். உடல்வெப்பம் குறைந்து வனப்புக் கூடும்.


தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்
பரிசுக் கூப்பன் இல 02

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- இந்த வாரம் முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்

## விமர்சியுங்கள்

வலது கையில்லாத
எத்தனை பேர்
எனது கவிதைகளை
வாசிக்கிறீர்கள்?
* *
கவிதைகளை
வாசித்தால் மட்டும் போதாது;
சுடச்சுட
விமர்சியுங்கள்!
* *
விமர்சனம் என்பது
புகழ்ச்சியில்லை!
* *
நன்றாக இருந்தால்
'நன்று' என்று
சுருக்கமாகச் சொல்லுங்கள்!
* *
சரியில்லையென்றால்
காரணத்தோடு
சூடு வையுங்கள்!
* *
விமர்சனம் என்பது
முணு முணுப்பதல்ல!
* *
உங்கள்
விமர்சனங்கள்
எனது காதுகளையும்
கண்களையும்
கதிகலங்கச் செய்ய வேண்டும்!
* *
விமர்சனமில்லாத
ஆக்கம் என்பது
வேலையில்லாத வேலை!
* *
விமர்சிக்காத
வாசகர் என்பது
பூக்களில்லாத சோலை!
* *
எனவே, இனி
வாசிக்கத் தெரிந்தவர்கள் மட்டும்
விமர்சிக்கலாம்!
* *
விமர்சிக்கத்
தெரிந்தவர்கள் மட்டும்
சுவாசிக்கலாம்!
* *
அதுசரி.....
வலது கையில்லாத
எத்தனை பேர்
எனது கவிதைகளை
வாசிக்கிறீர்கள்?

எம். சுரேஷ்.

## முறைமாறினால் குறை சேருமாம்

வெள்ளிக்கிழமை யன்று
விளக்கு ஏற்றியபின்,
துள்ளித் துடித்தபடி
தோழன் ஓடிவந்தான்!
***
"பிள்ளைக்கு அம்மை நோய்!
பெண்டுக்கும் அறுவைச் சிகிச்சை!
தொல்லை தூரத்துவதால்
தொழில் புரிய இயலவில்லை!
***
மனைவிக்கும் மகவுக்கும்
மருந்து, பால் வாங்குதற்கும்,
தினந்தினஞ் சாப்பாட்டுக்கும்
திண்டாட்டம்! அதனாலே...!
பணம் ஐயாயிரம்
பார்த்து உதவுங்கள்!
குணமானவுடன் தேடி
கொண்டு வந்து தாரேன்!
ஈருயிரையும் காப்பாற்ற
இப்போதே கொடுங்கள்!"–என
ஈரவிழி நீர் சொரிய
என் கரத்தைப் பற்றிட்டான்!
***
பத்தாயிரம் சீட்டுக்காசில்
பாதியை நீட்டியபின்,
மெத்தக் குழைந்தவனாய்
மிக நன்றி கூறிச்சென்றான்!
***
"வெள்ளிக்கிழமை இரவு
வேகமாய்ப் பணத்தை
அள்ளிக் கொடுக்கலாமா?
ஐந்து சதம் மிஞ்சுமா?
என்னை ஒருவார்த்தை
எதற்கும் கேட்காமல்,
தன்மனம் போனபடி
தர்மமா செய்கிறீர்கள்?"
இல்லாள் என்னை
இப்படிக் கடிந்தமையை
உள்ளம் பொறுக்கவில்லை!
***
"உன்வாயை மூடு!" என்றேன்.
"முறைமாறி நடந்தால்
முன்னோர் மொழிந்தபடி
குறைவந்து சேரும்!"–என்று
குமுறினாள் என் துணைவி!
***
நோயும் குணமாகி
நொந்த நிலையும்மாறி
தாயும் சேயும்
தகப்பனும் குதூகலித்தார்!
***
கண்டுங் காணாதவனாய்
கடுவேகமாய் தோழன்,
முண்டியடித்துக்கொண்டே
முதுகு தெரிய ஓடுகிறான்!
***
ஒரு சதமும் தாராமல்
ஓரே வேகமாக
இருமூன்று ஆண்டுகளாய்
என் தோழன் ஓடுகிறான்!
***
கோபப்பட்டுக் கொண்டால்
கொடுத்தபணங் கிடைக்காதாம்.
சாபமிட்டே அவனைச்
சதாசுற்றி யலைகின்றேன்!

தமிழோவியன்.

## விடிய மறுக்கும் இரவு

உறங்க மறுக்கும்
உயிர்த்துளிகள்–
என் வாலிபத்தால் வடிந்தோடுது!
▫★▫
சிற்பியின் உளியாய்
மூளை செதுக்கிச் செதுக்கி
குவிக்கும்–
உன் நினைவுகளை...!
▫★▫
படுக்கை
சுடுகிறது....!
▫★▫
என் வானத்து வெள்ளியொன்று
வழிமாறுவதை எண்ணி–
என் மனம்
அடுப்பாய் பற்றி எரியுது..!
▫★▫
ஒவ்வொரு 'நாளையையும்'
'இன்றைய' கருவறை
நிந்தனை செய்கிறது...!
▫★▫
வானம் உமிழ்ந்து துப்பாத
நிலாவில்–
புகைபடிந்து கறுத்துப்போனதாய்
ராத்திரி முனகுது...!
▫★▫
இத்தனைக்கும்–
இது ஒரு அமாவாசை ராத்திரி...!
▫★▫
ஊகித்திருப்பாய்–
இந்த ராத்திரியின் சூன்யத்தை..!
▫★▫
என் 'பால்வீதி(க்)' கோளொன்றை
எந்த 'உடுத்தொகுதியின்'
வால்வெள்ளியொன்றோ
வந்து மோதி
வாரிச் செல்கிறதே...!
▫★▫
உனக்காக ஒரு கண்ணீர்த்துளி
என் இதயத்தில் குமிழித்து–
இமைப்பீலியால் வடிந்தோடுது...!
▫★▫
நம்பு....!
▫★▫
உன் ஈர்ப்புப் புலத்திலிருந்து
நிரோதிக்கப்பட்டாலும்–
அண்டத்தின் எந்தவொரு மூலையிலாவது
உபவாசம் செய்து கொண்டிருப்பேன்–
உனக்காக...!

சிந்தனைப் பித்தன்.

## யுத்தத்தின் அகோரத்தில்....

நிவாரணத்திற்காய் குவியும்
அகதிகளைப்போல்
முண்டியடித்தன
கொசுக்கள்!
••
மலகூடக் கிணற்றைத் திறந்தவன்
திகைத்து நின்றான்!
அதற்குள்ளும்
மனித சடலம்!
••
மெய்யில்லாத மேனிகரைந்து
எலும்புக் கூட்டில்
புழுக்கள் மேய்ந்தன!
••
கண்காட்சிக்கு வைத்த
கலைப்படைப்பாய்
அனேகர் வந்து பார்த்தார்கள்!
••
இன அடையாளங்கள்
இல்லையாதலால்
உரிமைகோர ஒருவரில்லை!
சடலத்தையும்,
விசாரணையையும்
ஒரே குழியில் புதைத்ததோடு
எல்லாமே முடிந்தன!
••
தொடர்ந்து செல்லும்
இந் நிகழ்வுகளால்
இந்த மண்ணில்
எங்கு தோண்டினாலும்
எலும்பு மட்டும் பிடுங்கலாம்....
தேவைக்கு மிஞ்சியதாய்....!
••

மீராவோடை எஸ். நளீம்.

## மிதந்தவன்

வயல்காணி விற்று
வட்டிக்குப் பணம் வேண்டி
வயதுக்கட்டுப்பாடு வலை மீண்டு
வாழ்ந்து முடிக்க
இத்தாலியில் இறங்கி– அம்மாவுக்கு
இன்பமாக செய்தியனுப்ப போனவன்...!
கினாவிக் கடல் கடந்தவன்
கிரேக்க கடலில் மிதந்தான்!
அம்மாவோ கொழும்பு விடுதியில்
அம்மாவின் கதி...?

க. ரவீந்திரன்– வவுனியா.

## இதுதான் காதல் என்பதா?

வாழ்வில் எல்லாம்–
அதிகமாக எல்லாமே
சலித்துப் போச்சு!
**
காலையில் எழுந்து
கடன்களை முடிப்பது,
அவசரமாக
அலுவல்கள் பார்ப்பது....
**
பதறுவது....,
பரிதவிப்பது....,
பகல் தூக்கம்.....
அனைத்தும்.....!
**
கடிதம் எழுதுவது....,
கதைப்பது....,
கவிதை வரைவது....
கண்ணீர் வடிப்பது...!
**
செய்திகள் கேட்பது...,
ஏன்– சிலசமயம்....,
உண்பது–
சுவாசிப்பது கூட...,
**
என்ன காரணமென்று
எல்லோரிடமும் கேட்டேன்.
"எப்போதில் இருந்து
இப்படி" என்றார்கள்!
**



யோசிக்கையில்
ஞாபகம் வந்தது–
"அன்றுதானே
உன்னைக் கண்டேன்!"

சுபா வரன்– கண்டி.

## யார் இவர்கள்





↑ இரண்டு படங்களிலும் இருக்கும் குட்டிப்பையன் யார் என்று தெரிகிறதா? மும்பாய் படவுலகின் பிரபல நடிகர். சில காலம் கம்பி எண்ணியவர். என்ன, கண்டுபிடித்துவிட்டீர்களா?

↓ சுட்டிப்பையன் முகத்தை கூர்ந்து பாருங்கள். ஹிந்திப் படவுலகின் இன்றைய இளம் ஹீரோ. பெயர்'அ'வில் ஆரம்பமாகும். கவர்ச்சிப்புயல் ஊர்மிளாவுடன் இவர் நடித்த படமும் ஹிட்டானது. ஊகித்து விட்டீர்களா?





↓ இந்தக் குட்டிப் பாப்பாவும் இன்று ஹீரோயின் ஆகி ஹிந்திப் பட உலகை கலக்கிவருகிறார். தமிழிலும் பிரபுவின் ஜோடியாக நடிக்க வருவதாகப் பேசப் பட்டவர். பெயர் 'க்' வில் ஆரம்பித்து கபூர் என்று முடியும். என்ன ஜூ. கேயா? உங்கள் விடைகள் யாவும் கச்சிதம் தானா? செல்லுங்கள் பக்கம் 18.



## இந்த வாரம் உங்கள் பலன்

(16.03.1997 தொடக்கம் 22.03.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பிரயாணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பி.ப. 1 | மணி |
| புதன்- கடன்தொல்லை, மனக் கவலை. | பி.ப. 3 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 | மணி |
| சனி- உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, செய்தொழில் இலாபம். | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | மு.ப. 9 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவம். | மு.ப. 10 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |
| சனி- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பண வரவு. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- காரியசித்தி, தொழில் பேறு. | பகல் 12 | மணி |
| செவ்வாய்-வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 | மணி |
| புதன்- தொழில் பேறு, பண வரவு. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 3 | மணி |
| வெள்ளி- பிரயாணக் கஷ்டம், தொழில் மந்தம். | பி.ப. 2 | மணி |
| சனி- பயனுள்ள செயல், பணச் செலவு. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- மனக்கிலேசம், தொழில் உயர்ச்சி. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பொருள் பேறு. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியசித்தி. | பி.ப. 1 | மணி |
| புதன்- புதிய முயற்சி, அந்நியர் பகை. | பி.ப. 3 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | மு.ப. 9 | மணி |
| சனி- தொழில் மந்தம், பயனற்ற செயல். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவ மிகுதி. | பி.ப. 3 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பகல் 12 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 4 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | காலை 7 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, காரியசித்தி. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, காரியசித்தி. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியத்தடை. | பி.ப. 3 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, பணக் கஷ்டம். | பி.ப. 4 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் 12 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 | மணி |
| சனி- வெளியாரால் தொல்லை, பயமிகுதி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், சனி, புதன், வெள்ளி, கேது. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |
| மகரம் | - வியாழன். |

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, மனக் கவலை. | பி.ப. 1 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. | காலை 7 | மணி |
| புதன் - வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பி.ப. 3 | மணி |
| சனி- செய்தொழில் நன்மை, பண வரவு. | மு.ப. 10 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், காரியத்தடை. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 4 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 9 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், பொருள்பேறு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி. | பகல் 12 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பயனுள்ள செயல். | பி.ப. 3 | மணி |
| சனி- உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பலவித பேறு. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, காரியசித்தி. | மு.ப. 9 | மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, பயனுள்ள செயல். | பி.ப. 3 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 3 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 4 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, காரியத்தடை. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 2 | மணி |
| புதன்- உறவினர் பகை, பணச் செலவு. | பகல் 11 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், காரியானுகூலம். | பகல் 12 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| சனி- தொழில் நிலை உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பிரயாணக் கஷ்டம். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. 1 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணச் செலவு. | பகல் 11 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- கடன் சுமை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 3 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, புதிய முயற்சி. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, தொழில் பேறு. | காலை 7 | மணி |
| புதன்- வீண் முயற்சி, பொருள் செலவு. | பி.ப. 3 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, காரியத்தடை. | பகல் 12 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 4 | மணி |
| சனி- பலவித பேறு, தொழில் கஷ்டம். | மு.ப. 10 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## சிரிக்கும் முல்லைகாள்....!

சின்னச் சின்னப் பிள்ளைகாள்
சிரிக்கும் பள்ளி முல்லைகாள்
எண்ணும் எழுத்தும் கண்களாய்
இங்கு பயிலும் கிள்ளைகாள்

நேற்றுப் படித்த பாடங்கள்
இன்று நெஞ்சில் கூடுமாம்.
இன்று படிக்கும் பாடங்கள்
நாளை நெஞ்சில் கூடுமாம்.

அன்னை தந்தை வாத்தியார்
ஆக மூன்று தெய்வங்கள்
பள்ளி வீடு கோவிலாம்
பயில்வதெல்லாம் வேதங்கள்!

உலகில் கடல் பெரியது
வாழும் நிலம் சிறியது.
கடலும் நிலமும் தருவது
மனிதருக்கே உரியது!

-பரிணாமன்-

மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார்,
அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பூதத்தால் முடியாத வேலை

### பாப்பா முரசு சிறுகதை



ஓர் ஊரில் கந்தன் என்ற கருமி ஒருவன் இருந்தான். அவனிடம் ஏராளமான நிலபுலன்கள் இருந்தன. அவற்றில் பயிர் செய்து அவன் மிகவும் செல்வந்தனாக இருந்தான். அவனிடம் பல கூலியாட்கள் வேலை செய்து வந்தனர்.

ஒருநாள் அவ்வூருக்கு ஒரு துறவி வந்தார். அன்று மாலை கந்தன் துறவியிடம் வந்தான். வந்து அவரிடம்,

"சுவாமி! நான் இந்த ஊரில் நிறைய நிலபுலன்கள் வைத்திருக்கிறேன். எனது வயல்களில் ஏராளமானோர் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்குக் கூலியாக நிறையப் பணம் செலவாகிறது.

எனவே நான் இடுகின்ற வேலைகளை எல்லாம் கூலி இல்லாமல் செய்யக் கூடிய பூதம் ஒன்றை எனக்கு அடிமையாகத் தரவேண்டும்," என்று கேட்டான்.

இதைக் கேட்ட துறவி சிரித்துக் கொண்டே,

"அன்பனே! என்னால் இப்பொழுதே ஒரு பூதத்தை உனக்கு அடிமையாக கிடைக்கச் செய்ய முடியும். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்! நீ அந்தப் பூதத்திற்கு வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். உன்னால் அந்தப் பூதத்திற்கு வேலை கொடுக்க முடியவில்லை என்றால் அது உன்னை விழுங்கிவிடும். அதற்குச் சம்மதமா?" என்று கேட்டார்.

"சம்மதம்," என்றான் கந்தன்.

"அப்படியானால் இன்றிரவு வீட்டிற்குச் சென்று தூங்கு. தூங்கி எழுந்தவுடன் நீ இடும் வேலையைச் செய்ய ஒரு பூதம் உன் முன்னால் தோன்றும். ஆனால் நான் சொன்னதை மறந்து விடாதே!" என்றார் துறவி.

கந்தன் மகிழ்ச்சியோடு வீட்டுக்குச் சென்று உறங்கினான். எழுந்தவுடன் அவன் முன் ஒரு பெரிய பூதம் தோன்றியது. பூதத்தைக் கண்ட கந்தன்,

"என் ஐயாயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. நன்றாக உழுது விட்டு வா!" என்றான்.

கால் மணி நேரத்திற்குள் திரும்பிய பூதம், "வேலை முடிந்தது" என்று கூறியது. சந்தேகப்பட்ட கந்தன், பூதத்துடன் நிலத்தைப் பார்வையிட்டான். நன்றாக உழப்பட்டு இருந்தது.

மகிழ்ச்சியடைந்த கருமி கந்தன் பூதத்திடம் குளம் ஒன்றைத் தோண்டச் சொன்னான். இந்த வேலையைச் செய்ய பூதத்திற்கு அரைமணி நேரம் பிடித்தது. இப்படி எந்த வேலை கொடுத்தாலும் அதை உடனே முடித்துவிட்டு, 'எனக்கு ஏதாவது வேலை கொடு' என்று கேட்டது.

எல்லா வேலையும் முடிந்துவிட்டது. இனிமேல் என்ன வேலையைப் பூதத்திற்குக் கொடுப்பது என்று கந்தனுக்குப் புரியவில்லை. வேலை எதுவும் கொடுக்காவிட்டால் தன்னை விழுங்கி விடுமே என்று பயந்தான்.

'பூதம் வேலை செய்யாவிட்டாலும் பரவாயில்லை; இது என்னை விட்டுப் போனால் போதும்' என்று சிந்தித்த கந்தன், பூதத்தை அழைத்தான்.

"என்ன வேலை? கட்டளையிடுங்கள்," என்றது பூதம்.

"இந்த ஊர் எல்லையில் ஒரு நாய் படுத்திருக்கிறது. நீ நாயைக் கொல்லாமல், பட்டினி போடாமல் அதன் வாலை நிமிர்த்த வேண்டும். உன்னால் அந்த வேலையைச் செய்ய முடியாவிட்டால் திரும்பிவராதே!" என்றான் கருமி கந்தன்.

பூதத்தால் கந்தன் சொன்ன வேலையைச் செய்ய முடியவில்லை. அதனால் அவனிடம் பூதம் திரும்பி வரவில்லை. தனது உயிர் தப்பியதை நினைத்து சந்தோஷப்பட்ட கந்தன், பழைய படி வேலையாட்களைக் கொண்டே தனது வேலைகளைச் செய்வித்தான். ■

## வாரம் ஒரு நாடு

### டுனீஷியா

**தலைநகர்**–டுனிஸ்
**பரப்பு**–1,64,150 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை**–89 இலட்சம்
**மொழி**–அரபி, ஃபிரெஞ்சு
**எழுத்தறிவு**– 65%
**சமயம்**– இஸ்லாம்
**நாணயம்**–டினார்
**தனிநபர் வருமானம்**–1750 டொலர்

**அமைவிடம்:**

குடியரசு நாடான இது மத்திய தரைக் கடல் பகுதியில் அமைந்துள்ளது.

**வரலாறு:**


1883முதல் டுனீஷியா ஃபிரான்ஸின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1956ல் சுதந்திரம் அடைந்தது. 1957ல் குடியரசாயிற்று. ஜனாதிபதியையும், தேசிய பாராளுமன்றத்தையும் மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.



**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கியதொழில். கோதுமை, பார்லி, ஓட்ஸ், பேரீச்சம்பழம் போன்றவை முக்கிய விளைபொருட்கள். ஒலிவ் எண்ணெய், மதுவகை, பொஸ்பேட் போன்றவை ஏற்றுமதிப் பொருட்களில் முக்கியமானவை. ■

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.03.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 184
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 182

பரிசுக்குரியவர்,
சூ. செந்தூரன்,
வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி ஷர்மிளா, L/G ஸ்டொக்கம், சாமிமலை. | ஏ.ஓ. ஹஸ்மியா, பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம். புத்தளம். |
| செல்வன் சிந்துஷன் சந்திரசேகர், 660, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | செல்வி யோகினி திருக்கணேசன், வ/ சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| ஐ. அஸ்மி அஹமட், மின்ஹாத் ம.வி, திக்குவல்லை. | க. ஷ.்ப்ராஸ் மொஹமட், மஹவெல முல்ல, முஸ்லிம் வித்தியாலயம், வென்னவாய. |
| அ. சத்தியதாசன், ப/ வேவெஸ்ச இல-02, தமிழ் வித்தியாலயம், பதுளை. | அ. நிறோஷினி புனித மரியாள் வீதி, மட்டக்குளிய, கொழும்பு-15. |
| எஸ். சுதர்சினி, அல் அக்ஷா மத்திய கல்லூரி, கல்பிட்டி. | அ. ஸ்ரீபிரசாந்த், மட்/களுதாவளை ம.வி., களுதாவளை. |

## காய்கறி உற்பத்தியில் முதலிடம்

உலகிலேயே சனத்தொகை கூடிய நாடுகளில் முதல் இரண்டு இடங்களையும் பெறுவது சீனாவும், இந்தியாவும். காய்கறி உற்பத்தியிலும் உலகில் முதல் இரண்டு இடங்களில் இவை உள்ளன.



முதல் இடத்தில் இருக்கும் சீனா ஆண்டொன்றுக்கு 90மில்லியன் தொன் காய்கறிகளை உற்பத்தி செய்கிறது. இரண்டாவதாக இருக்கும் இந்தியா ஆண்டொன்றுக்கு 66 மில்லியன் தொன் காய்கறிகளை உற்பத்தி செய்கிறது. ●

## தோமஸ் ஆல்வா எடிசன்

நம் இல்லங்களில் மாலையானதும் இருள் சூழ்கிறது. ஒரு சிறு குமிழைத் தொட்டதும் இருளகன்று எங்கும் ஒளி வெள்ளம் பரவுகிறது. ஒரு சிறு பெட்டியின் சூட்சுமத்தைத் தட்டியதும் காதுக்கினிய இசை எங்கும் பரவுகிறது. இவை தவிர நம்மைச் சூழ்ந்துள்ள பலதரப்பட்ட கருவிகளையும் நாம் சுலபமாக இயக்கிப் பயனடைகிறோம். இவற்றையெல்லாம் முதன் முதலில் கண்டு பிடிப்பதற்கு முன்னோடியானவர் தோமஸ் ஆல்வா எடிசன்தான். அவரை அறிவியல் உலகின் தந்தை என்று கூறினால் மிகையாகாது.


அமெரிக்காவில் 1847ம் ஆண்டு ஒரு வறியகுடும்பத்தில் எடிசன் பிறந்தார். பள்ளிக் கூடத்தில் இவருக்கு எந்தப் படிப்பும் ஏறவில்லை. பார்க்கும் பொருளையெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்துகொண்டிருப்பாரே அல்லாமல் பள்ளிப்படிப்பு இவருக்குச் சுத்த சூனியமானது. இவருடைய 12வது வயதில் ஒரு ரயில் நிலைய அதிகாரிக்கு நேரவிருந்த விபத்திலிருந்து காப்பாற்றினார். அந்த அதிகாரி எடிசனுக்கு அறிவுக் கண்களைத் திறந்து விட்டார். தந்தித் தொடர்பு முறையை அவர் கற்றுக்கொடுத்து. அத்துறையில் பயிற்சிபெற ஏற்பாடு செய்து கொடுத்தார். அதனைத் தொடர்ந்து தானாகவே தந்தி அனுப்பும் துறையில் பல புதுமைகளை எடிசன்



செய்யலானார். இவருடைய தந்தி அச்சுப் பதிவு முறைபற்றி அமெரிக்க மாநிலங்கள் தோறும் சென்று விளக்கவுரைகள் அளித்தார். அதனால் பெயரும் புகழும் மட்டுமல்லாமல் பணமும் சேர்ந்தது. அப்பணத்தை வைத்து ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணித்து ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார்.

எடிசன் தனது 29வது வயதில்–1876ல் கிராமஃபோனைக் கண்டுபிடித்தார். இதுதான் முதன் முதலில் ஒலிப் பதிவு செய்ய உதவிய சாதனமாகும். கரிக்கலவையிலான சில்லுகளில் இசை மற்றும் பாடல்களைப் பதிவு செய்யும் முறை தோன்றியது. இதுவே இன்று வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் தோன்றக் காரணமானது. மின்சார ஒளிச்சிமிழ் (பல்ப்) உருவாகவும் தோமஸ் ஆல்வா எடிசனே காரணமானார். இன்று நாம் பயன்படுத்தும் பெரும்பாலான பொருட்கள் தோன்றக் காரணகர்த்தாவான தோமஸ் ஆல்வா எடிசன் 1931 ஒக்டோபர் 18ம் திகதி–தமது 84வது வயதில் காலமானார். ●

## உலகின் மிக உயர்ந்த கட்டடங்கள்



★ **பெட்ரோனாஸ் டவர்ஸ்:**
கோலாலம்பூரில் அமைந்திருக்கும் இந்த இரட்டைக் கட்டடங்களின் உயரம் 1482 அடி.. 1996ல் இது உலகின் மிக உயர்ந்த கட்டடமாகக் கருதப்பட்டது.

★ **சியர்ஸ் டவர்:**
சிகாகோவில் அமைந்துள்ளது. 1453அடி உயரம். 1994ல் உலகின் உயர்ந்த கட்டடமாகக் கருதப்பட்டது.

★ **லாடூர் சான்ஸ் பின்ஸ்:**
பாரிஸ் நகரில் அமைந்துள்ள இக்கட்டடத்தின் உயரம் 1377அடி. முடிவில்லாத இந்தக்கட்டடம் 1987ல் இருந்து உலகின் மிகப் பெரிய கட்டடமாக முயற்சித்து வருகிறது.

★ **எம்பையர் ஸ்டேட் பில்டிங்:**
நியூயோர்க்கில் உள்ளது. 1250அடி உயரமான இக்கட்டடம் 1931ல் கட்டி முடிக்கப்பட்டது.

★ **கனாரி வாஃப் டவர்:**
இலண்டனில் அமைந்துள்ளது. 800 அடி உயரம். இங்கிலாந்தின் உயர்ந்த கட்டடம் இதுதான்.

★ **சோங்கோயிங் டவர்:**
சீனாவில் அமைந்திருக்கும் இதன் உயரம் 1550 அடி. இந்த வருடத்திற்குள் இதன் வேலைகள் முடிவடைந்து விடும். வேலைகள் பூர்த்தியடைந்ததும் உலகின் மிக உயரமான கட்டடம் என்ற பெயரை பெறும்.

★ **மில்லியன் டவர்:**
ஜப்பானில் கட்டப்பட்டுவரும் இக்கட்டடத்தின் உயரம் 2625அடி.. 2001ம் ஆண்டில் இதுவே உலகின் மிக உயர்ந்த கட்டடமாக இருக்கும். ■

www.padippakam.com

## சென்றவாரம்

கணேஷ், அந்த ஆசாமி, பஹதூர்- சண்டையிடுகிறார்கள். துப்பாக்கியை அனிதா ஜன்னல் வழியாக வீசி எறிந்து விட்டு அறையைத் தாளிட்டுக் கொள்கிறாள்.

ஜீப் வருகிறது. பொலிஸ் ஜீப். அவசர அவசரமாக பஹதூர் கராஜைத் திறந்து கறுப்பு அம்பாஸிடரைக் கிளப்பி அந்த ஆசாமியையும் ஏற்றிக்கொண்டு குறுக்குச் சாலை வழியே கிரீச்சிட்டுத் தப்புகிறார்கள்.

போகும்போது கணேஷை மிரட்டி விட்டுச் செல்கிறான் அந்த ஆசாமி.

இன்ஸ்பெக்டர் ராஜேஷ், கான்ஸ்ட பிள்கள், மோனிக்கா வந்து சேர்கிறார்கள். மற்றொரு ஜீப்பும் வருகிறது.

ராஜேஷ் வெளியில் ஓட: மோனிக்காவும் கணேஷும் தாளிட்ட அறையை நோக்கிச் செல்ல....

— அங்கே.. —

# அனிதா இளம் 18 மனைவி

நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் சுஜாதா



ஜீப் புறப்படும் சப்தம் கேட்டது. ராஜேஷ் உள்ளே வந்தார். "நீங்கள் போகவில்லையா?" என்றான் கணேஷ்.

"மற்றொரு ஜீப் வருகிறது. அதில் நாம் எல்லோரும் போகலாம். அதில் ரேடியோ இருக்கிறது. கண்ட்ரோல் ரூமுக்குச் சொல்லி செய்தி அனுப்பலாம். மீரட்டுக்குச் செல்வோம்..... பிடித்து விடலாம். கார் நம்பர் என்ன?"

★★★

கணேஷ் கதவைத் தட்டினான். "அனிதா! அனிதா!" பதில் கேட்டதா என்ன?

"அனிதா, நான் தான் கணேஷ். அவர்கள் போய்விட்டார்கள். நான், இன்ஸ் பெக்டர் ராஜேஷ், மோனிக்கா மூன்று பேர் தான் இருக்கிறோம். கதவைத் திறவுங்கள்."

மெலிதாகக் குரல் கேட்டது. "இன்ஸ் பெக்டர் எதற்கு? என்னைக் கைது செய்யவா?"

"இல்லை," என்றான் கணேஷ்.

"என்ன இது? புரியவில்லையே!" என்றார் ராஜேஷ்.

"போகும்போது சொல்கிறேன்....... "அனிதா! உங்களுக்கு ஒன்றும் நேராது. நான் உத்தரவாதம். நான் லாயர்!"

"கணேஷ், என்னைக் காப்பாற்று வீர்களா?"

"கடைசி வரையில் அனிதா!"

கதவு திறந்தது. அனிதா நின்றாள். பொறியைத் திறந்ததும் எலியின் கண்கள் போல் பயம். இல்லை முயல், இல்லை, மான். இல்லை, யோசிக்க நேரமில்லை.....

"அனிதா!" என்றாள் மோனிக்கா.

"மோனி! உனக்குத் தெரியுமா?"

"தெரியாது அனிதா! என்ன?"

"நான் எல்லாவற்றையும் சொல் கிறேன்."

"அனிதா நீங்கள் சற்று நேரம் பேசாமல் இருங்கள். இன்ஸ்பெக்டர் ராஜேஷ், அனிதாவின் ஸ்டேட்மெண்ட்டை நீங்கள் அப்புறம் எழுதிக் கொள்ளலாம்."

"எனக்கு ஒன்றும் புரியவில்லை கணேஷ்!"

"சொல்லுகிறேன் இன்ஸ்பெக்டர்! இப்போது மிக முக்கியம், அந்தக்காரைப் பிடிப்பது!"

"பிடித்து விடலாம்."

மற்றொரு ஜீப் வெளியே வந்து ஹார்ன் அடித்தது.

"லெட்ஸ் கோ," என்று கத்தினான் கணேஷ்: "அனிதா! மோனிக்கா, நீங்களும் வரவேண்டும்!" என்று வெளியே ஓடினான்.

அவர்கள் அவனைத் தொடர்ந்தார்கள்.

'வெல்கம் டூ மீரட்' என்றது போர்டு.

அங்கிருந்து சற்று தூரத்தில் குறுக்கே சாலையைத் தடுப்பதற்காக நீண்ட, கறுப்பு-மஞ்சள் அடித்த அந்தக் கம்பம், ஏற்றம் போல் ஒரு முனையில் பாறாங்கல் கனத்தில் உயர்ந்து நின்று கொண்டிருக்கிறது.

பக்கத்தில் ஒரு தற்காலிகக் கொட்டகையில் ஒரு மேஜை, ஒரு நாற்காலி, ஒரு பெஞ்ச், ஒரு சுராய், அதன்மேல் கவிழ்ந்த ஒரு கிளாஸ், இரண்டு சோம்பேறிகள். ஆக்டராய் சுங்கவரி வசூலுக்காக ஓர் இடம் இருந்தது. சில லாரிகள் நின்று கொண்டிருந்தன. சில சர்தார்ஜிகள் எதிரே டீக்கடையில் பெரிய கிளாஸ்களில் டீ உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள். நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவன் மறுபடி தப்பாகக் கூட்டிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு உள்ளூர் போலிஸ் ஜீப் வந்து நின்றது. அதில் இருந்து இறங்கிய ஒருவர் அவசரமாகச் சென்று அந்தக் கூட்டல் பேச, அந்தச் சோம்பேறிகளில் ஒருவன் எழுந்து வந்து அந்தக் கம்பத்தைக் கீழே தாழ்த்தினான். மற்றொருவன் சற்று தூரம் சென்று சிவப்புக் கொடியுடன் ஓர் எச்சரிக்கைப் பலகையை வைத்தான்.

கான்ஸ்டபிள் சிகரெட் பற்றவைத்துக் கொண்டார்.

"அம்பாஸிடர். கறுப்பு. டி.எஸ்.கே 1836 அல்லது 1386. மற்றவர்களை விட்டு விடலாம்! அவ்வளவுதானே!" என்றான் மற்றவரிடம்.

மற்றவர் தலையசைத்து நெருப்புக் கேட்டார்.

★★★

பஹதூர் கண்ணாடியில் பார்த்தான். "ஸார், ஜீப் தெரிகிறது. அவர்கள் பின் தொடர்கிறார்கள்."

அவர் திரும்பிப் பார்த்தார். "ஸ்டெப் ஆன் இட் மிதி!" முள் 100-ஐ எட்டியது.

★ ★ ★

"நான் போய் அந்தப் பக்கம் நிற்கிறேன்," என்றார் கான்ஸ்டபிள்.

"டேய், கம்பை இன்னும் தாழ்த்திப் பிடி!"

"கட்டி விடவா ஸாப்?"

"கட்டாதே. பிடித்துக் கொண்டிரு. பஸ் லாரி எல்லாம் விட்டு விடு. கார் வந்தால் தழை."

★★★

**100**க்கும் 110க்கும் இடையில் முள் நடனமாடியது.

"தும் ஹஸீ மே ஜவா பார்த்தாயா?" என்றார் கான்ஸ்டபிள்.

"இல்லை."

"ஹேமமாலினி, தர்மேந்தர், அச்சா பிக்சர் சார்."

"இடியட்! மிதி!"

"ஸாப், ஆக்ஸிலேட்டர் கீழே படுகிறது."

'வெல்கம் டு மீரட்!' என்றது போர்டு. அங்கிருந்து சற்றுத் தூரத்தில் குறுக்கே சாலையைத் தடுப்பதற்காக.....

"லுக் அவுட் பஹதூர்...."

டூலேட்!

அந்தக் குறுக்குக் கம்பம் விண்ட் ஷீல்டின் கண்ணாடியின் குறுக்கே நொறுங்க, சிலந்தி வலைபோல் உடனே அதில் விரிசல்கள் தோன்ற-

110 கிலோமீட்டர் வேகத்தில் பஹதூர் நிலையிழந்தான்.

அந்த அம்பாஸிடர் மிக அழகாகச் சாலையை விட்டு விலகி, இரண்டு சக்கரங்களில் பாதி தூக்கிக் கொண்டு இரண்டு அல்லது மூன்று செகண்ட் சென்று அந்த மரத்தில் பட்டு, திடீரென்று அதன் உருக்கு அந்தரங்கங்கள் அத்தனையும் தெரியக் கவிழ்ந்து பின் சக்கரங்களில் மட்டும் வெகு வேகமாகச் சுழல...அதன் ஹாரன் தொடர்ந்து ஒலிக்க ஆரம்பித்தது.

ஸர்தாஜிகள், இரண்டு சோம்பேறிகள், இரண்டு கான்ஸ்டபிள்கள் அந்தக் காரை நோக்கி ஓடினார்கள்.

★★★

"என்ன ஆயிற்று?" என்றார் ராஜேஷ்.

"ஸார், டில்லியிலிருந்து மெஸேஜ் வந்தது, கறுப்பு அம்பாஸிடர் காரை நிறுத்தும்படி ரோட் பிளாக் செய்திருந்தோம். கண்மூடித்தனமாக வந்தது அந்தக் கார்."

"அதில் இருந்தவர்கள் என்ன ஆனார்கள்?" என்றான் கணேஷ்.

"அந்த டிரைவர் உயிருடன் மயக்கத்தில் இருக்கிறான். முன் சீட்டில் இருந்த மற்ற ஆசாமி போய்விட்டார். சான்ஸே இல்லை."

"மோனிக்கா!" என்று கூப்பிட்டான் கணேஷ். மோனிக்கா ஜீப்பில் இருந்து இறங்கி வந்தாள். "அனிதா நீங்கள் இருங்கள். ராஜேஷ் வாருங்கள்."

அனிதா தலையைக் குனிந்து கொண்டு ஜீப்பில் உட்கார்ந்திருக்க அவர்கள் மூவரும் அந்தக் கவிழ்ந்த காரை நோக்கிச் சென்றார்கள். தூரத்தில் அம்புலன்ஸ் நின்று கொண்டிருந்தது. அதிலிருந்து ஸ்ட்ரெச்சர் கீழே காரின் அருகில் வைக்கப்பட்டிருந்தது. இரண்டு வெள்ளை உடை அணிந்த சிப்பந்திகள் அந்த உடலை அதன்மேல் மெதுவாக வைத்தார்கள்.

"மோனிக்கா, அருகே போய்ப் பார்."

மோனிக்கா அருகே சென்று பார்த்தாள். அவளது கிறீச்சிட்ட அலறலில் அந்த மரத்திலிருந்து பறவைகள் படபடவென்று சிறகடித்துப் பறந்தன.

"அப்பா! டாடி! அப்பா!" கூவிக் கொண்டேயிருந்தாள் மோனிக்கா!

✶☆

"இது எப்படி சாத்தியம்? கணேஷ்! மை காட்! என்னால் நம்பவே முடியவில்லை!" என்றார் ராஜேஷ்.

ஜீப்பில் அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். மோனிக்கா உடை கலைந்து தலை கலைந்து வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு தடவை விசித்துக் கொண்டிருந்தாள். அனிதா, "எனக்கு ஆஸ்பிரின் வேண்டும்!" என்றாள்.

"கடை வந்ததும் நிறுத்தச் சொல்கிறேன். ராஜேஷ் என்ன சொன்னீர்கள்?"

"இட்ஸ் அன்பிலீவபிள்."

"அனிதா, சொல்லுங்கள்."

"கணேஷ், எனக்குச் சிறைவாசம் கிடைக்குமா?"

"எதற்கு?"

"பொய் சொன்னதற்கு?"

"உங்களைப் பொய் சொல்ல வைத்த சூழ்நிலையை இன்ஸ்பெக்டருக்குச் சொல்லுங்களேன். இன்ஸ்பெக்டர், இப்போது குறித்துக் கொள்ள வேண்டாம். கொஞ்சங் கவனிக்கிறீர்களா...? அனிதா உங்கள் கணவர் பொறாமைக்காரரல்லவா?"

"ஆம்."

"அவர் உங்களை முழுவதும் தனக்கே சொந்த உரிமையாக்கிக் கொண்டது உண்மை தானே?"

"ஆம், முழுவதும் அடிமையாக."

"அதனால் உங்களுக்கு அவர் மேல் அளவுக்கு மீறிய வெறுப்பு ஏற்பட்டது இல்லையா?"

"உண்மைதான்."

"அவருக்கு உங்கள் மேல்?"

"காமம்- பொறாமை. மிகக் காமம் மிகப் பொறாமை."

"கோவிந்த் எப்படிப்பட்டவன் அனிதா?"

"மௌனமானவன். அடக்கமானவன். ஆழமானவன். எனக்குப் படுக்கை தட்டிப் போடுவான். செருப்புக்களை எடுத்து வைப்பான். என் பாதங்களையே பார்த்துக் கொண்டிருப்பான். ஆனால்...."

"ஆனால்?"

"ஒரு தடவை என்னை அவன் என் அறையில்..."

"அதை உங்கள் கணவரிடம் சொன்னீர்களா?"

"இல்லை, அவரே பார்த்துவிட்டார்."

"என்ன செய்தார்?"

"ஒரு சவுக்கை உபயோகப்படுத்தினார். நிறைய அடித்தார். அவன் மயங்கி விழுந்ததால் அவனுக்குத் தண்ணீர் கொடுத்துத் தெளிய வைத்து, மறுபடி அடித்தார், என் கண் முன்னால்! எனக்கும் அது எச்சரிக்கையாம்!"

"கோவிந்த் என்ன ஆனான்?"

"இறந்து போனான்."

"உங்கள் கணவர் என்ன செய்தார்?"

"கலவரப்பட்டார். அவர் அதை எதிர் பார்க்கவில்லை. பாஸ்கரைக் கூப்பிட்டார்."

"அவன் என்ன செய்தான்?"

"யோசித்தான். அவரிடம் பேசினான். அவருடைய ஷர்ட்டைக் கேட்டான். ஷூவைக் கேட்டான். பர்ஸைக் கேட்டான். அடையாளக் கார்டு கேட்டான். சின்னக் காரின் சாவியைக் கேட்டான். கோவிந்தைத்தரதரவென்று தரையோடு இழுத்துக் கொண்டு சென்றான்...."

"உங்கள் கணவர் அப்புறம் உங்களிடம் என்ன சொன்னார்?"

"கோவிந்தின் உடல் ரிட்ஜ் ரோடு அருகில் கண்டு பிடிக்கப்படும். பொலிஸ் உன்னைக் கூப்பிடுவார்கள். உடலை அடையாளம் காட்டச் சொல்வார்கள். அது என் உடல் தான் என்று நீ அடையாளம் காட்ட வேண்டும், என்றார். இறந்தது ஷர்மா, காணாமற் போனது கோவிந்த் என்று பொலிஸில் நினைக்க வேண்டுமாம்."

"நீங்கள் ஏன் அதற்குச் சம்மதித்தீர்கள்?"

"வேண்டுமென்றுதான். என்னை வருஷக் கணக்கில் ஆண்டார். அவரை நான் ஆள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. எத்தனை நாள் என்னைப் பூட்டி வைத்திருந்தார்! அவரை நான் ஆள, சூரிய வெளிச்சம் தெரியாமல் தலைமறைவாக அடைத்து வைக்க, அவர் உயிர் என் உதடுகளில் ஊசலாட, சந்தர்ப்பம் கிடைத்தது."

"பாஸ்கர் எப்படிப்பட்டவன்?"

"சந்தர்ப்பவாதி.... கோவிந்த் உடலை நான் என் கணவர் என்று அடையாளம் காட்டியவுடனே மற்ற எல்லா விஷயங்களையும் அவன்தான் பார்த்துக்கொண்டான். போஸ்ட் மார்ட்டமானவுடனே அவசர அவசரமாக எரித்துவிட ஏற்பாடுகள் செய்தான்."

"மோனிக்காவுக்கு அவர் தந்தை இறந்த செய்தி தாமதமாக அனுப்பப்பட்டதல்லவா?"

"ஆம்."

பொலிஸில் கோவிந்த் போட்டோ வேண்டுமென்று கேட்டபோது இல்லையென்று சொன்னீர்களல்லவா?"

"ஆம்."

"அதற்கெல்லாம் காரணம், இறந்தவர் ஷர்மா அல்ல என்பதை யாரும் கண்டு சொல்லிவிடக்கூடாது என்பதுதானே?"

"ஷர்மா எங்கிருந்தார்?"

"அவசர அவசரமாக ஷாத்ராவில் வாங்கப்பட்ட ஒரு தனி வீட்டில் போய்த் தலை மறைந்தார்."

"பிறகு ஷாத்ரா வீட்டை விட்டு வெளியே வரவேயில்லையா?"

"ஒரு தடவை வெளியே வந்தார்."

"எதற்கு?"

"பாஸ்கரைக் கொல்வதற்கு!" என்றாள் அனிதா. ஜீப்புக்குள் நிசப்தம் ஆண்டது.

"பாஸ்கர் ஏன் கொல்லப்பட்டான்?"

"பாஸ்கர் துணிச்சல் அடைந்து விட்டான். ஷர்மாவின் உயிர் அவன் கையில் இருந்ததால் துணிச்சல். அவரை பிளாக் மெய்ல் செய்தான். நிறையப் பணம் கேட்டான்! என்னிடமும் சற்றுத் தைரியமடைந்தான்...வாலாட்டினான்- சொன்னேனே!"

"பாஸ்கரைக் கொன்றது....."

"ஷர்மாதான். பாஸ்கருக்கு ஒன்று தெரியவில்லை. அவன் விரித்த வலை அவனையே வீழ்த்தும் என்பது. சுட்டுத் தீர்த்து விட்டார்."

"பின்?"

"அன்றிரவு தான் உங்கள் டெலிஃபோன் வந்தது. நான் தப்பிக்க நினைப்பதற்குள் அவர் வீட்டுக்கே வந்து விட்டார். என்னைத் துப்பாக்கி முனையில் இழுத்துக்கொண்டு போனார், ஷாத்ரா வீட்டுக்கு. அங்கே தன்னுடன் வைத்துக் கொண்டார். மூன்று நாட்கள் கணேஷ்! மூன்று நாட்கள் நான் அனுபவித்த வேதனை! ஷர்மா இந்தக் கார் விபத்தில் இத்தனை சீக்கிரம் இறந்திருக்கக்கூடாது...."

"மோனிக்கா, நான் அழகாக இருந்தது போதும். செல்வத்தில் இருந்தது போதும். அது தந்த அற்ப சுகங்கள் போதும். இப்படித் துப்பாக்கி முனைகளில் உடை உரியப்பட்டது போதும்....மோனிக்கா நீயே உன் அப்பனின் செல்வத்துடன் அந்த ராட்சதன் கட்டின தங்க மாளிகையில் வாழு...! எனக்கு ஒரு பைசா வேண்டாம்! எனக்கு ஒருவரும் இல்லை எனக்கு ஒருவரும் இல்லை."

"அனிதா, நான் இருக்கிறேன்" என்றான் கணேஷ் என்றாள் மோனிக்கா.

-முற்றும்-

***அவன் பெயர் ஆனந்த்- அவள் பெயர் மல்லிகா. அவன் அவளை அழைத்துச் செல்கிறான்.***

***சிமெண்ட் கான்கிரீட்டினால் கட்டப்பட்ட ஓவர் சைஸ் சுவர். அதன் பின் தேங்கிய தண்ணீர் ஒரு செயற்கை நீரோடை.***

***"ஆனந்த், நாம் ஏன் பயப்பட்டு பயப்பட்டு இனிமேல் தனி இடத்தை நாடவேண்டும்? நமக்குத்தான் கல்யாணம் ஆகிவிட்டதே!"***

***"பேபி, உனக்குத் தெரியாது. இதில் ஒரு த்ரில் இருக்கிறது," என்றான் ஆனந்த்.***


முரசில்

அதிரடி ஆரம்பம்

காயத்திரி



எழுதுவது

நாவல் உலகின் நவீன எழுத்துவேந்தன் சுஜாதா

வாரா வாரம் இளமை-இனிமை-சஸ்பென்ஸ்


## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எம். அலெக்ஸாண்டர்.
வயது: 22
முகவரி:121/1, ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: எம். பைஸால்.
வயது: 18
முகவரி: 14, 5ம் குறுக்குத் தெரு. புத்தளம்.
பொழுதுபோக்கு: வானொலி, சினிமா.

பெயர்: ஆர். கார்த்திகேயன்
வயது: 26
முகவரி: ALPHARD MEDICALS, SEENU FEYDHOO 19-14, REPUBLIC, OF MALDIVES.
பொழுது போக்கு: பேனாநட்பு.

பெயர்: ரி. தனக்கோடி.
வயது: 22
முகவரி: 119/பி, நுவரெலியா வீதி, தலவாக்கலை
பொழுது போக்கு: பத்திகை, பேனாநட்பு.

பெயர்: எல்.ஹசன் அலி
வயது: 22
முகவரி: 88, பிரதான வீதி, சாய்ந்தமருது-03.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ரமீஸ்டீன்.
வயது: 21
முகவரி: P.O.BOX-40221, JEDDHA - 21499, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ரி. இப்ராஹீம்.
வயது: 17
முகவரி: இகல கொட்டியாவ, பரகன்கல்வெவ, அநுராதபுரம்
பொழுதுபோக்கு: ரீவி. வானொலி.

பெயர்: அப்துல் ரஹீம் நவ்பர்.
வயது: 19
முகவரி: 205, முகமதியா நகர், மட்கோ, திருமலை.
பொழுதுபோக்கு: வானொலி. புத்தகம்.

பெயர்: எஸ். கண்ணன்.
வயது: 25
முகவரி: GASMETER STR-24, 8005-ZURICH, SWITZERLAND.
பொழுது போக்கு: பேனாநட்பு.

பெயர்: ரி. சந்திரபோஸ்.
வயது: 23
முகவரி: குயின்டவுன் மேல் பிரிவு, ஹாலி-எல.
பொழுது போக்கு: தொலைக்காட்சி.

பெயர்: கே. சிறீராசா.
வயது: 19
முகவரி: 68/11, பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். முஹமட்.
வயது: 27
முகவரி: STREET NO-16, BLOCK NO-7, HOUSE NO-34, AL-RIGGA-KUWAIT.
பொழுது போக்கு: வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

புதுமைத் தொடர் அத்தியாயம் 02

தமிழக புதுமை எழுத்தாளர் பிரபஞ்சன் படைத்த சிறந்த கதைகளில் ஒரு முத்து இது! பெண் என்பவள் வெறும் ஜடமல்ல உணர்ச்சிகள் உள்ள மனுசி என்பதை உணர்வுபூர்வமாக அற்புதமான நடையில் தரும் படைப்பு இது.

# கனவு மெய்ப்பட வேண்டும்





## பிரபஞ்சன்

ஒரு கணம், சுற்றுப்புறம் அனைத்தும் சுற்றி நின்றது அவளுக்கு. காது மடல்களில், அசாதாரணமான வலி எழுந்தது. காதுக்குள் 'ஙொய்'யென்ற பேரிரைச்சல் எழுந்தது. மாலை ஐந்தரைக்கு ஒரு காபியோடு மட்டும் இருந்தவளுக்கு அந்த ராட்சஸ அறையினால் மயக்கமே வர இருந்தது. எனினும் சுமதி சுதாரித்துக் கொண்டாள்.

இது வழக்கமாக நடப்பதுதான். ஏன், தினம் தினம் நடப்பதுதான். கணேசனைக் கரம்பிடித்த இந்த ஒன்பது வருஷங்கள், பதினொரு மாதங்களில், முதல் இரவு தொடங்கி ஒவ்வொரு இரவும் நடப்பதுதான்.

சுமதி சொன்னாள்,

"சரி. உடை மாற்றிக்கொண்டு வாருங்கள். சாப்பிடலாம்..."

கணேசன், அவளை முறைத்துக் கொண்டே மாடி ஏறிப் போனான். அடுத்த சில நிமிஷங்களில் சாப்பாட்டு மேஜைக்கு முன் வந்து அமர்ந்தான்.

சுமதி தட்டை எடுத்து வைத்துப் பரிமாறத் தொடங்கினாள். "நாளைக்கு ஒரு அசிஸ்டென்ட் புரொபசருக்குக் கல்யாணம். திருநீர்மலைக்கு நாம் போறோம், வழக்கம் போல, பளபளன்னு அலங்காரம் பண்ணிக்காமே, அடக்கமா நீ வரே..."

"நாளைக்கா?"

"ஏன்?"

"நாளைக்கு சீப்-செகரடரியோட ஒரு முக்கியமான மீட்டிங் இருக்குங்க....நான் அவசியம் போக வேண்டியிருக்குமே...."

எவ்வளவு மிருதுவாகச் சொல்ல முடியுமோ, அவ்வளவு மிருதுவாகத்தான் சொன்னாள், சுமதி.

கல்யாண அன்பளிப்பு என்று சுமதிக்கு அவள் சினேகிதி கல்பனா கொடுத்திருந்த அந்த வெள்ளை வேஷ்டி மாதிரியும், பூக்கூடை மாதிரியுமான, அவன் உண்டு கொண்டிருந்த சீனாத் தட்டுக்கள் தரையில் விழுந்து பொடியாயின.

"என்னைவிட உனக்கு உத்தியோகம் பெரிசாப் போச்சா?" என்றவன், அவள் மேல் பாய்ந்தான். சுமதி, அவன் கைவீச்சுக்குத் தப்பித்துவிட்டாள். அவளின் தப்பித்தலே, அவன் கோபத்தை உசுப்பியது. அவன் கைக்கு அவள் சேலைத் தலைப்பே சிக்கியது.

சுமதிக்கு அலறுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

கணேசன் அவள் சேலைத் தலைப்பைத் தொட்டுப் பிடித்ததும் என்ன நடக்கும் என்பதை அவள் அனுமானிக்கவில்லைதான். பற்றியவன், அவள் சேலையை உரிந்தான்.

கணேசன் அந்த நேரத்துக்குள் சுமதியின் சேலையை அகற்றிவிட்டிருந்தான்.

"வேணாங்க....வேணாங்க....நான் நாளைக்கு ஆபீசுக்குப் போகலைங்க... சொன்னாக் கேளுங்க...." என்றவாறு அழுகையும், வெட்கமும், அச்சமுமாக, கைகளால் தன் மார்பகத்தை மறைத்தவாறு மன்றாடினாள் அவள்.

"ஆபீஸ்...பெரிய ஆபீஸ்...ஆபீசர் என்கிற திமிர்தானே உன்னை இப்படியெல்லம் பேச வைக்கிறது? இப்போ எந்த ஆபீஸ். உன்னைக் காப்பாத்த வருதுன்னு பார்க்கிறேன்?" என்றவன் அவளின் உள்ளாடையைப் பற்றி இழுத்தான்.

எப்படியும் அவனிடம், அவன் எண்ணியபடி, தன் உள்ளாடையைப் பறிகொடுத்து விடக்கூடாது என்கிற யோசனையில், சுமதி அப்படியே தரையில் குண்டாக உட்கார்ந்து கொண்டாள்.

அவள் அங்ஙனம் உட்கார்ந்தது கணேசனுக்குச் சௌகர்யமாகி விட்டது; அவளது முதுகுப் புறத்து பிளவுஸ் அவன் கைக்குச் சிக்கவே அதைக் கிழித்து எறிந்தான். சுமதி மேல் பாகம் வெளித் தெரிய இருந்தாள்.

"வேணாங்க....உங்களைக் கும்பிடறேன்... ஐயோ, எனக்கு வெட்கமா இருக்குங்க..." என்று இதே சொற்களை அவள் மீண்டும் உச்சரித்தவாறே தரையில் உருண்டாள்.

"ஐயோ, கடவுளே..." என்றாள் கடைசியாக.

அப்போது அவள் குழந்தையைப் போல் உருமாறியிருந்தாள்.

அம்மா, சின்ன வெள்ளிக் கிண்ணத்தில் எண்ணெய் எடுத்துக் கொண்டு கோயிலுக்குப் போயிருக்கிறாள். வெள்ளிக்கிழமை தோறும், குளித்து உபவாசம் இருந்து, ஒரே பெண்ணுக்கு வேண்டியிருந்தாள்.

கணேசன் கூந்தலைப் பிடித்துத் தரதரவென தெருவாசற் பக்கம் இழுத்தான். அவன் நோக்கத்தைப் புரிந்து கொண்ட சுமதி, தன் ஒரு கையால் உணவு மேஜையின் காலைப் பிடித்துக் கொண்டாள். மேஜை இழுபடவே, அதன் மேலிருந்த கண்ணாடித் தம்ளர்கள் கீழே உருண்டு விழுந்து உடைந்தன.

தன் வலது காலால் ஓங்கி அவள் கையை மிதித்தான் கணேசன். அலறியபடி கையை விடுவித்துக்கொண்ட சில கணங்களில், சுமதி வீட்டுக் குறட்டில், தெருவுக்கு நேரே கலைந்து கிடந்தாள்.

ஒரு பேய் பிடித்துத் தள்ளியது மாதிரி, கணேசனால் தள்ளப்பட்ட சுமதி, அடுப்புக் கரித் துணியைப் போல கந்தலாக வீட்டுக்கு வெளியே வந்து விழுந்தாள்.

கதவு அறைந்து சாத்தப்பட்டது.

அடுத்தகணம், உலகம் சுத்தமாக இருண்டு போய், இருட்டுக்குள் கிடக்கும் ஒரு கரப்பான் பூச்சியைப் போல் தான் இருப்பதாய் உணர்ந்தாள் சுமதி. அவள் வசம் இப்போது இரண்டு கைகள் மட்டும் இருந்தன. அந்தக் கைகளால், இயன்ற வரை தன் உடம்பை மறைத்துக் கொண்டாள். அப்படியே நாளை இறந்து போய் விட மாட்டோமா என்று இருந்தது. மரணம், மனிதர் கேட்கும் நேரத்தில், விரும்பும் நேரத்தில் வருவதில்லையே.

அப்பா ஞாபகம்தான் அந்த நிராதரவான நேரத்தில் அவள் நினைவுக்கு வந்தது.

"அப்பா...அப்பா...என் நிலையைப் பாருங்கப்பா......" என்று சத்தம் எழாமல் தனக்குள் அழுதாள். வேறு வழியில்லை, அவளுக்கு முன் அடைக்கப்பட்ட கதவு மட்டுமே இருந்தது. ஆடை இருந்தாலாவது, விடியட்டும் என்று காத்திருக்கலாம். இந்தக் கோலத்தில் எவ்வாறு சும்மா இருப்பது?

எல்லையற்ற அவமானத்துடனும், துக்கத்துடனும் அவள் கதவைத் தட்டினாள்.

"ஐயோ, வேணாங்க....நீங்க என்ன சொன்னாலும் கேக்கறேங்க... கதவைத் திறங்க...எனக்கு அவமானமா இருக்குங்க... ஐயோ, கதவைத் திறங்க...." என்று திரும்பத் திரும்பக் கதவைத் தட்டிக் கொண்டே இருந்தாள் சுமதி.

கதவின் உட்பக்கம் நிசப்தமாக இருந்தது. விளக்கு உள்ளே அணைக்கப்பட்டது தெரிந்தது. அதே நேரம், மாடி விளக்கு வெளிச்சம் ஜன்னல் வழி வெளிப்பட்டது. மாடிக்குப் போய்விட்டான் அவன் என்று நிச்சயமாகத் தெரிந்தது.

சுமதி, அப்போதுதான் அவள் சூழ்நிலையை உணரத் தொடங்கினாள்.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

உலகம் போர்வைக்குள் சுகமாக முடங்கிக் கிடந்தது.... கதவைத் தட்டலாம்; உலகத்தை எழுப்பிவிடக்கூடாது. எழுப்பினால், அடுத்து வரும் விபரீதம், அவளை அக்கோலத்தில் அது கண்டுவிடக்கூடும்.

தெரு, நகரசபை விளக்கால் வெளிச்சம் கண்டு இருந்தது. அவ் வெளிச்சம், அவள் இருக்கும் இடம்வரை வியாபித்திருந்தது. சுமதி, காம்பவுண்டுக்குள் வளர்ந்திருந்த வேப்பமரத்தின்கீழ் ஒண்டி உட்கார்ந்தாள். கொத்தாக விழுந்திருந்த நிழல் மட்டுமே அவள் மானத்தைக் காத்துக்கொண்டிருந்தது.

அம்மாவை நினைத்தாள். தொண்டை அடைக்கத் தன் கையறு நிலையை நினைத்து அழுதாள்.

அம்மாதான் அடிக்கடி சொல்வது நினைவுக்கு வந்தது.

"பொண்ணா பிறந்துட்டு, இப்படி சமையல் கட்டையே திரும்பிப் பார்க்காமல் இருந்தா எப்படிம்மா? ஒரு ரஸம், ஒரு கூட்டு வைக்கவாவது கற்றுக்கொள்ள வேண்டாமா? புகுந்தகத்துக்குப்போய், என்னதான் செய்யப்போற நீ....?"

அதற்கு அப்பா, பதிலுக்குச் சொல்வார்.

"பொண்ணாப் பிறந்தா, கையில் கரண்டியைத் தூக்கத்தான் வேணுமா, என்ன? என் பெண்ணுக்கு வாய்க்கிற அந்த ராஜகுமாரன் சமைப்பான். ஏன்! ஆண் சமைச்சா உலகமா, முழுகிடும்? நீ உங்க அம்மா வீட்டுக்குப் போனா, நான் சமைக்கலியா? ஆண்களுக்குச் சமையலை ஒரு பாடமா பள்ளிக்கூடத்துல வைக்கணும்."

அப்பா அவளை சீதனத்துடன் மட்டுமா அனுப்பிவைத்தார்?

தெருவில் மனித அரவம் எழுந்தது. சினிமா விட்டுப்போகும் கூட்டமாய் இருக்கும். எவ்வளவு நேரம்தான் இப்படியிருக்கிறது? மெதுவாக எழுந்தாள் சுமதி. அந்த இரவிலும், தன் பிரக்ஞையின்றியே உடம்பை மறைத்துக் கொண்டு, அவள் வீட்டுப் பின்பக்கம் நடந்து வந்து, இவள் வீட்டையும் பக்கத்து வீட்டையும் பிரிக்கும் சுவரை ஒட்டி நின்றாள். கடவுள் அருள்தான்; மதில் சுவர் அவள் கழுத்து வரை உயர்ந்திருந்தது.

வீட்டுத் தோட்டத்தைப் பார்த்தபடி "மாமி....மாமி..பங்கஜம் மாமி" என்றாள் அடிக்குரலில்.

மாமி வழக்கமாக வீட்டுப் பின்கட்டில் சமையல் அறையை ஒட்டிய வராந்தாவில் தான் படுப்பாள். அந்த வீட்டில் சமையல்கார மாமி ஒருத்தியைத்தான் அவள் அறிவாள். அவள் மட்டும்தான் சுமதியின் வீட்டுக்கு வரும் ஒரே நபர்.

"கவலைப் படாதேம்மா. நிலைமை இப்படியேவா இருந்திடும்? காலம் மாறும். உன் புருஷனுக்கும் ஒரு நாள் புத்தி வரும்!" என்று சுமதிக்கு அடிக்கடி ஆறுதல் கூறும் ஒரே நபர்!

"மாமி....மாமி....பங்கஜம் மாமி....." என்று தொடர்ந்து இடைவெளி விட்டு அழைத்துக்கொண்டே அந்த இருட்டில், குளிரில் நடுங்கியபடி நின்று கொண்டிருந்தாள் அவள்.

ஒரு மந்திரம் போல, 'மாமி மாமி' என்று அவள் ஜபித்ததை அந்த அம்மாள் கேட்டிருக்கக்கூடும்.

தோட்டத்து விளக்கு எரிந்தது. உள்பக்கம் கதவின் தாளைத் திறந்தவள், கதவை முழுக்கவும் திறக்காமலேயே, 'யாரு' என்றாள், அச்சமுற்ற குரலில், பங்கஜம் மாமி.

"நான்தான், மாமி, சுமதி...."

"சுமதி அம்மாவா?" அவள் திடுக்கிட்டது குரலில் தெரிந்தது.

கதவைத்திறந்து கொண்டுவந்தவள், சுவரருகில் வந்து "என்னம்மா இந்த நேரத்தில்...?" என்றாள். கேட்டவள், தோட்டத்து வெளிச்சம் தந்த உதவியில், சுமதியைப் பார்த்து அதிர்ந்தவளாய், "ஐயோ... இதென்னம்மா, கோலம்?" என்றாள். அப்படியே, சுமதியின் தோளைப் பற்றியபடி அழத் தொடங்கினாள். ஒரு கையால் தன் மார்பில் அறைந்தபடி, "பொண்ணா பொறந்ததுக்கு நாம கண்ட லாபம் இதுதானம்மா.... ஐயோ கடவுளே" என்று மார்பில் அடித்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

"என் வீட்டுக்காரர் தந்த கோலம், மாமி" என்றபடி சுமதி, தன் முன் காட்டப் பெற்ற அந்தக் கரத்தைப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

பங்கஜம் மாமிக்கு ஒன்றும் சொல்ல வேண்டியிருக்கவில்லை. உள்ளே ஓடினாள். துவைத்து வைத்திருந்த தன் சேலை, ரவிக்கையுடன் திரும்பினாள். வாங்கி அணிந்து கொண்டாள் சுமதி. சட்டைதான் தொளதொளவென்று இருந்தது. ஆனாலும் மானம் மறைத்தது; முக்கியம்தானே!

"மாமி...எனக்கு ரெண்டு ரூபாய்ப் பணம் கொடுங்க....முதல் டிரெய்னில், என் சினேகிதி வீட்டுக்குப் போயிடறேன்...."

"தரேன்...இந்த இருட்டுல, சின்னப் பொண்ணு எப்படிப் போவீங்க...?" என்றவள் திரும்பவும் வீட்டுக்குப் போனாள்.

அடுத்த சில நிமிடங்களில், வீட்டுக்காரப் பெரியவரும் அவர் மனைவியும், மகனும் எதிர்ப்பட்டார்கள். சுமதி முகத்தைக் குனிந்து கொண்டாள்.

"இப்படியும் உலகத்துல இருக்குமா, என்ன?" என்ற அந்தப் பெரியவர், பேச முடியாமல் திண்டாடினார். "நீ கவலைப் படாதேம்மா... நீ எங்கே போகணுமோ, உன்னை அங்கே கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது இவன் பொறுப்பு..." என்றார் தொடர்ந்து.

**(தொடர்ந்து வரும்)**

# கவர் மாறிய கடிதம்!

## ரூபராணி

"பிரபல பேச்சாளர் சசிதரன் நாளை பிற்பகல் நாலு மணிக்கு மத்திய கல்லூரி மண்டபத்தில் சொற்பொழிவாற்றுவார்.

விஷயம் சீதனம் ஒழிக..."

'வானவில்' பத்திரிகை கொட்டை எழுத்தில் அழைப்பு விடுத்திருந்தது. பத்திரிகையில் கண் ணோட்டம் செலுத்திய கௌதமிக்கு எரிச்சலூட்டியது. "என்ன இவர் அரைச்ச மாவையே அரைக்க வாறார்." சற்று உரக்கவே சொன்னாள்.

புத்தகமொன்றில் முகம் புதைத்திருந்த கங்கா தலை நிமிர்ந்து சிரித்தாள்.

"சசிதரனைப் பற்றி நீ கேள்விப்பட்டதே இல்லையா? அவர் ஒரு முற்போக்குவாதி. பெண்கள் விடுதலைக்காகவே தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு அதிசய மனிதர். மணிக்கணக்கில் அவருடைய பேச்சைச் கேட்டுக்கொண்டே இருக்கலாம்." சசிதரனுக்கு விளம்பரங் கொடுத்த கங்காவைக் கௌதமி வியப்புடன் பார்த்தாள்.

"அவர்...கிழவரா....? இல்லாட்டா... வாட்டசாட்டமான இளைஞனா?" கௌதமி கிண்டலாகக் கேட்டாள்.

"அது தெரியவேணும்னா நீ கண்டிப்பா நாளை நாலுமணியை ஞாபகம் வைத்திரு!" சொல்லிவிட்டுச் சிட்டாகப் பறந்து விட்டாள் கங்கா! கௌதமியும் கங்காவும் நெருங்கிய நண்பிகள். ஒரே பாடசாலையில் படித்து ஒரே வீதியில் குடியிருப்பவர்கள். கங்காவுக்குச் சிறு வயதில் இருந்தே பேச்சு-எழுத்து இரண்டிலும் ஈடுபாடு. எந்தக் கூட்டத்தையும்விட்டு வைக்கமாட்டாள். சுமாரான குடும்பத்தில் மூத்த பிள்ளை அவள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. தலைமை தாங்க அறங்காவலர் அரியநாயகம் ஜே.பி. வந்திருந்தார். மேடையில் வீற்றிருந்த பிரமுகர்களுக்கு மத்தியில் பேச்சாளர் சசிதரன் இளைய நிலாவாக அமர்ந்திருந்தார்.

வரவேற்புரைக்குப்பின் மாலை கழுத்தில் அசைய புன்முறுவலுடன் சசிதரன் மைக்கின் முன் தயாரானார்.

கௌதமி, கங்காவின் தொடையைக் கிள்ளி ஜாடை காட்டினாள்.

மடை திறந்தது. சசிதரனின் வார்த்தைகள் வெள்ளமாய்த் தங்குதடையின்றி மண்டபமெங்கும் தவழ்ந்து விளையாடியது. தென்றலாய் வீசிய சசிதரனின் பேச்சு திடீரெனப் புயலாகமாறியது.

"திருமணங்கள் சொர்க்கத்தில் தான் நிச்சயிக்கப்படுகிறது என்கிறார்கள். ஆனால் அது ரொக்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகிறது. ஆண்கள் சீதனம் கேட்டுத் தங்கள் கையாலாகாத் தனத்தைக் காட்டுகிறார்கள். பணம், வீடு, நகை- ஆமாம் இவை எல்லாம் பெண்களிடம் நாகரிகமாகக் கேட்கும் பிச்சையல்லவா? சிலர்... "நாங்கள் டிமாண்ட் பண்ணலை; தருவதைத் தாங்கோ!" என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறார்கள். இப்போதெல்லாம் பெண்கள் தகுதிவாய்ந்த உத்தியோகங்களில் இருந்து ஆண்களை விடக் கை நிறையச் சம்பாதிக்கிறார்களே! அப்போ பெண்களும் ஆண்களிடம் சீதனங்கேட்டால் என்ன தப்பு?"



கங்கா தன்னை மறந்து கைதட்டியதைத் தொடர்ந்து கூட்டத்தில் கரகோஷம் காதைப் பிளந்தது.

ஒரு மணித்தியாலம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போனது தெரியவில்லை. ஊற்றுப் பெருக்காயிருந்த சசிதரனின் பேச்சு முற்றுப் பெற்றது. கௌதமியும் கங்காவும் மௌனத்தில் நடந்து கொண்டிருந்தார்கள்.

"என்ன? எந்தக் கோட்டையைப் பிடிப்பதாய் உத்தேசம்?" கௌதமி கங்காவின் முதுகில் புரண்டு விளையாடிய கூந்தலை இழுத்தாள்.

'சசிதரனின் இதயக்கோட்டை' என்று சொல்லவேணும் போல் மனசு படபடத்தது கங்காவுக்கு.

"ஏன்- பாராட்டுக் கடிதமொன்றை எழுதலாமே?" கௌதமியின் நையாண்டி கங்காவைக் குடைந்தெடுத்தது.

'குட் ஐடியா' கங்கா தனக்குள் சொன்னாள். வீடு வந்து சேர்ந்த கங்காவின் மனமேடையில் சசிதரன் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தான். அவன் பேசிய வார்த்தைகள் அவள் செவிகளை ஆரத்தழுவின.

தழுவலின் சிலிர்ப்பில் சசிதரனுக்குப் புகழாரம் சூட்டி எழுதினாள்.

* * *

ஆச்சரியம் அவளை எங்கோ இழுத்தது! சசிதரனிடமிருந்து கடிதம். சுவீப் விழுந்த சந்தோஷம் கங்காவுக்கு.

மீண்டும் அவள் எழுதினாள்.

அவன் எழுதினான்.

இதயங்களின் சங்கமம் சந்திப்பால் வளர்ந்தது. அது கல்யாணத்தில் கனிய வேண்டுமென்று நினைத்த கங்கா நாணத்தை விட்டு சசிதரனிடம் கேட்டுவிட்டாள்.

கடிதத்தில்...!

பதிலும் கடுகதியிலாய் வந்து சேர்ந்தது...

அவள் படித்தாள்...

அன்புள்ள அம்மாவுக்கு.

(நெற்றிப் பொட்டில் அடித்ததுபோல் இருந்தது கங்காவுக்கு.) மீதியைக் கண்கள் பரபரத்து, மேய்ந்தது.

"நானும் கங்காவும் காதலிக்கிற விஷயம் உங்களுக்குத் தெரிந்ததே. கலியாணத் தேதி நிச்சயிப்பதற்கு முன்னால் நீங்கள் கங்கா வீட்டாருடன் சீதனம் பற்றிப் பேச வேண்டும். வெறுமனே பெண்ணை மட்டும் எடுத்தால் போதுமா? மேடையில் பேசுவதெல்லாம் வாழ்க்கை ஆகுமா? பூமாலை, பாராட்டு, பொன்னாடை, விருந்துகள் எல்லாமே கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய்கள். அப்பாவின் பென்ஷனில் எப்படியோ காலந்தள்ளுகிறோம். பேசுவதையும் எழுதுவதையும் விட்டாலும் வேறு தொழில் தெரியாது. உபதேசம் ஊருக்குத்தான் என் வருங்கால மனைவிக்கல்ல.

அம்மா. தயவு செய்து என்னைக் காட்டி விடாதே. சீதனம் எனக்குப் பிடிக்காது. உனக்கது கட்டாயம், என்று எழுதிவிடு.

இப்படிக்கு

மகன் சசிதரன்.

பல்லை நற நறவென்று கடித்த கங்கா "ஓ....யூ...யூ..றாஸ்கல்" என்று கூச்சலிட்ட வேளை.....

சசிதரனின் அம்மா தன் கையிலிருந்த கடிதத்தில்,

என் உயிரே.

நம் கலியாண விஷயம் பற்றி அம்மாவுக்கு எழுதியுள்ளேன். நான் ஒரு அம்மா பக்தன். உன் சங்குக் கழுத்தில் மூன்று முடிச்சுப்போடக் காத்திருக்கிறேன். உன்னைத் தவிர வேறு எதையும் நான் எதிர்பார்க்கமாட்டேன். நாளைய சந்திப்பில் மீதி.

உன் சசிதரன்.

என்று தன்மகன் கங்காவுக்கு எழுதிய கடிதத்தை இரசித்துக் கொண்டிருந்தாள்.

சசிதரன் எழுதிய இரு கடிதங்களும் கவர் மாறிப் புகுந்தது அவனுக்கு எப்படித் தெரியும்?



படிப்பகம்

www.padippakam.com

# டே பை டே...!

ஜெயமணி

சுற்றும் முற்றும் பார்த்தான் நரேன். எருக்கிலைகளும் நாக தாழியும் புதராக மண்டிக்கிடந்தது. இலைகளையெல்லாம் உதிர்த்துவிட்டு மொட்டை மரமொன்று வெறுமையாக- அந்தச் சூழலுக்கு ஏற்றாற்போல் நின்றது. சாவு மலிந்து போனதன் அடையாளமாக புதிதான மண் மேடுகள் பல இருந்தன.

இதுதானென அடையாளம் கண்டவன் மடிந்து உட்கார்ந்தான். மண்ணின் தொடுகை அன்னையின் ஸ்பரிசத்தை உணர்த்துவது போல் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

அழுதான்.



"அம்மா, நீயும் நிம்மதியாகப் போய் விட்டாய். நான் மட்டும் தனியாக, அகதியாக நிற்கிறேன். சோற்றுக்கும், துணிக்கும் யாரை யாவது எதிர்பார்க்க விட்டுவிட்டு, ஏன் அதற்கு மேல் பாசம் காட்ட எவருமே இல்லாமல் எதுக்கு அப்பிடி விட்டுப் போனாய் அம்மா?"

"முஸ்தபா முஸ்தபா டோன்ட் வொர்ரி முஸ்தபா, காலம் நம் தோழன் முஸ்தபா!" உற்சாகமான கணீரென்று எழுந்த குரலொலியைத் தொடர்ந்து சேர்ந்தொலித்தன பல குரல்கள்.

அழுகை நின்றது. பார்த்தான் நரேன். ஒரு கணம் திக்கென்றது. யாரென அடையாளம் தெரிந்ததும் சகஜமானான். கிட்டத்தட்ட அவன் வயசுக்கு கொஞ்சம் முன்னுக்குப் பின்னாக இரண்டொன்று வித்தியாசப்பட்ட எட்டுப்பேரடங்கிய குழு ஒன்று.

இடுப்புப் பட்டியைத் தளர்த்தி கையில் இருந்த கனமான பொருட்களை அருகாமையில் வைத்துவிட்டு வட்டமாக உட்கார்ந்தார்கள். பேச்சும், சிரிப்புமாக கட்டுக்களை அவிழ்த்தனர். இல்லாத பதார்த்தங்களை, இருப்பவர்களுடன் பகிர்ந்து ஓர் அந்நியோன்னியத்தை. அசத்தலான நட்பைப் பகிர்ந்துகொண்டனர்.

மறு நிமிசமே உயிர்போய்விடக்கூடிய அபாயமான நிலைமையில், வாழ்வோடு போராடிக்கொண்டிருப்பவர்களால் இப்படிச் சிரிக்க எப்படி முடிகிறது?

நரேன் ஆச்சரியமானான்.

"தம்பி, என்ன அப்பிடிப் பார்க்கிறாய்? இங்கே எதுக்கு வந்தாய்?"

"அ...ம்....மா"

"ஓ, உன் அம்மா செத்துப்போனாவா? செத்தவங்களுக்குத்தான் சுடுகாடென்று நினைக்காதை. உயிரோடிருக்கிற எங்களுக்கும் புகலிடம் அதுதான். ஆமா, உன் அம்மா எப்பிடி இறந்தா 'செல்'பட்டா? பொம்மர் அடிச்சா? இல்லை, துப்பாக்கிக் குண்டு தைச்சா?"

"அம்மா மட்டும் சும்மா செத்தா...."

"அப்படியெண்டால் மத்தவங்க...?"

சொன்னான்:

**ஆண்டு 81.**

ஜுன் மாசம் முதலாம் திகதி அவன் பிறந்தான். அப்போதேற்பட்ட கலம்பகத்தில் யாழ்ப்பாணம் நெருப்பில் வெந்தது. யாழ் பெரியாஸ்பத்திரியைச்சூழ தீ நாக்குகள் நீண்டு கொண்டிருந்தன. ஒரே கூச்சல். கடைகளில் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கும் ஓசை- ஒவ்வொருவரையும் பீதியில் உறைய வைத்தது. கூட்டம் ஒன்றில் நடந்த அசம்பாவிதத்தில் ஏற்பட்ட குளறுபடிகள்; பெரிய வாசல் முன் பெருத்த இரைச்சல்; பதை பதைச்சுப் போன நோயாளிகள் முகங்களில் சவக்களை.

"விரும்பியவர்கள் எல்லோரும் வெளியேறலாம்." பெரிய டொக்டரின் உத்தரவு பிறந்தது. அவரோடு ஓரிரு நர்ஸுகளைத் தவிர அத்தனை ஊழியர்களும் வெளியேறினர். நடப்பது நடக்கட்டும்! விதியே என வலுவிழந்துபோய்க்கிடந்த நோயாளிகளுடன் பிரசவத்துக்காகக் காத்திருந்தவர்களும் தங்கினர். பயமும் பரிதவிப்பும் பின்ன, பிரசவ வலியுடன் போராடிக்கொண்டிருந்தவர்களில் அவன் அன்னையும் ஒருத்தி. ஒட்டி, ஒதுங்கி வலியில் துடிச்சு பயம் மறைந்து வேதனையில் அமுங்கிப்போக யாழ்ப்பாணம், தன் அருமை, பெருமைகளை இழந்து நின்ற அந்த நாளில் அவன் பிறந்தான்.

**ஆண்டு 83.**

அவன் மூன்று வயசுக் குழந்தை.

முதல் தடவையாக எங்கோ ஒரு சந்தியில் இராணுவத்தினர் எண்ணுக்கணக்கில் பலியாகியதன் எதிரொலி! பிரயாணிகள் வண்டியில் ஏறிக்கொண்ட இன்னொரு குழு கண்மூடித்தனமாகச் சுட்டதில் காத்துநின்று கைகாட்டி நிறுத்த முயன்ற அத்தனை மனிதர்களும் ஆங்காங்கே இறந்து போனார்கள். அவன் அப்பாவும் ஒரு பிரயாணியானார்.

**ஆண்டு 87.**

அவனுக்கு வயசு ஆறு. தொடர்ந்துவரும் துயரங்களை சகிப்பதற்கு மக்கள் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தனர். தாளாதோ, தவறோமோ...? தத்தளித்து மூச்சுத்திணறலெடுத்தபோது இந்தியப்படை அமைதிகாக்கும் போர்வையில் குளிர்காயப் புகுந்தது. கரை ஒதுங்கவெனத் தவித்த மக்கள் பிடித்துக் கொண்டது வழுக்குப்பாறை. அது இன்னும் ஆழத்துக்குள் சறுக்கிவிட்ட சரித்திரம். ஆறாத துயரங்களையும், மாறாத வடுக்களையும், தீராத சோகங்களையும் திணித்து துவம்சம் செய்தது.

சரணாலயம் என நினைத்தது சவக்கிடங்காக மாறிய கொடுமையை மக்கள் காலங்கடந்து உணர்ந்தபோது நிலமை கட்டுக்கடங்காமல்போனது. அன்று பாடசாலைக்குப் போன அவனது அக்கா உட்பட பல மாணவிகள் கடித்துக் குதறப்பட்டு சின்னாபின்னமாகிச் சிதைந்து கருகிப் போய்க் கிடக்கும் செய்தி காற்றோடு கலந்தது.

**ஆண்டு 91.**

அவனுக்கு வயது பத்து. மீண்டும் மீண்டும் சுழற்சி முறையான அகதி வாழ்க்கைக்கு வந்துவிட்ட நிலையில் வாழ்வின் கொடுமைகளை, வறுமையின் கோரத்தாண்டவத்தை, மெல்ல மெல்ல உணர்ந்து கொண்ட பருவம். அண்ணன் கடலேரி வழியாக வியாபாரம் பண்ணப்போனவன். அன்று நடந்த சமரில் தலைவேறு, உடல் வேறாகிப் போக அவனும், அன்னையும் மட்டும் மீதமாகி வந்துபோன துன்பங்களை நினைக்கவும் பொழுதின்றி, உயிரைக்கொண்டு ஓடி ஓடி உயிர் வாழ உணவைத் தேடி அலைந்ததில் களைத்துப்போனார்கள்.

**ஆண்டு 97.**

இப்போ வயசு பதினாறு. இழப்புக்கள் மேல் இழப்புக்களாக அழுத்திய சுமையில் அன்னையின் இதயம் ஒடிந்து போனது. அவன் அநாதையாக, அகதியாக- இதோ இந்த நிமிசம்வரை ஏன் என்று கேட்க நாதியற்றவனாக- உண்டால் உண்டு, உறங்கினால் உறங்கி, விழித்தால் விழித்து- அம்மாடி.. என்ன கொடுமையான தனிமை!

படிப்பு இல்லை, வேலைகிடையாது. சொந்தங்கள் எங்கே தெரியாது. சொந்த ஊர் வீடு வாசல் விட்டு வந்து எத்தனையோ ஆண்டுக்கணக்காச்சு.

"அட, நம்ம கதைபோல. அதேதான்!" ஒவ்வொருத்தரும் ஆளாளுக்குச் சொல்லி நினைவுகளை அசைபோட்டுப்பார்ப்பது நிலவிய அமைதியில் புரிந்தது. அவர்களது இதயங்கள் இறுகிக் கடினமாவதை விழிகள் காட்டின.

"தம்பி! இது நம் ஒவ்வொருவர் வாழ்க்கையையும் இறுக்க நினைக்கும் சங்கிலி. நீண்டு கொண்டே இருக்கிறது. என்றோ, எங்கோ சிறைப்பட்டுவிட்ட வசந்தங்களைத் தேடி, தேடுகிறோம் என்கின்ற உணர்வே பெருமையையும் நிறைவையும் தர நடக்கிறோம்.."

கூறிவிட்டு தாமதிக்காது எழுந்து கொண்டனர். கவனமாகத் தம் உடமைகளைப் பொறுக்கிச் சேர்த்தனர். அந்தச் சிரிப்பும், உற்சாகமும் மீளவும் தொற்றிக்கொள்ள ஒருவர் பின் ஒருவராக நடந்தனர்.

அன்னையின் மண்மேவிய குழிமேலிருந்து அவர்கள் செல்வதை ஆழமாகப் பார்த்தான் நரேன்.

*"முஸ்தபா முஸ்தபா டோன்ட் வொர்ரி...*
*..................முஸ்தபா.*
*டே பை டே, டே பை டே*
*வாழ்க்கைப் பயணம் டே பை டே"*

அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். தொடர்ந்து பாடியவண்ணம் சேர்ந்து நடந்து கொண்டிருந்தான் அவன்.

---

# உம்மா வருவாங்க

கிண்ணியா அமீரலி

அவள் ஏழாம் வகுப்புக்குச் சித்தியடைந்த எட்டாம் நாள், தோழி கேட்டாள்:

"ஏன்டி உனக்கு இந்த ஒரு சட்டை தானா....?"

கிழிசல்களுக்கு வழி சொல்லத் தெரியாத அவள் தன் சீருடையைத் தடவிப் பார்த்துச் சொன்னாள்:

"உம்மா கொண்டு வருவாங்க....."

ஏழ்மை வம்சாவளியான அவள் உம்மா வரும் வரைக்கும் அதே கிழிந்த சட்டையுடன் நாட்களைக் கழித்தாள்! ஒவ்வொரு கடிதத்திலும், 'உம்மா வரும்போது எனக்கு வெள்ளைச் சீலை வாங்கி வாங்க...' என்று எழுதினாள். எங்கோ.... கண்காணாத் தேசத்தில் கவலைகளைச் சுமந்து கொண்டிருக்கும் அவளுடைய உம்மா:



"மக...நீங்க நல்லாப் படிங்க...உம்மா வரும்போது வெள்ளைத் துணி வாங்கி வாறன்...." என்று எழுதியிருந்தாள். கிழியக் கிழியக் கழுவிக் கழுவிச் சமாளித்தலுத்த அவள், சட்டை இல்லாததனால்...படிப்பைச் சட்டை செய்யாதிருந்தாள். தன்னுடைய உம்மா வரும் வரைக்கும்!

நல்ல கெட்டிக்காரியான அந்தக் கிராமத்து நிலவு பள்ளிக்குப் போகத்துடித்துக் கொண்டிருந்தாள். ஒருநாள்- அவளுடைய உம்மாவின் கடிதம் வந்திருந்தது. அதில், "உம்மா அடுத்த மாதம் வருகிறேன்." என்ற வாசகம் அவளை வசீகரித்தது.

'உம்மா வந்தபிறகு பள்ளிக்குப் போகலாம்....' என்பதை நினைக்கும் போது உற்சாகம் ஒருபடி மேல் எழுந்தது.

உம்மா வருவாங்க என்பதே அவளது நிமிஷ உச்சரிப்பாக இருந்தது.

மனசு அதிகம் மகிழ்ந்தது.

ஒரு சோக விடியலில்-

அவளுடைய உம்மா வந்திறங்கினாள்.

வீட்டு வாசலில்-

அழுகைக் குரல்கள்

அவளை வரவேற்றன.

உள்ளே ஓடினாள்.

அங்கே....

அவளுடைய அன்பு மகள்...

அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தாள்-

நிரந்தரமாக!

ஆம்....

அவள் ஆசையோடு வாங்கிவந்த... அந்த வெள்ளைத்துணி "கபன்" ஆகிக் கொண்டிருந்தது!

---

# உபதேசம்



மத்தியான வெயில் முகத்தில் சுளீர் என்று தாக்க கைப்பையோடு அணைத்து வைத்திருந்த கறுப்புக் குடையைப் பிரித்தபடி பஸ்ஸை விட்டு இறங்கி நடந்தாள் பவித்திரா.

முட்டி மோதி மூச்சுவிட முடியாதபடி நசிந்து பஸ்ஸில் வருவதிலும் பார்க்க மத்தியான வெயில் பெரிதாய் மனதையும் உடலையும் பாதிக்கவில்லை. சூடாக வந்து மேல் தடவும் காற்றில் கூட சுகம் கிடைக்கும்போல் அந்த பிரதான வீதியில் நடந்து கொண்டிருந்தவளின் மனதில் உற்சாகம். முகத்தில் ஆனந்தச் சிரிப்பு. அவள் தன் அபிமான எழுத்தாளரையல்லவா பார்க்கப்போகின்றாள்! இருக்காதா பின்னே?

வசீகரமான சொற்களாலும் ஆழ்ந்து சிந்திக்கவைக்கும் வார்த்தைப் பிரயோகங்களினாலும் இனிய குரல் வளத்தினாலும் பவித்திராவின் மனதில் இடம் பிடித்துக் கொண்ட வசுமதி வாகீசனை முதன் முதல் சந்திக்கப்போகின்ற சந்தோசக்களை முகமெல்லாம் சிந்திக்கிடக்க, பிரதான வீதியின் முதல் ஒழுங்கைக்குள் நுழைகின்றாள்.

குரோட்டன்களால் வேலியமைக்கப்பட்ட அந்த மூன்றாவது வீட்டின் முன் நின்று குடையை மடித்தபடியே கேற்றினால் எட்டிப்பார்க்கின்றாள். போர்டிகோவில் நாய் நித்திரையில் ஆழ்ந்து இருந்தது. முற்றத்தில் இரவு பூத்த மல்லிகைப் பூக்கள் விழுந்து வெயிலில் வாடிக் கிடந்தன.

கேற்றைத் திறந்து உள்ளே போனால் நாய் எழுந்து கடித்திடுமோ என்ற பயம் ஏற்பட, கூப்பிடலாமா என்று எண்ணும் போதுதான் "யாரது" என்ற குரல் கேட்டது. யன்னலில் தெரிந்த அந்த முகம்- சுமார் நாற்பது நாற்பத்தைந்து வயதிருக்கும்- கேள்விக்குறியோடு தெரிந்தது.

"வசுமதி வாகீசனின் வீடு இதுதானே?"

"ஓமோம் நீங்கள் யார்?"

"நான் அவங்களைக் கொஞ்சம் பார்க்க வேணும்; தூரத்தில் இருந்துவாறன்." பவித்திரா சொல்லி முடிக்குமுன் "சரசு போய் கேற்றைத் திறந்து விடு!" சொல்லிக் கொண்டே அந்த முகம் மறைகின்றது.

சரசு வந்து கேற்றைத் திறந்து விட்டு பவித்திராவை ஹோலில் சோபாவில் உட்கார வைக்கின்றாள்.

சரசுக்கு சுமார் பதின்மூன்று வயதிருக்கலாம். 'இவள் வீட்டு வேலைக்காரியா?' சட்டென்று வானொலியில் முதன்நாள் கேட்ட கலந்துரையாடல் ஞாபகத்திற்கு வந்தது.

"படிக்கிற வயதில் பிள்ளைகளை வேலைக்கு வைத்திருப்பது குற்றமான செயலும் மனிதாபிமானமில்லாத செய்கையுமாகும். ஒரு குடும்பத்தலைவி நல்ல மனைவியாய், நல்ல தாயாய் இருக்க வேண்டும். தன்பிள்ளை போல் மற்றவர்களையும் நேசிக்க வேண்டும். வீட்டை அழகாக வைப்பதோடு தன்னுடைய கணவனுக்கு சேவை செய்து, பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து, தன்னுடைய வேலைகளையும் தானே செய்வதில் பெருமையும் திருப்தியும் கொள்கிறவள்

ஜெயந்தி ஜெய்சங்கர்

தான், உண்மையான குடும்பத் தலைவி.

வசுமதி வாகீசன்தான் வானொலியில் அக்கருத்தைக் கூறியிருந்தாள்.

சுற்று முற்றும் பார்க்கின்றாள் பவித்திரா. வீட்டு மூலையில் சிலந்தி வலை போட்டு இருந்தது. கூரைகளில் தூசிபடிந்து கறுப்பாய் திட்டுத் திட்டாய் ஹோலில் பத்திரிகைகள் பரவி, பொருட்கள் அடுக்காமல் தாறுமாறாய்- தலைகலைந்து நித்திரையால் எழும்பி வரும் பெண் போல் அந்த வீட்டின் உட்புறம். ஒரு வேளை குழந்தைப்பிள்ளைகள் இருக்கிற வீடாக இருக்கலாம். ஆனால் குழந்தைகளின் சத்தத்தையே காணலையே !மனதில் குழப்பம் ஏற்பட விரல்களுக்கு சொடுக்குப் போட்டுக் கொண்டிருந்த பவித்திராவின் முன், சற்று முன் யன்னலினூடே தெரிந்த முகம் கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தது.

"நான் தான் வசுமதி வாகீசன்; நீங்கள் யார்?" மெல்லிய சிரிப்புடன் கேட்டபோது "ஓ.. நீங்கள் தானா?" வரும்போது இருந்த உற்சாகம் மறைந்து குரல் லேசாகத் தளதளத்தது.

"நான் பவித்திரா. உங்கடை கட்டுரை கதைகளைப் படிக்கிறது மட்டுமல்ல, சொற்பொழிவுகளையும் கலந்துரையாடல்களையும் கேட்பேன். என்னமோ மனசிலை அவை பதிந்து நல்ல பாதை அமைத்துத் தந்ததாலை உங்களைப் பார்த்துப் பேசணும்; என்னோடை சின்னப் பிரச்சனை ஒன்றுக்கு ஆலோசனை கேட்கணும் என்று ஆசை; அதுதான் வந்தனான்."

வசுமதியின் முகத்தில் சந்தோசப் பூக்கள், "அப்படியா...? சந்தோசம். சரசு குடிக்க ஏதாவது கொண்டு வா.." சொல்லி முடிப்பதற்கிடையில் கூல்டிறிங்சுடன் என் முன்னால் சரசு. ட்றேயில் இருந்து கூல்டிறிங்ஸ் கிளாசை எடுத்தபடியே சரசுவைப் பார்க்கின்றேன்.

சரசு மென்மையாகப் புன்னகைத்தபடியே ட்றேயை ரீபோவில் வைத்து விட்டு உட்புகுகின்றாள்.

"இது யார்.?" என்றதும்,

"சரசுவா....? அது சேவன்ற் கேள்.." கூலாய் தொண்டைக்குள் இறங்கிய ஜூஸ் சூடாய்ப் புகுந்தது.

"படிக்கிற வயதில் வேலைக்கு வைப்பது.." மீண்டும் நினைவில் வர தலையைக் குனிந்தபடி ஜூஸைக் குடிக்கின்றாள் பவித்திரா.

"சரசு! வீடெல்லாம் இதென்ன இப்பிடி அலங்கோலமாய். காலையிலை இருந்து சொல்லுறன் சீக்கிரமாய் கிச்சின் வேலையை முடித்துவிட்டு உதை எல்லாம் ஒதுக்கி விடு.. என்ன..?"

"சரியம்மா..." சரசு உள்ளிருந்தே பதில் கொடுக்கின்றாள்.

"உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? நீங்கள் வேலைக்குப் போறனீங்களா..?" பவித்திரா திடீரெனக் கேட்டாள்.

"எனக்கு ஒரே ஒரு பெண் பிள்ளதான்; ஓலெவல் படிக்கின்றா. இப்ப ஸ்கூல் போயிட்டா. நான் வேலைக்குப் போறதில்லை. ஏன் கேட்டனீர்?" சிரித்தபடியே பவித்திராவைப் பார்த்து கேட்டபோது, "சும்மாதான் கேட்டேன்.." சொன்னபடியே நேரத்தைப் பார்த்தவள்,

"நேரமாயிட்டுது நான் வாறன்!" என்றபடி எழுந்தபோது "ஏதோ பிரச்சனை பற்றி....?"

"இல்லை நான் இன்னொரு நாளைக்கு வாறன்.." வாசலில் கழட்டி வைத்த செருப்பை மாட்டிக் கொண்டிருக்கும் போது, "வசுமதி! எனக்குப் பசிக்குது சாப்பாட்டை வை" என்றபடி அறைக் கதவைத் திறந்தபடி வந்தவரைப் பார்த்ததும், இவர் வசுமதியின் கணவன் வாகீசன் என ஊகித்துக் கொண்டாள்.

"எனக்குத் தூக்கம் வருகுது. ஒரே டயேர்டா இருக்கு. பசித்தால் சரசுட்டை போய் வாங்கிச் சாப்பிடுங்கோ..!" காதில் விழும் வார்த்தைகளோடு அந்த வீட்டைக் கடக்கின்றாள் பவித்திரா.

கணவனோடு அன்பாக நடக்கமுடியாதவள் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கத் தெரியாதவள், படிக்கிற வயதில் இருக்கிற பிள்ளையைக் கொண்டு வேலை செய்விப்பவள், தான் மட்டும் அலங்காரமாக உட்கார்ந்து அடுத்தவர்க்கு உபதேசம் பண்ண மட்டும் என்ன தகுதி இருக்கிறது?

நல்ல பாதையில் தான் நடந்து காட்டி அடுத்தவரை வழி நடத்தவேணும். சொல்கிறபடி நடக்காதவர்கள் சொல்லத் தகுதியில்லாதவர்கள். ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்ல என நடப்பவரையா பார்க்கவந்தேன்? சே.. இரண்டு மணித்தியாலத்தை வீணாக்கி விட்டேனே..' என எண்ணிக் கொண்டவள் கொழுத்தும் வெயிலில் குடைபிடிக்க மறந்து, காற்றுப் போன பலூனாய் உற்சாகமின்றி மீண்டும் அந்தப் பிரதான பாதையில் நடந்து கொண்டிருந்தாள்.

---

# பஸ்

கட்டிலில் தூக்கமின்றிப்புரண்டு கொண்டிருந்தேன் நான். என்னால் எப்படித் தூங்க முடியும்? விடிந்தால் சுந்தருக்கு முடிவு சொல்லியாக வேண்டுமே என்ன முடிவு சொல்வது? எப்படிச் சொல்வது? இமைகள் பட்டாம் பூச்சியாய் படபடக்க சுந்தரை ஒரு கணம் என் விழிகளுக்குள் சிறைப்பிடித்தேன். சுந்தர் தான் எவ்வளவு நல்லவர்! தோட்டம், துரவு, காணி, பூமி என்று ஏகப்பட்ட சொத்துகளுக்கு ஒரே வாரிசு, அப்படிப்பட்ட பெரிய இடத்துப் பிள்ளை, 'டைப்பிஸ்ட்' ஆகிய என்னை மணம்முடிக்க ஆசைப்பட்டு என் முடிவை எதிர்பார்த்து நிற்கிறாரென்றால், அவர் நல்லவர்தானே? நினைவுகளிலே நெகிழ்ந்து போன நான், நாளை எப்படியாவது எனது சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு நித்திராதேவியிடம் சரணடைந்தேன்.

மறுநாட்காலை அலுவலகம் செல்வதற்காக பஸ்தரிப்பில் நின்றபோது, "நீங்க தானே சங்கவி" குரல்கேட்டுத் திரும்பினேன்.

எதிரில் வியர்வைத்துளிகள் முகமெங்கும்



சிதறிக்கிடக்க சோகத்தின் பிரதிபலிப்பாய் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள்.

"ஆமா நான் தான் சங்கவி. நீங்க யார்?" நான் கேட்டு முடிப்பதற்குள் என்னருகில் வந்து என் கரம்பற்றினாள்.

"என் பெயர் சாரதா. சுந்தர் என்கிற பெரிய மனுஷனால கைவிடப்பட்ட ஒரு அபலை. இப்போ உங்க பின்னாடி சுற்றித் திரிகிறதாகவும், விரைவில் உங்களை மணம் முடிக்கப்போறதாகவும் கேள்விப்பட்டு உங்க கிட்ட வாழ்வுப் பிச்சை கேட்க வந்தேன். கர்ப்பிணியா இருக்கிற எனக்கு நீங்கதான் கருணைகாட்ட வேண்டும்!" அவள் சொல்லிக்கொண்டே போனாள்.

எஸ். சரோஜினி

பஸ்வந்துவிட்டது. அவசரத்தில் அதில் ஏறப்போனபோதுதான், அது நான் செல்ல வேண்டிய பஸ் அல்ல என்று தெரிந்தது. இன்னொரு பஸ் வந்தது. நான் அவசரப்படாமல் நிதானமாக நோக்குகிறேன்.

தவறான பஸ்ஸில் ஏறவும் கூடாது. சரியான பஸ்ஸைத் தவறவிடவும் கூடாதல்லவா? என் மனம் இப்போது தெளிவாக இருக்கிறது.



படிப்பகம்

## இலக்கிய நயம்

# நீங்காத சந்தேகம்

தருவது ராசிகன்



மனிதன் தோன்றியபோதே
அவனுடன் ஒட்டிக்கொண்டு பிறந்தது
காதல்! இனிய காதல்!

மனிதன் தோன்றி
மனித நாகரிகம் தோன்றாக் காலத்திலேயே
மனதுக்குள் தோன்றியது காதல்!

காதல் நிரந்தரமானது
மெய்க் காதலுக்கு
எந்த நிலையிலும் மரணமில்லை!

பொய்யான காதல் என்பது
காகிதப் பூ மாதிரியானது.
பார்க்க அழகாக இருக்கும்.
பழகினால் ஆழம் இருக்காது!

மெய்யான காதல் என்பது
குறிஞ்சிப் பூ மாதிரியானது.
எப்போதாவதுதான் பூக்கும்.
பூத்துவிட்டால்
மனதுக்குள் தினமும் வாசமடிக்கும்!

காதலுக்கு எப்படி மரணமில்லையோ
காதலின் சில விதிகளும் அப்படித்தான்!
காலம் மாறினாலும் காலாவதியாவதில்லை!

மணிமாறனின் அணைப்பில்
பஞ்சுப் பொதிபோல சிறைப்பட்டுக் கிடந்த
நந்தினியின் மனதில் ஒரு வினா?
காலத்தின் கரம் தீண்டாத
காதல் விதியால் தோன்றிய வினா!

பொன்மேனியின்
இடையளவை அளந்து கொண்டிருந்தவன்
எடையளவை அறிய
அவளை தன் மேல் ஏந்த துடித்துக் கொண்டிருந்தவன்
வினாவால் இழுக்கப்பட்டான்.

"என்மேல் பிரியமா?
உண்மையாகவே பிரியமா?"
மலரிலும் மெல்லிய இதழாள்
சந்தேகச் சரம் தொடுத்தாள்!

கழுத்துக்குள் உதடு புதைத்திருந்தவன்
தோகைக்குள் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தவன்
விடுபட மனமில்லாமல் விடை சொன்னான்;
"என் உயிர்மீதுள்ள பிரியத்தைவிட
என் உன்மீதுள்ள பிரியம் வலியது!"

காளை சொன்ன பதிலால்
மனதுக்குள் இன்ப மின்னலடித்தது.

விரும்புகிறான், பிரியமுள்ளான்
என்பது அவளுக்கும் தெரியும்.
தெரியாமல்தானா தேக ஆராய்ச்சிவரை
அவன் கரம் நீள அனுமதித்தாள்?!

எனினும் மனம் பொல்லாதது.
மனம் கவர்ந்தவன் வாயால்
பிரியம் அறியும் பேராசை!
மறுபடி மறுபடி கேள்வி முளைக்கும்
விடை சொன்னால்தான் இன்பம் தழைக்கும்!

காதலிக்கு மட்டுமல்ல
காதலனுக்கும் அந்த சந்தேகம் வரும்.
அது சந்தேகமா? சந்தோசமா?

சந்தேகம்போல வினாத் தூண்டில்வீசி
சந்தோசத்தை வாரியள்ளும் தந்திரமா?!

"பொய்தானே?
உண்மையாய் பிரியமா?"

"நமக்குள் ஏனடி சந்தேக நிழல்
உயிர் பிரிந்தாலும்
உன்மீதுள்ள பிரியம் மட்டும்
பிரியாதடி என் கண்மணி!"

"இப்படித்தான்
சகல ஆண்களும் சத்தியம் செய்வர்.
காரியம் முடிந்ததும்
சாதுரியமாய் நழுவி விடுவர்!"

"சொல்வது நீதானா நந்தினி?
இதைவிட என்னைக்
கொல்வதற்கு விஷம் கொடு போதும்!"

"பார்த்தீர்களா பார்த்தீர்களா!
வாக்குத் தவறிவிட்டீர்களே கண்ணாளா?"

"என் கண்ணே, ஏன் கண்ணே
நீ என்னதான் சொல்கிறாய்?"

"உன்னைவிட்டுப் பிரியேன் ஒருநாளும்
என்று சொன்னது நீர்தானே?"

"ஆயிரம் தடவை 'ஆம்' என்பேன்
அதிலென்ன சந்தேகம் கண்மணி?"

"விஷம் கேட்டீரே,
நான் இருக்க நீர் பிரிய நினைத்தீரே!"
சொன்னவள் விழிகள் உடைப்பெடுக்க
குலுங்கிக் குலுங்கித் தேம்பினாள்.

மெல்ல அவளின் தோள் தொட்டான்
மெல்லிய இதழில் உதடிட்டான்
கண்களின் வழியே இறங்கிய முத்தை
உதட்டால் ஒற்றித் துடைத்திட்டான்!
கூந்தலைக் கோதி குளிரவைத்தான்
குன்றுகள் நடுவே முகம் புதைத்தான்!

"தந்திரக்காரா! தந்திரக்காரா!
மந்திரம் உந்தன் விரலில் உண்டு
தந்திரம் உந்தன் உதட்டில் உண்டு
அந்தரமானது என் மனது
சுந்தர அழகா நீ கள்ளன்!"

"கொடியவளே! என் கொடியவளே!
மயக்கும் கணைகள் உன்னிடமே
மிரட்டும் கணைகளும் உன்னிடமே
கண்டபின் தூக்கம் தொலைந்திடுமே
கண்ணும் மனமும் தொலைந்திடுமே!"

"இனியவரே! என் இனியவரே!
கொடியவள்மீது ஏன் விழுந்தீர்?
குறுநகை வீசி ஏன், கவர்ந்தீர்?
சுடு கரம் நீட்டி ஏன் அணைத்தீர்?
கொடுமைகள் செய்து ஏன் வதைத்தீர்?"

"மன்னித்துக் கொள்க மகாராணி
கன்னத்தில் ஒன்று தந்திடுக.
கையினால் தந்தால் வலித்திடாது
கனியிதழினால் தந்தால் இனித்திடுமே!"

"கள்ளா! கள்ளா! மகாகள்ளா!
கைகள் ஓரிடத்தில் தங்கிடாதோ?
கண்கள் ஓய்ந்து தரித்திடாதோ?
மாயம் செய்யும் உன் கரத்தால்
காயம் பட்டது என்தேகம்!
பாயும் உந்தன் கொடுவிழிகள்
மேயும் எந்தன் தேகமெங்கும்!
போதும் போதும் இனி நிறுத்தும்
போகம் செய்ய நாள் வருமே!"

"பசித்தேயிருக்கச் சொல்லாதே
பாவம் என்னைக் கொல்லாதே!"

இரைந்தபோல அவன் கெஞ்ச
இறுக்கிக் கொண்டே
இதழ் கொடுத்தாள்.
நாவோடு நாவு கலந்தாட
பல்லூறும் நீரை பகிர்ந்து பசியாற

தேன் இதோ பால் இதோ
பொல்லாக் களிப்பில் மனம் ஆடும்!

இறுக்கியணைத்தவள் மனம்
மீண்டுமொரு முறை மரம் தாவும்.
"பிரியமா என்மேல் மெய் சொல்க
உண்மையை மட்டும் உரைத்திடுக!"

"மரம் நான் கொடி நீ என்றாகி
பற்றிப் படர்ந்தோம் பாங்காக
மனப் புற்றுக்குள் இருந்து
சந்தேகம் வரலாமோ பாம்பாக?"

நிம்மதியாகிக் களிப்பாகி
மரம்மீது தாவும் கொடியாவாள்.

மாலையாகி இருள்சூழ
உயிரில் பாதி பாதியாகி
இருவரும் பிரிந்து தனியாவர்.

பிரிந்தது உடல்கள் மட்டும்தான்
நிறைந்தது என்றும் என் நெஞ்சில்
சிறந்தவன் அவனின் உருவம் அன்றோ?

நினைத்தவள் நெஞ்சில் வினா தலைதூக்கும்
மறுபடி மரத்தில் மனம் தாவும்.

"என் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்
நீங்காமல் குடியிருக்கிறார்!
என்னவர் நெஞ்சில்
நான் இருப்பேனா?
அவரின் நினைவில் நான் உறைவேனா?"
கேள்வி விரிந்து மனம் உலுப்பும்.

காதலர்க்கு வரும் இந்தச் சந்தேகம்
காலகாலமாய் உள்ளதுதான். அதுதான்
திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறார் இப்படி:

"யாமும் உளேங் கொல் அவர் நெஞ்சத்து
—என் நெஞ்சத்து
ஓஓ உளரே அவர்"

அதிகாரம்-121, குறள்-1204.

---

## ஸ்போர்ட்ஸ்

# மேற்கிந்தியத் தீவில் இந்திய அணி

மேற்கிந்தியத்தீவிற்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி, மேற்கிந்திய அணியுடன் கிங்ஸ்டனில் நடந்த முதல் டெஸ்ட்டை ட்ரோ (சமன்) செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 427 ஓட்டங்களை எடுத்தது. மேற்கிந்திய அணி சார்பில் கார்ல் ஹூப்பர் 129 ஓட்டங்களை எடுத்தார். இது இவருக்கு 7வது டெஸ்ட் சதமாகும். லாரா-83, சந்தர் போல்-52 ஓட்டங்களை எடுத்தனர்.

அனில் கும்ப்ளே சிறப்பாகப் பந்து வீசி 120 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். புதிதாக அறிமுகமான அபே குருவில்லா திறமையாகப் பந்துவீசி வில்லியம்ஸ், லாரா, ஹூப்பர் ஆகிய மூன்று முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 346 ஓட்டங்களை எடுத்தது. மொங்கியா- 78, வி.வி. லக்ஷ்மன்-64, திராவிட்-43. மேற்கிந்திய அறிமுக பந்து வீச்சாளர் ஃபிராங்கிளின் ரோஸ் 100 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



இதன் பின்னர் இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்திய அணி 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 241 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுதிக்கொண்டது. லாரா-78, சுந்தர் போல்-48, அனில் கும்ப்ளே 3/76.

வெற்றிபெற 322 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது. ஆட்டமுடிவில் இந்தியா 2 விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. போட்டி ட்ரோவில் முடிவடைந்தது.

# 'கிரிக்கெட் கடவுள்'

சேர், டொனால்ட் பிரட்மன் 'கிரிக்கெட்டின் கடவுள்' என்று புகழப்படும் பெருமையை அடைந்துள்ள அவுஸ்திரேலிய முன்னாள் வீரர்.

இவரது கிரிக்கெட் திறமையை அங்கீகரிக்கும் வகையில்தான் இவருக்கு சேர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இப்போது இந்தச் சிறப்புக்களின் எண்ணிக்கையில் மேலும் ஒன்று அதிகரித்துவிட்டது. அவுஸ்திரேலிய அரசு, இவரைக் கௌரவிக்கும் வகையில் இரு தபால் தலைகளை வெளியிட்டுள்ளது.

தாய்நாட்டின் தவப்புதல்வர்களுக்குத் தபால் தலைகளில் இடமளிப்பது வழக்கமானதுதான், என்றாலும் பிரட்மனின் விஷயத்தில் ஒரு தடை. அது என்னவென்றால் உயிரோடு இருப்பவர்களுக்கு தபால் தலைகள் வெளியிடக்கூடாது என்பது அவுஸ்திரேலிய அரசின் மரபு.

டொன் பிரட்மனுக்காக இந்த மரபு முதன் முறையாக மீறப்பட்டுள்ளது. (கிரிக்கெட்) கடவுளுக்கு சட்டங்களை விதிக்க முடியுமா, என்ன?

# இவர்கள்தான் அவர்கள்



சஞ்சய் தத்



அமீர்கான்



கரிஷ்மா கபூர்

---

# சிந்தியா பதில்கள்

**★ அன்பின் சிந்தியா! சாதாரண மக்கள் மீதான தவறுதலான தாக்குதல்களை பயங்கரவாதிகள் மீதான தாக்குதலாக சொல்லப்படும்போது என்ன நினைப்பீர்கள்?**

ஏ. வினோ, கொழும்பு-11.

'பயங்கரவாதிகள்' உருவாகுவதில்லை; உருவாக்கப்படுகிறார்கள். உலக வரலாறே அதுதானே என்று நினைத்துக் கொள்வேன்.

**★ நடிகை ஸ்ரீதேவியின் திருமண வாழ்க்கை எப்படியிருக்கிறது?**

கே. திவ்யராணி, மாத்தளை.

அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்து அம்மாவாகிவிட்டார் ஸ்ரீதேவி. அது சட்டபூர்வ குழந்தை இல்லையென்று போர்க்கொடி தூக்கி கசாமுசா கிளப்பியுள்ளார் போனி கபூரின் முதல் மனைவி. "விவாகரத்துக்கும் சம்மதிக்கமாட்டேன்" என்று ஒரு குண்டைத்தூக்கிப் போட்டிருக்கிறார்.

**★ இலங்கைத் தமிழர்களின் பலம், பலவீனம் என்ன?**

சிவாஜி இராமசிவம், தலவாக்கலை.

பலம்: துயரங்களைத் தாங்கியும் முறியாதிருப்பது.

பலவீனம்: துயரங்களைத் தாங்கிக் கொண்டே இருப்பது.

**★ உள்ளூராட்சித் தேர்தலில் மலையகத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுமா?**

து. கிருஷ்ணகுமார், பொகவந்தலாவ.

இம்முறை கடினம்.

**★ டியர் சிந்தியா! வன்னிக் காட்டுக்குள் சென்றுள்ள இராணுவத்தின் நிலை என்னாகும்?**

செல்வன் எஸ். அரசகுமார், கல்முனை-02.

காட்டுக்குள் சென்றதாக யார் சொன்னது?

**★ அன்பு சிந்தியா! காலத்துக்கு ஏற்ற முறையில் மாறும் பெண்களைப் பற்றி என்ன கூறுகிறீர்?**

ஏ.ஜே.எம். ஜ.'.பர், கொழும்பு-15.

முன்னோக்கித்தானே செல்கிறார்கள்? தப்பேயில்லை. மாற்றம் கூடாது என்றால் இலை குழை ஆடைகளுடன் அல்லவா இருந்திருக்கவேண்டும்? நீங்கள் மட்டும் என்ன அந்தக் கால ஆண்கள்போல குடுமியுடன்தான் திரிகிறீர்களா? அதென்ன பெண்கள்மீது மட்டும் பொறாமை?!

**★ நியூஸிலாந்து அணியிடம் வாங்கிக் கட்டியதே இலங்கை அணி?**

கே. ரவீந்திரன், கொழும்பு-06.

ஏதோவொரு யங் ஆ....பிரையன் யங் முதல் இன்னிங்ஸில் அவுட்டாகாமல் 237 ரன்களை விளாசி இலங்கை அணிக்கு சலிப்பேற்றிவிட்டாருங்க. ஜெயசூரியா-0, அரவிந்த டி சில்வா-03 என்று முதல் இன்னிங்ஸில் சுருண்டுபோனதும் மற்றொரு அதிர்ச்சிதாங்க. கலுவிதாரண-43, திலகரத்ன-55 அடித்ததுதான் முதல் இன்னிங்ஸில் ஆறுதல் பரிசுங்க.

**★ ஈ.ரி.வியில் சொர்ணவாகினி ஒளிபரப்பாகப் போகிறதாமே?**

ஜெ. சிவனேசன், நுவரெலியா.

தமிழ் நிகழ்ச்சியை (ராஜ் ரி.வி.) வைத்து விளம்பரம் தேடியதுதான் சகிக்க முடியவில்லை. தமிழ்ப்படங்களை ஒளிபரப்பியபடி இடைநடுவே விளம்பரம் போட்டதும் மகா அறுவை.

**★ வாயால் கெடுவது என்றால் என்ன?**

எம். செல்வநிதி, கண்டி.

ஒரு விவாகரத்து வழக்கு நடந்து கொண்டிருந்தது. பெண்ணை நோக்கி நீதிபதி ஒரு கேள்வி கேட்டார்.

"காலையில் எழுந்ததும் உன் கணவர் பேசிய பேச்சால்தான் பிரிவு ஏற்பட்டது என்கிறாயே; அப்படி என்ன பேசினார்?"

அக் கேள்விக்கு பெண் சொன்னாள்:

"காலையில் எழுந்ததும் "மேரி நான் எங்கிருக்கிறேன்?" என்று கேட்டார்" என்றாள்.

நீதிபதிக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. "இதில் நீங்கள் கோபப்பட என்ன இருக்கிறது?" என்று கேட்டார் நீதிபதி.

அதற்கு அவள் சொன்னாள்:

"என் பெயர் மேரி இல்லை- சூஸன்!"



**★ கிரிக்கெட் அணிகளில் தற்போது பலமான அணி எது?**

சோ. ஜெயக்குமார், பதுளை.

பல போட்டிகளில் வெற்றியைக் குவித்த தென்னாபிரிக்க அணிகூட கடந்தவாரம் தனது மண்ணில் நடைபெற்ற டெஸ்ட்டில் அவுஸ்திரேலியாவிடம் சுருண்ட வேகத்தைப் பார்த்தபோது, கிரிக்கெட்டில் நிரந்தர பலவானும் இல்லை, நிரந்தர பலவீனனும் கிடையாதோ என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

**★ டியர் சிந்தியா! வாழ்க்கையில் கிடைக்கக் கூடாததும், கிடைக்க முடியாததும் எது?**

ச. றொபட், மட்டக்களப்பு.

நிரந்தர ஆயுள்!

**★ தமிழ்ப்பட இயக்குநர்களில் முன்னணியில் இருப்பவர் யார்?**

எம். நசுருதீன், கல்முனை.

"நடிகர்களில் கமல், ரஜினி, இயக்குநர்களில் சங்கர் ஆகியோரின் படங்களை மட்டும்தான் சொன்ன விலை கொடுத்து வாங்குவோம்" என்று தமிழகத் திரைப்பட விநியோகஸ்தர்கள் தீர்மானமே போட்டிருக்கிறார்கள் என்றால் பாருங்களேன்!

**★ காலத்தால் அழியாதது காதல் மட்டும் தானே சிந்தியா?**

எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.

சில நேரங்களில் காமமும். மர்லின் மன்றோ மறைந்துவிட்டார். சில்க் சுமிதா செத்துப்போனார். ஆனால் அவர்களது ரசிகர்கள் மட்டும் அவர்களை மறக்காமல் இருக்கிறார்களே!

**★ மலையக மக்கள் முன்னணிக்கும், இ.தொ.கா.வுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எவை?**

எஸ். யேசுநாதன், பொகவந்தலாவ.

தலைவர்களின் பெயர்கள், பதவிகள், வயது, வாதம் செய்யும் சாதுரியம்! பாதை மட்டும் ஒன்றுதான்!

**★ சட்டென்று ஒரு ஹைக்கூ கவிதை சொல்லுங்கள்?**

செல்வி வி. கவிதா, வவுனியா.

கவிதா கவிதை கேட்கிறீர். சபாஷ் நல்ல பொருத்தம்.

"காகிதப் பூவில்
வாசனை—
காதல் கடிதம்"

**★ நம்நாட்டில் தனியார் தொலைக்காட்சிகளின் தரம் எப்படியிருக்கிறது?**

எஸ். தேவபாலன், நீர்கொழும்பு.

மை கார், மை பெற்றோல் என்ற ரீதியில் தம் விருப்பம்போல நிகழ்ச்சிகளைக் காண்பிக்கிறார்கள். அதிலும் தமிழ் நிகழ்ச்சிகள் என்றால் ஏதோ தருமத்துக்காக செய்வது போன்ற எண்ணம். தடங்கலுக்கு வருந்த மாட்டார்கள். தங்கள் ரசனைக்கு ஏற்ப நிகழ்ச்சிகளைத் தணிக்கை செய்கிறார்கள். சிறந்த தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை யாராவது ஆரம்பித்தால் தலைக்கன தொலைக்காட்சிகளை ஓரம் கட்டலாம். யாராவது முன்வரலாமே?

**★ டியர் சிந்தியா! இன்று ரெலிஃபோன் மணிபோல சிரிப்பவள் நாளை எவ்வாறு சிரிப்பாள்?**

எஸ். ரஞ்சன், அக்கரைப்பற்று-08.

'என்கேஜ் டோன்' மாதிரி.

**★ உதவியே உபத்திரவத்தில் முடிவது எப்போது?**

கா. கேசவன், மட்டக்களப்பு.

தண்ணீரில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தான் ஒருவன்.

அவ்வழியே சென்ற ஒருவர் அதனைக் கண்டுவிட்டார். மயங்கிக் கிடந்த அவனைக் காப்பாற்றி தரையில் போட்டார்.

மயக்கம் தெளிந்ததும் அவன் கேட்ட கேள்வி: "என்னைக் காப்பாற்றியது நீங்கள்தானே?"

அவரும் "ஆமாம் நான்தான்" என்று உண்மையைச் சொன்னார்.

உடனே அவன் என்ன சொன்னான் தெரியுமா?

"அப்படியா? என் சட்டைப் பையில் வைத்திருந்த பணத்தைக் கொடுத்துவிடு!"

**★ மனிதர்களின் சிந்தனை எப்படியிருக்க வேண்டும்?**

எஸ். கமலேஸ்வரன், தெமட்டகொட.

எப்படியிருக்கக்கூடாது என்று சொல்கிறேன்: "கடவுள் நம்முடைய பாவங்களை மன்னிக்க வேண்டுமானால் நாம் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார் ஆசிரியர்.

அதற்கு மாணவன் சொன்ன பதில்:

"முதலில் பாவங்களை செய்யணும். அப்போதுதானே அவரால் மன்னிக்க முடியும்!"



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 74

## வானரர்களிடம் வந்த வீர ஆஞ்சநேயர்

இராமபிரான் இட்ட கட்டளையை அவருடைய தூதனான அனுமன் நிறைவேற்றிவிட்டார். இராமபிரானுக்குத் தீங்கு விளைவித்த அரக்கர்க்கரசன் இராவணனுக்கு பெரும் சவாலை விட்ட நிலையில் தனது தலைவனான இராமபிரானிடம் திரும்ப ஆயத்தமான ஆஞ்சநேயர் மீண்டும் அசோகவனத்துள் புகுந்தார். அவ்வனத்திலிருந்த நுழைவாயில் அழிந்து அலங்கோலமாகக் கிடந்தது. திரும்பிய பக்கமெல்லாம் தீயால் பொசுங்கிக் கிடப்பதைக் கண்டார். சீதாப்பிராட்டியாருக்கு எத்தகைய ஆபத்தும்- தான் மூட்டியதீயினால்- ஏற்பட்டிருக்கமாட்டாது என்பது அவருக்கு நன்கு தெரிந்திருந்தது. இருப்பினும் மனத்தின் ஒரு மூலையில் ஒரு சிறு தயக்கமும் இல்லாமலில்லை.

வானிலே தாவி ஏறி ஆகாயவெளியில் மிதந்த வண்ணம் அசோகவனத்தை வட்டமிட்டார், அவ்வனம் முற்றாகச் சாம்பலாகக் கிடந்தபோதும் ஒருசிறு பகுதி மட்டும் பச்சைப் பசேல் என்று பசுமை நிறைந்து காணப்பட்டது. 'பாலைவனத்துள் ஒரு சோலை வனம்' போல் காட்சி அளித்தது. அதனைக் கண்ட அனுமன் அளவிலா ஆனந்தம் கொண்டார். அவ்விடத்தை வெகு வேகமாகப் பறந்து சென்றடைந்தார். தரையை நோக்கி விரைந்தார். அங்கே எத்தகைய மாற்றமுமில்லாத நிலையில் சீதாப்பிராட்டியார் அமர்ந்திருந்தார். அவர் கண்களை மூடிய வண்ணம் இருந்தமையினால் பிராட்டியார் அனுமனைக் காணவில்லை.

தரையில் இறங்கும் போதே "இராம ஜெயம் ஸ்ரீ இராம ஜெயம்" என்ற மந்திரத்தை இராக பாவத்துடன் இசைத்தார். இந்த நாதம் பிராட்டியாரின் காதுகளில் அமுத ஊற்றாகப் பாய்ந்தது. அதேவேளை அசோக வனத்தில் பிராட்டியாருக்குக் காவலாக இருந்த அரக்கியர் அனைவரையும் இந்த இசை மயக்கமடைய வைத்தது. தொடர்ந்து பாடியவண்ணம் பிராட்டியாரை அணுகிய ஆஞ்சநேயர் சாஷ்டாங்கமாக அவர் காலடியில் விழுந்து வணங்கினார்.

பிராட்டியார், அதுவரை, அனுமனுக்கு என்ன நேர்ந்ததோ என்று தெரியாத நிலையில் துயருற்றிருந்தார். அனுமனின் வாலில் தீமூட்டப்பட்டது என்ற தகவல் அறிந்தது முதல் பிராட்டியாரே அனலிடை அகப்பட்ட புழுபோல் தவித்தார். அனுமனைக் கண்டதும் அவருடைய உடலும் உள்ளமும் குளிர்ந்தன. புன்னகையுடன் அனுமனை நோக்கினார். அவருடைய வாயிலிருந்து எந்த வார்த்தையும் உதிரவில்லை. வலது கரத்தினால் ஆஞ்சநேயரை வாழ்த்தினார்.

**பார்த்தனள் சானகி பாரா**
**வோர்த்து எரி மேனிகுளிர்ந்தாள்**
**வார்த்தை என் வந்தனை என்னா**
**போர்த் தொழில் மாருதி போனான்.**

*(சுந்தர காண்டம்-1245)*

பொருள்:

*அனுமனை சீதாப்பிராட்டியார் பார்த்ததும், அனுமனுக்கு என்ன நேர்ந்ததோ என்று தெரியமுடியாமையினால் வெந்த நிலையிலிருந்த, அவருடைய உள்ளம் குளிர்ந்தது. போரிலே ஈடிணையற்ற மாருதியாகிய அனுமன், 'இன்னும் பேசுவதற்கு என்ன இருக்கிறது.' என்று குறிப்பால் உணர்த்தி விட்டு அங்கிருந்து புறப்பட்டார்.*

இவ்வாறு கம்பநாட்டாழ்வார் இரத்தினச் சுருக்கமாக அக்கட்டத்தைச் சித்திரிக்கிறார்.

### விண்ணிலே தாவிய மாருதி

சீதாப்பிராட்டியாரிடம் விடைபெற்றுக் கொண்ட ஆஞ்சநேயர் விரைந்து சென்று ஒரு மலையின் சிகரத்தை அடைந்தார். இராமமந்திரத்தை உச்சரித்த வண்ணம் மீண்டும் வான்முட்ட தன் உடலை வளர வைத்தார். அம்மலையிலிருந்து உந்தி எழுந்து விண்ணிலே பறந்தார். ஆஞ்சநேயர் இலங்கை நகர் நோக்கிப் பறந்து வரும்போது அவரை மைந்நாக பர்வதம் என்ற மலை இடையில் நின்று தடுத்ததல்லவா? அம்மலையை அடைந்து கீழே இறங்கினார். அம்மலை செய்த உபசரணைகளை ஏற்றுக்கொண்டு இலங்கையில் நடந்த சம்பவங்களை அம்மலையிடம் கூறினார். பின்னர் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

மீண்டும் ஆகாயமார்க்கமாகப் பறந்து கடற்கரைமீது வட்டமிட்டார். ஆஞ்சநேயரின் வருகையை மகேந்திரமலையில் காத்திருந்த வானர வீரர்கள் கண்டுவிட்டனர். வருவாரோ மாட்டாரோ என்ற ஐயத்துடன் ஒவ்வொரு நொடியையும் கடத்திக் கொண்டிருந்த வாலியின் மைந்தன் அங்கதனும் கரடிகளின் தலைவர் ஜாம்பவனும் ஏனைய வீரர்களும் குதூகலத்துடன் கூத்தாடினார்கள். அனுமன் தரை இறங்கியதும் அவருடைய முகத்தில் காணப்பட்ட தெளிவு அங்கிருந்த அனைவரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தியது. அனுமன், அன்னை சீதாப்பிராட்டியாரைக் கண்டுவந்து விட்டார் என்பதை அவர்கள் அறிந்து கொண்டனர்.





### வானரர்களின் குதூகலம்

அனுமன் தரையில் கால்பதித்ததும் முதலில் மண்மாதாவைத் தொட்டுக் கும்பிட்டார். அடுத்து இளவரசர் அங்கதனின் தாள் பணிய முற்பட்டதும், அங்கதன் தன் வலிமை முழுவதையும் ஒன்று திரட்டி அனுமனின் தோள்களைப் பிடித்து உயர்த்திய வண்ணம் அனுமனின் தாள்களைத் தொட்டான். அங்கதனின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் கரைபுரண்டோடியது. அடுத்து இருவரும் ஒருவரை ஒருவர் தழுவி ஆலிங்கனம் செய்துகொண்டனர்.

அடுத்ததாக ஜாம்பவனுடைய அடிகளை ஆஞ்சநேயர் தொழுதார். அவ்வண்ணம் வயதால் அனுமனைவிட முதிர்ந்தவர்களின் தாள் பணிந்து ஆசி பெற்றார். ஏனைய வீரர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அனுமனை அணைத்து ஆலிங்கனம் செய்தனர். பெரு விழாபோன்று அனைவரும் குதூகலித்தனர்.

இதற்கிடையில் அருகிலுள்ள வனத்துள் புகுந்த வானரவீரர்கள் பலவகையான காய்கனிகளைக் கொண்டுவந்து சேர்த்தனர். தேனும் பாலும் கூடக் கொண்டு வந்து வைத்தனர். தன்னுடைய தோழர்களின் உபசரிப்பைக் கண்டு உள்ளம் பூரித்த அனுமன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். அங்கிருந்த எல்லோரும் வரிசையாக அமர்ந்து உண்டனர். தன்னருகே அமர்ந்திருந்த அங்கதனிடம் அனுமன், "இளவரசே! நமது வீரர்கள் அனைவரும் இவ்வாறு மெலிந்து காய்ந்து போயிருக்கிறார்களே?" என்று வினவினார். அதற்கு அங்கதன், "மாமா! தாங்கள் தென்திசை நோக்கிச் சென்று சில மாதங்களாகி விட்டன. எமக்கு எமது மன்னர் ஒரேயொரு மாதம் மட்டுமே அவகாசம் தந்தனுப்பினார். அக்காலக் கெடு கடந்த பின்னர் தங்களைப் பற்றிய கவலை எல்லோரையும் ஆட்கொண்டு விட்டது. எனக்குத் தங்களுடைய வீர பராக்கிரமங்கள் பற்றி நன்கு தெரியும். எப்படியும் தாங்கள் வெற்றியுடன் திரும்பிவருவீர்கள் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆனால், இவர்கள் மிகவும் கவலைப்பட்டு, உணவு சரியாகக் கொள்ள மனமின்றி இருந்துவிட்டனர். அதனால் தான் எல்லாரும் மெலிந்து வாடிவதங்கிப்போய்விட்டார்கள். இனித் தங்களுடைய கதைகளை- உணவு உட்கொண்ட பின்- ஆறுதலாகக் கூறுங்கள்!" என்றான்.

### இலங்கையில் நடந்தவை

வயிறார உண்டபின் சகலரும் மலையிலிருந்து கீழே இறங்கினார்கள். கடற்கரை ஓரமாக எல்லோரும் வளைவாக இருக்க அனுமன், தான் இலங்கையில் சீதாப்பிராட்டியாரைக் கண்டது, இராவணன் பிராட்டியாரை அணுகித் தன்னை ஏற்கும்படி கோரியது, பிராட்டியார் இராவணனை வெறுத்தது, பின்னர் தான் பிராட்டியாரைத் தரிசித்து இராமபிரான் கொடுத்தனுப்பிய அடையாளச் சின்னத்தைப் பிராட்டியாரிடம் கொடுத்தது, இராவணனை அவனுடைய அரசவையில் கண்டு எச்சரித்தது, இலங்கை நகரை எரித்தது ஆகிய எல்லாச் சம்பவங்களையும் விபரமாக எடுத்துக் கூறினார்.

"தென்திசை நோக்கி என்னுடன் எவரெவர் வந்துள்ளனர் என்று என்னிடம் வினவிய பிராட்டியார், நான் கூறியவற்றைக்கேட்டு, உங்கள் அனைவருக்கும் தன் நன்றியையும் வணக்கத்தையும் கூறினார்கள்," என்று அனுமன் கூறினார். இதனைக் கேட்ட அனைவரும் எழுந்து நின்று பயபக்தியுடன், இலங்கை இருக்கும் தென்திசை திரும்பி நின்று பிராட்டியாரைத் தொழுதார்கள்.

கதை கூறிமுடித்த ஆஞ்சநேயர், பரபரப்புடன் எழுந்து நின்றார். அங்கதனைப் பார்த்து, "இளவரசே! இனிநாம் தாமதிக்கலாகாது. எமக்கு அளிக்கப்பட்ட காலக்கெடு எப்போதோ முடிந்துவிட்டது. இராமபிரான் மிகுந்த கவலையுடன் எமது செய்திக்காகக் காத்திருப்பார். இளையபெருமாள் இலக்குவன் பொறுமை இழந்து துடித்துக்கொண்டிருப்பார். எமது மன்னர் சுக்கிரீவன் எம்மைத் தேடிக்கண்டு பிடிப்பதற்காக மற்றுமொரு சேனையை இதுவரை அனுப்பிவைத்திருக்கவும் கூடும். ஆகவே, ஒரு நொடிப் பொழுதையேனும் வீணடிக்க முடியாது. தாங்கள் படைகளை அழைத்துக்கொண்டு பின்னே வாருங்கள்; நான் கிட்கிந்தை நோக்கி ஓடிச் செல்லப்போகின்றேன்," என்றார். இதற்கு அங்கதன் ஒப்புக்கொண்டான். ஏனைய வானர வீரர்களும் சம்மதமளித்தனர். வாயு புத்திரரான அனுமன் உடனே, தன் தந்தையின் வேகத்தைவிட பன்மடங்கு அதிக வேகத்துடன் விண்ணோக்கிப் பாய்ந்தார். அப்போது வானர சேனையிலிருந்த அனைவரும், "ஸ்ரீ இராம ஜெயம்... ஜெய் ஸ்ரீ அனுமன்....!" என்று வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

* * *

இராமபிரான் கிட்கிந்தை நகரை அடுத்த பிரசிரவணமலையில் அப்போது இருந்தார். சீதாப்பிராட்டியாரின் நினைவாகவே நாளையும் பொழுதையும் செலவிட்டு மிகவும் நொந்து போய் இருந்தார். கண்கள் இரண்டும் சிவந்து காணப்பட்டன. உதிர்ந்து காய்ந்து போன சருகுகளையே ஒரு வேளை உணவாகக் கொள்வார். புல்லினாலான படுக்கையையும் துறந்து, தனது கையையே தலைக்கு அணையாக வைத்து சிறிது நேரம் மட்டும் தரையில் படுத்திருப்பார். வயிறு பசியையும் தாகத்தையும் மறந்ததுபோல் அவருடைய கண்களும் உறக்கத்தை மறந்து போயின. அவரருகில் இலக்குவனும் சூரியன் மகனான சுக்கிரீவனும் வந்தமர்ந்தனர். அப்போது ஒரு கரிய காகம், அவர்களுக்கு நிழலாக இருந்த மரத்தின் மேலிருந்து, "காகா....காகா" என்று கரைந்தது. பறவைகளின் மொழியை அறிந்தவனான இலக்குவன் எழுந்து அக் காகத்தையும் வானில் தவழ்ந்த கதிரவனையும் சற்று நேரம் பார்த்தான். அவருடைய முகத்தில் திடீரெனப் பிரகாசம் தோன்றியதை இராமபிரானும் சுக்கிரீவனும் அவதானித்தனர். (தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

## இராமாயணப் போட்டி: 72

### சரியானவிடை:- விபீடணன்

1. த. தேவகி, "றாஜ் மகால்" குருமன்காடு, வவுனியா.
2. பே. தரணிதரன், கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று.
3. செல்வி இ. கோபிகா, 79/5 டபிள்யு.எ.சில்வா மாவத்தை, கொழும்பு-6.
4. ஜெஸ்மின் விஜயகுமார், கலதுர குரோசரி, மெதா கலதுர, இரத்தினபுரி.
5. ஆர். கிருஷாந்தன், மே/பா ராமகிருஷ்ணன், ஹோலி டிறினிரி கல்லூரி, நுவரெலியா.

**போட்டி இல. 74 கேள்வி:-** எரிந்துபோன அசோகவனத்தின் ஒரு பகுதி மட்டும் பசுமையாக இருந்தது. இச்சம்பவம் ஓர் உதாரணம் கூறி விளக்கப்பட்டுள்ளது. அந்த உதாரணம் என்ன?

மார்ச் 22 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.74, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# நீங்களும் அசத்தலான அரசியல்வாதியாகலாம்

## காதிலை பூ கலைக் கல்லூரி

நாட்டில் வேலை வாய்ப்புக்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றன.

சுய தொழில் தொடங்கலாம் எனில் அதற்கும் மூலதனம் அவசியம். திறமை, அதிஷ்டம் என்று பல சமாச்சாரங்கள் தேவைப்படும்.

இவை எதுவும் இல்லாத இலாபகரமான தொழிலாக அரசியல் அமோக வளர்ச்சியடைந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். அப்படி அறியவில்லை என்றால் நீங்கள் குறட்டைவிட்டு தூங்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

மூளையிலே எதுவுமில்லாவிட்டாலும் மேடையிலே முழங்கி அரசியல் தொழில் துறையில் முன்னேறியவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். அதனால் உங்களிடம் சிறந்த சிந்தனை, தகுதிகள் இல்லையே என்று நீங்கள் தயங்கவேண்டாம்.

கோழி முட்டை விற்றவன் கோடீஸ்வரனாகலாம், கோழிபோல கொக்கரிக்கத் தெரிந்தவன் கேடியாகலாம். அந்தக் கேடியும் ஒருநாள் அரசியல்வாதி ஆகலாம். அந்தக் கேடி கோடீஸ்வரனாகலாம். டேக் இட் ஈஸி.

செருப்புத்தைக்கும் தொழிலாளியின் மகன் நாட்டையாள முடியும் என்பது பழைய ஜனநாயகம். செருப்பு வீசத் தெரிந்தவர்கள்தான் நாட்டை மேய்க்க முடியும் என்பது புதிய ஜனநாயகம். செருப்புவீசத் தெரியாவிட்டாலும் அட்லீஸ் செருப்பு வீச்சில் இருந்து தற்காப்பு தேடவாவது தெரிந்திருக்க வேண்டும்.

பொய் சொன்னால் பொரியும் கிடையாது என்பதை நம்பினால் நீங்கள் அரிச்சந்திரனாகலாம். அரசியல்வாதியாக முடியாது. பொய் சொன்னால்தான் வாக்குக் கிடைக்கும்.

மேற்கண்ட விடயங்களை மனதில் ஆணியடித்து மாட்டிக்கொண்டால் நீங்கள் பாதி அரசியல்வாதியாகிவிட்டீர்கள் என்று அர்த்தம்.

எந்தத் தொழிலுக்கும் சில டெக்னிக்குகள் தேவை. டெக்னிக் தெரிந்தால்தான் அசத்த முடியும்.

அரசியல் தொழிலில் மூக்கைப் பொத்திக்கொண்டு முன்னேறும்போது டெக்னிக்குகள் தானாகவே தெரியவரும். நீங்களே பின்னர் புதுப்புது டெக்னிக்குகளை மக்கள் தலையில் அரைத்து பரீட்சித்துப் பார்க்கலாம். விதம் விதமாக மக்களுக்கு அல்வா கொடுக்கலாம்.

'ஆயிரம் பேரைக் கொன்றவன்தான் வைத்தியன். ஆயிரம் பேரையாவது ஏமாற்றத் தெரிந்தவன்தான் அரசியல்வாதி.' இந்த மாபெரும் தத்துவத்தை மனதில் இருந்து கழற்றிப் போட்டுவிடாதீர்கள்.

ஒரு ஆரம்பத்துக்காக காதிலை பூ கலைக்கல்லூரி சில அடிப்படை டெக்னிக்குகளை உங்களுக்கு அறியத் தருகிறது.

தினமும் ஏழரைமணி நேரம் வீட்டில் இருந்தே நீங்கள் பயிற்சி பெறலாம்.

### அறிக்கை அல்வா

__தேவையானவை:__

* பத்திரிகைகள்
* காகிதம்
* பேனா அல்லது பென்சில்
* கொஞ்சூண்டு பொது அறிவு
* கொஞ்சம் உண்மை
* நிறையப் பொய்கள்.

__செய்முறை:__

முதலில் அன்றைய பத்திரிகையைப் படிக்கவும். மக்களை சென்டிமென்டாகப் பாதிக்கும் செய்திகளை பேனாவால் அடிக்கோடிடவும். சகல பத்திரிகைச் செய்திகளையும் படித்து அவ்வாறு கோடிட்டபின்னர், ஒரு சிகெரட், அல்லது சுருட்டு. ஆரம்பத்தில் அதற்கும் வசதியில்லாவிட்டால் ஒரு துண்டு பீடியை புகைத்துக்கொண்டு திங்க் பண்ணவும். திங்க் பண்ணு கிறீர்களோ இல்லையோ திங்க் பண்ணு வதுபோல நடிப்பது பிற்காலத்தில் பலரை ஏமாற்றக் கைகொடுக்கும் டெக்னிக்.

இனி, அடிக் கோடிட்ட பிரச்சினைகளில் பிரதான பிரச்சனையாக ஒன்றைத் தேர்ந்தெடுத்து காரசாரமான அறிக்கையை எழுத ஆரம்பியுங்கள்.

அறிக்கை ஒரு பக்குவத்துக்கு வரும்போது ஜனநாயகம், விசாரணை, நீதி விசாரணை, மனிதாபிமானம், கண்டனம் போன்ற வார்த்தைகளை காரம் வருமளவுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். கொஞ்சம் சோகமான வார்த்தைகளையும் கிள்ளிப்போட்டு நன்றாக தாளித்து விட்டீர்களானால் அறிக்கை வீரம் மணக்க மணக்க ரெடியாகிவிடும்.

ஞாயிற்றுக்கிழமை நாட்களில் பத்திரிகை வாசிப்போர் தொகை அதிகம் என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கைதேர்ந்த அரசியல் தொழில் மேதைகள் சிலர் தங்கள் அறிக்கை அல்வாக்களை ஞாயிறுகளில்தான் மக்களுக்கு பரிமாறி அசத்திப் பிழைக்கிறார்கள்.



ஆகவே-குறைந்த செலவில் நிறைந்த பலன் பெறவும், உங்கள் அல்வாவை பலர் தின்று பயன் அடையவும் ஞாயிறு மற்றும் முக்கிய தினங்களில் வீரம், சோகம் மணக்க மணக்க, பரிமாறுவது முக்கியம்.

### விளம்பர டெக்னிக்

*வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அறிக்கை அல்வாவை விளம்பரப்படுத்த இதோ ஒரு டெக்னிக்.*

*சில சோப்புக்களை விளம்பரம் செய்வதற்காக பிரபலமானவர்கள் பாவிக்கும் சோப் என்று விளம்பரம் செய்வதை கண்டிருப்பீர்கள்.*

*அதுபோல அறிக்கை அல்வாவைப் பிரபலப்படுத்த ஒரு சூப்பர் டெக்னிக் கைவசம் உண்டு. நாட்டின் உயர் பதவிகளில் இருப்பவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் என்றோ, மகஜர் என்றோ அல்லது பக்ஸ் செய்தி என்றோ முத்திரை குத்தி பத்திரிகை என்னும் வாழை இலைகளில் வைத்து மக்களுக்குப் பரிமாறுங்கள். ஒரு மரியாதையாக இருக்கும்.*

### மேடை அல்வா

__தேவையானவை:__

* மேடை
* மைக்
* வாய்நிறையப் பொய்.
* கணீரென்ற தொண்டை.

__செய்முறை:__

எச்சரிக்கிறோம், பொறுக்கமாட்டோம், பதவியைத் துறக்கத் தயங்கமாட்டோம், பேச்சு வார்த்தை, போர் நிறுத்தம், சமாதானம் போன்றவற்றை சமவிகிதத்தில் கலந்து தயாரித்து வழங்கினால் 'மேடை அல்வா' கம கமக்கும்.

### அனுதாப அல்வா

__தேவையானவை:__

நாட்டில் யார் செத்தாலும் உடனடியாக அறிந்துகொள்ளக்கூடிய நீண்ட காதுகள்.

__செய்முறை:__

அறிந்ததும் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்தோம், ஜனநாயகத்திற்கு பேரிழப்பு, நல்ல நண்பர், பண்பாளர், பழக இனியவர், நல்லவர், வல்லவர், நேர்மையானவர், நிறைகுடம், குத்துவிளக்கு, காஸ் அடுப்பு, டியூப் லைட், ஜனநாயக மெர்குறி பல்ப் என்பன போன்ற வாக்கிய மசாலாக்களை கண்ணைமூடிக்கொண்டு ஒன்று கலக்கவும். கடைசியாக அஞ்சலியைப் போட்டு தாளித்து சோகம் மணக்க விநியோகிக்கவும். இந்த அனுதாப அல்வாவை உயிரோடு இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, உயிரிழந்தவருக்கும் கொடுக்கலாம் என்பதுதான் சூப்பர் சூப்பர் டெக்னிக்.

மேற்கண்ட அல்வாக்களை தயாரிக்கக் கற்றுக்கொண்டால் உங்கள் பெயர் பிரபலமாகும். தொழில் சிறக்கும். இலாபம் சேரும். துஷ்ட குணங்கள் பெருகும். காக்கை கூட்டங்கள் உங்களை சுற்றிச் சுற்றி வட்டமிடும்.

### சோப் போடுதல்

அரசியல் தொழிலின் அதி முக்கிய கட்டம் இதுதான்.

முக்கிய பதவிகளில் இருப்போருக்கு, உங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறலாம் என்று கருதப்படுவோருக்கும் சோப் போடத் தெரிந்துகொள்ளவேண்டும்.

நீங்கள் தயாரிக்கும் அல்வாக்களால் உயர் தலைவர்களுக்கு ஏற்படக்கூடிய ஜீரணக் கோளாறுகள், இரத்தக் கொதிப்பு, முகத்தசைகள் இறுகி கோபம் ஏற்படுதல் போன்றவற்றை நீக்குவதற்காக புகழ்ச்சி மணம் வீச வீச தனியாகச் சந்தித்து சோப்போடவேண்டும்.

தற்போது பிரபல அறிக்கை அல்வா தயாரிப்பாளர்களாக இருப்போர் அனைவரும் சோப் போடுவதில் சிங்கங்கள், தங்கங்கள், வித்தை சீலர்கள் என்பதை மறந்து விடவேண்டாம்.

மேலும் பல சூப்பர் டெக்னிக்குகள் நேரில் சொல்லித் தரப்படும். இன்றே நீங்களும் அரசியல் தொழில் தொடங்கி அல்வா கொடுக்கத் தயாராகுங்கள்.

தகுந்த யோசனைகளுக்கு உங்கள் அருகிலுள்ள அரசியல் வியாபாரிகளை நாடாதீர்கள். தாம் பெறும் இன்பம் இவ் வையகம் பெறுவதை விரும்பாத பொதுநலவாதிகள் அவர்கள்.

மேலதிக ஆலோசனைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்; *காதிலை பூ கலைக்கல்லூரி, ஏமாந்தபுரம்.*




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06
580230


# வசதியான உயரம்



தருவது லியோடெ

→ கூடைப்பந்து விளையாட்டுக்களில் உயரமான வீரர்களுக்குத்தான் பயங்கர மவுசு. உயரம் குறைந்தவர்கள் துள்ளித் தாவித்தான் பந்தை தள்ளவேண்டும். உயரமான வீரர்கள் என்றால் நின்றபடியே கூடைக்குள் பந்தைப் போட்டுவிடலாம்.

உலகிலேயே மிக உயரமான கூடைப்பந்து விளையாட்டு வீரர்தான் படத்தில் காணப்படுகிறார். இதுவரை கூடைப் பந்து விளையாட்டுக்களில் உயரமான பலர் விளையாடியிருக்கிறார்கள். அவர்களில் எவருமே இவரது உயரத்தை எட்டிப்பிடிக்க முடியவில்லை. இவரது பெயர் மனூற் பொல். சூடான் நாட்டைச் சேர்ந்தவர். ஆனாலும் இவர் விளையாடுவது அமெரிக்காவுக்காக. அமெரிக்க நேஷனல் பாஸ்கற்போல் அசோசியேசனுக்காக விளையாடுகிறார்.

உயரம்: 2.30 மீட்டர். அதாவது 7 அடி 6 3/4 அங்குலம். முதன் முதலில் விளையாட ஆரம்பித்தது 1985ல். இவர் பிறந்தது 16 அக்டோபர் 1962ல். எனவே இப்போது 35 வயது. விளையாட்டு உபயத்தில் நெடு நெடு புத்திளமையுடன் பந்துகளை பதம்பார்த்துக் கொண்டிருக்கிறார். வாழ்க, வளர்க. வேண்டாம்..... வாழ்க ஓ.கே. இனி வளர மட்டும் வேண்டாம்.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657




ஐஸ்வர்யாராய்

## 'மேட் இன் இண்டியா'



அலிஷா

→ உலக அழகி ஐஸ்வர்யாராய் முதல் இலட்சோப இலட்சம் ரசிகைகளும், ரசிகர்களும் பலாப்பழத்தில் மொய்த்த ஈக்கள் மாதிரி மயங்கிக் கிடக்கிறார்கள். எல்லாம் அலிஷாவின் பாடல்கள் செய்யும் மயாம்தான். கடந்த வருட இறுதியில் கொழும்புக்கும் வந்து கலக்கிவிட்டுப் போனார் அலிஷா.

போதை கலந்த குரல்வளம், பாடல்களை பாடியபடியே ரசிகர்களை சுண்டியிழுக்கும் வசீகரமான புன்னகை, வலைவீசும் கண்கள், கட்டான உடல் என்று எக்கச்சக்கமான சாதகங்கள் இருக்கின்றன அலிஷாவிடம்.

ஹிந்தியில் திரையிசைப் பாடல்களையும் அலிஷா பாடியிருக்கிறார். எனினும் திரை இசைப் பாடல்களை விட அலிஷாவின் தனிப் பாடல்களுக்குத்தான் அட்டகாசமான வரவேற்பு. கொஞ்சம் இசை, கொஞ்சம் நடனம், கொல்லும் இளமை, நெஞ்சைக் கிள்ளும் பாடல் என்று தனியாக தயாரிக்கப்படும் பாடல் கசட்டுக்களை 'ஆல்பம்' என்று அழைப்பார்கள். ஆல்பங்கள் வீடியோவில் மட்டுமல்லாமல் ஓடியோவிலும் தயாரிக்கப்படும்.

தமிழிலும் சுரேஸ் பீட்டர் பாடிய 'மின்னல்', ஸ்ரீவித்தியா பாடிய 'காதல் முதல் காதல்வரை' என்று பல ஆல்பங்கள் வெளிவந்துள்ளன. பாபா சேகல் பாடிய ஆல்பங்கள்தான் இந்தியாவில் அதிகம் விற்பனையாகின. பாபா சேகலைத் தூக்கிச் சாப்பிட்டுவிட்டு விட்டார் அலிஷா.

'மேட் இன் இண்டியா' என்ற பெயரில் அலிஷா பாடி வெளியான ஆல்பம் முதல் வெளியீட்டில் நாலரை இலட்சம் விற்பனையானது. சூட்டோடு சூடாக மேலும் பத்து இலட்சம் ஆல்பங்களுக்கு ஓடர் குவிந்தது. புகழேணியின் உச்சத்தில் அமர்க்களமாக அமர்ந்திருக்கிறார் அலிஷா.


இந்தியாவிலேயே அதிகம் விற்பனையான 'ஆல்பம்' என்று சாதனை படைத்திருக்கிறது அலிஷாவின் 'மேட் இன் இண்டியா'.

'மேட் இன் இண்டியா' என்று அலிஷா பாடிய பாடலும் வெகுபிரசித்தம். அடிக்கடி தம்நாட்டு தொலைக்காட்சிகளிலும் பார்த்தும் கேட்டும் கொண்டிருக்கிறோம்.

கொழும்பு வந்திருந்தபோது அலிஷா 'மேட் இன் இண்டியா' பாடி ஆட, அரங்கமே அதிர்ந்தது. மறக்கமுடியாது.

அலிஷா பொப் இசை உலகின் தங்கச் சுரங்கம்.

## விலை உயர் விருது



விருதுகளில் உயர்ந்த விருதுகள் பல இருக்கலாம். உதாரணமாக நோபல் பரிசு, ஒஸ்கார் விருது என்று பட்டியல் நீளும். அவ்வாறாக பல விருதுகள் இருந்தாலும், இது வரை காலத்தில் விலைகூடிய விருதுதான் படத்தில் இருக்கிறது. இந்த விருதின் பெயர் 'விக்ரோறியா குறொஸ்.' ↑ முதலாம் உலக யுத்தத்தில் தீரச்செயல் புரிந்த பிரிட்டிஷ் வீரரான இரண்டாம் லெப்டினன்ட் வில்லியம் றொடென் மூர்ஹவுஸ் என்பவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. செப்டம்பர் 15ம் திகதி 1990ல் இந்த விருதை றோயல் எயார் ஃபோர்ஸ் அருங்காட்சியகம் விலைக்கு வாங்கியது. வில்லியம் குடும்பத்தினருக்கு கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு தெரியுமா? ஒரு இலட்சத்து 28 ஆயிரத்தி ஐநூறு பவுன்கள். தம்நாட்டு மதிப்பில் 1 கோடியே 17 இலட்சத்து 64 ஆயிரத்து 500 ரூபாய்கள். இதுவரை காலத்தில் அதிக விலைக்கு விற்பனையான விருது இதுதான். இது ஒரு உலக சாதனை.

வாரமலர் தினமுரசு

# வெள்ளிப் பனி மீதில்



← உலகில் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்ட நிலையில் வாழும் ஒருவகை ஊனுண்ணி விலங்கு வகைதான் இது. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய இதன் பெயர்-தென்துருவக் கடல் நாய்.

இது மாமிச உண்ணியாகும். தென்துருவத்தில் அடர்ந்த உறை பனி திட்டுக்களில் வழுக்கியும் உருண்டோடியும் விளையாடும். இவைகளின் கால்கள் (1சோடி) துடுப்புக்கள் போன்று தொழிற்படும். நீரில் நீந்துவதற்கு பயன்படும்.

இதன் விஞ்ஞானப் பெயர் லொபொஸன் கார்சினோபாகுஸ். அன்ராார்க்ரிக்காவில் (தென்துருவம்) பனிபடர்ந்த பகுதிகளில் ஜாலியாக ஊர்ந்து திரிவதில் கடல்நாய்களுக்கு தனிச்சுகம். கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி கடல் நாய்கள் தற்போது உயிர் வாழ்கின்றன என்று கணிப்பிடப்பட்டுள்ளது. கின்னஸிலும் இந்த சாதனை விபரம் இடம்பெற்றுள்ளது.

'வெள்ளிப் பனிமீது உலாவருவோம், நீலக்கடல்மீதும் தாவித்திரிவோம்.' என்று வாய் இருந்தால் இவையும் பாடுமோ?!



படிப்பகம்